மலைகளை வென்ற

# மானுடம்

මලෙයිගලෛ වෙන්ඩ්‍ර මානුඩම්





தோழர் நாராயணன் மற்றும் அவரது துணைவியார்

# செயலூக்கமற்ற புத்திஜீவிகட்கு

ஹனினா ஃபெனான்டெZ
[JANINA FERNANDEZ]
கொஸ்ற்ற றீக்கா

தமிழில் -சிவசேகரம்

புத்தகங்களிலான மதிலொன்றின் நடுவே
வன்முறைச் சொற்களஞ்சியமொன்றை
நிர்மாணித்தபடி
கோட்பாட்டாளர்கள்
தமது நேர்த்தியான விசாரணைகளை
வகுக்கின்றனர்;
ஆட்சிக் கவிழ்ப்பு.
புரட்சி.
விடுதலை.
வெளியில் அடியெடுத்து வைக்காமலே

*மரங்கள் ஓய்வை விரும்பினாலும்*
*காற்று விடுவதில்லை*

*கரைகள் ஓய்வை விரும்பினாலும்*
*அலைகள் விடுவதில்லை*

*ஓடி ஓடி ஒழிந்தாலும்*
*வாழ்க்கை விடுவதில்லை*

மலைகளை வென்ற

# மானுடம்

**தோழர் நாராயணன் நினைவு மலர்**



**මලෙයිගලෛ වෙන්ඩ්‍රු මානුඩම්**

**MALAIGALAI VENDRA MANUDAM**

மலைகளை வென்ற
# மானுடம்

தோழர் நாராயணன் நினைவு மலர்


මලෙයිගලෛ වෙන්ඩ්‍ර මානුඩම්
MALAIGALAI VENDRA MANUDAM

வெளியீடு
**நினைவுக்குழு**
மைலாடி கிராமம்
ரொசல்ல

புகைப்படப்பிடிப்பும்
முன் அட்டை வடிவமைப்பும்
**இரா. நாகராஜா**

கணிணி வடிவமைப்பு,
அச்சுப்பதிப்பு
**அம்ருதா எட்வர்டைசிங்**
**இல-39, ஸ்டபொட் வீதி**
**இராகலை - ஹல்கரனோயா**

**MALAIGALAI VENDRA MANUDAM**

Published by:
COMRADE NARAYANAN
COMMEMORATION COMMITTE
Gilston Farm
Rozella

Photography and
Cover Page Designing
R.NAGARAJAH

Typesetting and Printing
**AMRUTHA ADVERTISING**
No-39, Stafford Road,
Ragala - Halgranoya


## உள்ளடக்கம்


1. இந்த தாத்தாவும் சொர்க்கமும் கைலாசமும் 03
2. ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி 05
3. மானிடங்கள் 11
4. நினைவுப் பகிர்வு 14
5. ஒரு வரலாற்று சுவடு 16
6. நீங்கள் 19
7. ආදරණීය මාමාට මාගේ උපහාරයයි 20
8. இங்கிவரை யான் பெறவே என்னதவம் செய்துவிட்டேன் 21
9. நிகரற்றவருக்கு நினைவஞ்சலி 23
10. ஐயா என்கிற கொள்கையாளன் 24
11. Truthful Soul 26
12. சத்தியமான ஆத்மா 27
13. மலைகளை வென்ற மானுடம் 28
14. புரட்சியாளர்கள் சரணடைவதில்லை 33
15. உன் மரண செய்தியின்........ 35
16. தொழிலாளிவர்க்க மனிதாபிமானி தோழர் நாராயணன் 37
17. நாராயணன் ஐயாவின் உணர்வும் மறைவும் 47
18. பெரியப்பாவிற்காக 48
19. ஐயாவிற்கு ஒரு மடல் 49
20. சரஸ்வதி சபதம் 51
21. அண்ணா எங்கள் ஆசான் 52
22. பன்மை கொள்வோம் பாடிரே 53
23. தந்தையின் பங்கு 57
24. சமூக மாற்றத்திற்கான பண்பாட்டு அடையாளங்களை நோக்கி 63
25. மனிதனாய் 66
26. மலையக மக்களுக்கான ஆசிரியத்துவம் 70
27. தோழா 78
28. சீர்திருத்த சிந்தனையிலிருந்து வர்க விடுதலை நோக்கிய பயணத்தில் தோழர் நாராயணன் 79
29. மரணத்தை வென்றவர்கள் 81
30. ஆரோக்கியமான உணவு பழக்கத்தை கட்டியெழுப்புவதன் அவசியம் 83
31. படைப்பின் சாரம் 88
32. வடக்கிலிருந்து வரும் மடல் 89
33. உன் வழியில் 93
34. மலையக மக்கள் ஒரு தேசிய இனம் 94
35. நாராயண காவியம் 98
36. நன்றியுரை 100

# இந்த தாத்தாவும் அந்த சுவர்க்கமும், கைலாசமும்

இந்தத் தாத்தாவுக்கு
வாய்க்கரிசி இடோம்
நெய்ப்பந்தம் பிடியோம்
சுவர்க்கம் சேர்
கையிலாசம் சேரேன்
சொல்லோம்
இந்தத் தாத்தாவுக்கு
வேண்டாம்
அந்த சுவர்க்கமும்
அந்த கையிலாசமும்

எத்தனையோ தாத்தாமாருக்கும்
பாட்டிமாருக்கும்
சுவர்க்கம் சேர்
கையிலாசம் சேரேன்
சுலோகமிட்டவர்
இந்தத் தாத்தா
உயிருடன் இருந்த வரை
ஏகாதிகத்தியம் முதலாளித்துவம்
நிலபிரபுத்துவம்
இனவாதம் சாதிவெறி
பெண்ணடிமை மத அடிப்படைவாதமென்ற
தாத்தாமாருக்கும் பாட்டிமாருக்கம்
நெய்ப்பந்தம் பிடித்தவர்
வாய்க்கரிசி இட்டவர்
சுவர்க்கம் சேர்
கையிலாசம் சேரேன்
சுலோகமிட்டவர்
இவர் காலமானதோ
உண்மை
உண்மையாகவே
காலமாகிய பின்னரும்

வேண்டுமிவர் - எமக்கு
மலைகளை வென்று
மானுடம் வாழ
இந்தத் தாத்தா
எங்களுக்கு வேண்டும்
'இந்தியன் தாத்தாவல்ல'
இவர் மலையகத்தாத்தா
ஆவியாகவெனினும்
மலைகளில் இருக்க வேண்டும்
மலைகளை வென்ற மானுடமாய் !

இந்த மலைகளே
இவரின் சுவர்க்கமும்
கையிலாசமும்
இவற்றைக் காக்க
எதிரிகளுக்கு
நெய்ப்பந்தம் காட்டி
வாய்க்கரிசி இட்டு
அவர்களை சுவர்க்கம் சேர்
கையிலாசம் சேரென
சுலோகமிட்ட
இந்தத் தாத்தாவுக்கு
அந்த சுவர்க்கமும்
அந்த கையிலாசமும்
பொருத்தமே இல்லை

இவருக்கு
நெய்ப்பந்தம் பிடியோம்
வாய்க்கரிசி இடோம்
அந்த சுவர்க்கத்திற்கும்
கையிலாசத்திற்கும்
அனுப்போம்.

✍
மிருதுளா

# ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி

## மலையகத் தமிழ் மக்களை முன்னிறுத்தி சில கருத்துக்கள்

[மலையக மக்களின் சமூகமேம்பாட்டுக்காக உழைத்த தோழர் நாரயணன் நினைவாக]

சமுகங்கள் பலவாறாகப் பிளவு பட்டுள்ளன எனினும் உற்பத்தி உறவுகள் சார்ந்த பிளவே அடிப்படையானது.முலதனத்தின் விருத்தி முதலாளியத்தை உலகமெல்லாம் பரப்பியது அதன் போக்கில் முதலாளியம் ஏகாதிபத்திய மாகவும் ஏக போக முதலாளியமாகவும் வளர்ந்துள்ளது. அந்த வளர்ச்சி முதலாளியம் பின் தங்கியிருந்த நாடுகளில் இருந்து வந்த பழைய உற்பத்தி உறவு முறைகளை முற்றாக அழிக்கவில்லை. மலிவான உழைப்பு முலவளங்களைச் சுரண்டுவது போன்ற தேவைகளுக்கு ஏற்ப பழைய சமுதாய அமைப்பு மேலும் தொடருவதற்கு அது இடமளித்தது. ஏகாதிபத்தியம் நாடுகளில் புதிய சுரண்டற்காரர்களை உருவாக்கியது நேரடியாக நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்துவது கடினமாவதற்கு இந்தப் புதிய சுரண்டும் வர்க்கத்தின் வருகையும் காரணமானது.

முடிவில் நேரடியான ஏகாதிபத்திய ஆட்சி அதாவது கொலனித்துவம் இயலாது போனதும் பின்னர் ஏகாதிபத்தியமும் அதற்குக் கீழ்ப்பட்ட நாடுகளில் உள்ள புதிய சுரண்டும் வர்க்கமும் தமக்குள் சமரசம் செய்து கொண்டன. அதன் முலம் உழைப்பினதும் வளங்களதும் சுரண்டல் தொடருகிறது. சுரண்டலைப் பங்கிடுவதில் உள்ள முரண்பாடுகளும் தொடர்கின்றன என்றாலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு வளருகிறது. அந்த எதிர்ப்பு உள்ளூர்ச் சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராகவும் திரும்புகிறது. அதை திசை திருப்புவதில் உள்ளூர்ச் சுரண்டும் வர்க்கங்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் பொதுத் தேவை உள்ளது.

முதலாளியம் வளர்ச்சி பெற்ற முன்னேறிய முதலாளியநாடுகளில் இல்லாத விதமாகக் குறுகிய தேசியவாதம் பிரதேச வாதம் மத வேறுபாடுகள் சாதி உணர்வு போன்றவை மக்களைப் பிளவுபடுத்தும் முறையில் வளர்த்துவிடப் படுகின்றன. ஒரு காலத்தில் அந்நிய ஆதிகத்கத்தை எதிர்த்து இயங்கிய தேசியச் சிந்தனைகள் பலவும் இப்போது அந்நிய ஆதிகத்துடன் சமரசம்

செய்கின்றன. பிற சமுகங்களை நசுக்கவும் ஏகாதிபத்திய எதிர்ப்பைப் பலவீனப்படுத்தவும் பயன்படுகின்றன. ஒடுக்குமுறைகளுக்கு உட்படுகின்ற சமூகங்களை கூட ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்த இயலுமாகிறது. இதைப்பற்றி விரிவாகச் இங்கு விளக்குவது என்னுடைய நோக்கமல்ல. எனினும் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்கள் பல்வேறு விதங்களில் ஒடுக்கு முறைகளுக்கு உட்படுகிறார்கள். அதை விட இந்த விதமான ஒடுக்கு முறைகள் தொடருவது உள்ளூர் ஆளும் அதிகார வர்க்கங்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் தேவையானது என்பதையும் சுட்டிகாட்ட வேண்டும். இவற்றை விளங்கிக் கொள்ளாமல் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகத் தேவை எதைப்பற்றியும் சரிவர ஆராய இயலாது. நீண்ட காலமாக இக் கட்டுரை இலங்கையில் ஒடுக்கப்பட்ட சமுகத்தினருக்கும் குறிப்பாக இனம், வர்க்கம் என்ற அடிப்படைகளில் கடும் ஒடுக்குமுறைக்கு முகங்கொடுத்து வந்துள்ள மலையகத் தமிழ் மக்களுக்குத் தேவையான கல்வி என்ன என்பதைப் பற்றியதாகும். எனினும் அதன் பொதுவான நோக்கம் ஒடுக்கப்பட்டுக் கீழ் நிலையில் உள்ள மக்களின் உயர்வுக்கு எத்தகைய கல்வியும் கல்வி மான்களும் தேவை என்பதைப் பற்றியதாகும்.

**கல்வியின் தேவை**

கல்விக்கு தன்னளவிலேயே பெறுமதி உண்டு என்று சொல்லப்படுகிறது. உண்மையில் அப்பெறுமதி ஒரு சமூகம் அதற்கு வழங்கும் பெறுமதியாகும். அக்கல்வியைக் கொண்டு ஒருவர் அச் சமுகத்திற்கும் பயன்படக்கூடிய எதை எதைச் செய்ய முடியும் என்பதே கல்வியின் பெறுமதியாகிறது. வர்க்கங்களாகவும் சாதிகளாகவும் நகரமும் கிராமமும் என்றும் மொழி மதம் என்றும் ஆண் பெண் என்றும் சமூகம் பிரிவுடையதாக இருக்கின்றது. இந்தப் பிரிவினைகள் அவரவர் சமூகத்தில் எதையெதை எங்கே செய்யலாம் என்று தீர்மானிக்கின்றன. தனிமனிதர்களாக ஒரு சிலர் அக்கட்டுப்பாடுகளை மீறலாம். ஆனால் ஒரு முழுச் சமுகப்பிரிவால் முடியாது. அதன் கணிசமான ஒரு பகுதியாலும் முடியாது. ஒட்டுமொத்தமான சமூக அமைப்பு அப்படியான கட்டுபாடுக்களைக் கண்ணுக்கு தெரியவும் கண்ணுக்கு தெரியாமலும் நடைமுறைப்படுத்துகிறது.

ஒரு தோட்ட தொழிலாளியின் மகள் படித்து ஒரு வைத்தியராவதற்குச்

சட்டத்தில் ஒரு தடையும் இல்லை. ஆனால் நடைமுறையில் அது எவ்வளவு தூரம் இயலுமாகின்றது? பலவாறான தடைகளையும் மீறி ஒரு சிலர் உயர் கல்வி பெறலாம். உயர் பதவிகளிலும் அவர்கள் அமரலாம். அதனால் எந்த தோட்ட தொழிலாளியின் மகளுக்கும் அந்த வாய்ப்பு உண்டு என்று சொல்ல இயலுமா? நகரத்தில் வாழுகிற படித்த வசதி படைத்த குடும்பத்து பிள்ளைகற்கு இருக்கிற வாய்ப்பு தோட்டத்திலோ கிராமத்திலோ உள்ள ஏழை குடும்பத்து பிள்ளைக்கும் உண்டா? இல்லை என்று அறிவோம்.

இந்த விதமான கல்வி மறுப்பு எல்லாச் சமூகங்களிலும் இருந்துள்ளது. எவருக்கு எந்த விதமான கல்வி, எவ்வளவு கல்வி என்ற விதமான கட்டுப்பாடுகளும் இருந்துள்ளன. இலங்கையில் இலவசக்கல்வி வந்ததன் மூலமும் தமிழ் மொழி கல்வி மூலமும் இந்த தடைகளில் ஒரு பகுதி விலகியது. ஆனால் பாகுபாடுகள் மீண்டும் புகுந்து விட்டன. இன்று இலவசக் கல்வி சிதைக்கப்பட்டு வருகின்றது. ஆங்கில கல்வி இல்லாமல் உயர் கல்வியோ அல்லது நல்ல வேலைவாய்ப்புக்களையோ நினைத்து பார்க்க இயலாமல் வருகின்றது.

இலங்கையிலும் பல மூன்றாம் உலக நாடுகளிலும் வசதி படைத்த, நடுத்தர வர்க்கத்தினர் நல்ல உத்தியோகங்களை தம் கையில் வைத்துக்கொள்ளவதற்காக திட்டமிட்ட முறையில் இலவசக்கல்விக்கு குழி பறிப்பதை நாம் காணலாம்.

அமெரிக்காவை விட்டால் முனனேறிய மேலை முதலாளித்துவ நாடுகளில் எல்லாம் இலவசக்கல்வியை 1990 ஆண்டுகள் வரை வலுவாக இருந்தது. இப்போது அரசாங்கம் இலவசக்கல்விக்கு பதிலாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடன் வழங்குகின்றது. எனினும் கல்வி வாய்புக்களில் மூன்றாம் உலக ஏற்றத்தாழ்வுகள் முன்னேறிய முதலாளிய நாடுகளின் நிலைமையிலும் மோசமானது.

இலங்கையில் இந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளை பேணுவதற்கு வர்க்கமும் வடக்கில் இன்னமும் சாதியும் மட்டுமின்றி இனவேறுபாடும் பங்களிக்கின்றது.

சிங்கள பேரினவாதம் 1970 களில் இருந்து திட்டமுறையில் வடக்கின் தமிழ் மக்களின் உயர்கல்வி வாய்ப்புக்களுக்கு குழிப்பறித்து வந்துள்ளது. என்றாலும் பேரினவாதம் தொடக்கிவைத்த போரின் பின்னணியில் தமிழ் மக்களின் புலப்பெயர்வு, இடப்பெயர்வு போராலான அழிவுகளும் தமிழ் மக்களின் கல்வி நிலையில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. வசதியான சில பாடசாலைகள் தமது வளங்களை தக்க வைத்துக்கொண்டாலும் பொதுவான நிலைமைகள் மிக மோசமாகவே உள்ளன. மலையக கல்வி வளர்ச்சி மிக மந்த வேகத்திலேயே வளர்ச்சி கண்டுள்ளது. மலையகத்தை பொறுத்த வரையில் தோட்ட தொழிலாளர்களுக்கு கல்வி தேவையில்லை என்ற அனுகுமுறை கொலனிய எசமானர்களிடம் மட்டுமல்லாது இலங்கையில் இலவசக்கல்வியை அறிமுகப்படுத்திய சீர்திருத்த சிந்தனையாளர்களுக்கும் இருக்கவில்லை எனவே கல்வி எதற்காக என்ற கேள்விக்கு மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு எழுத படிக்க தெரிவதுகூட அதிக பட்சம் என்கின்ற மனப்பான்மையே கல்விக் கொள்கை வகுத்தவர்களிடம் இருந்தது.

இன்றும் கூட கல்வியின் நோக்கம் உயர் பதவி உத்தியோகங்கள் என்ற நோக்கம் சாதாரண மக்கள் மத்தியில் மட்டுமில்லாமல் கல்வியாளர்களிடமும் காணப்படுகின்றது. அதன் காரணமாகவே ஆங்கில கல்வி, தகவல் தொழிநுட்பம், கணணிக்கல்வி என்பன பரிந்துரைக்கப்படுகின்றன. இவையெல்லாம். ஒரு தேசிய பொருளாதார நோக்கில் இல்லாமல் ஒரு நுற்றாண்டுக்கு முதல் அரசாங்க உத்தியோகத்திற்காக எப்படிக்கல்வி கற்றார்களோ அதே நோக்கில் தான் அந்நிய எசமானர்களுடைய முகவர்களுக்காக ஊழியம் செய்யுமாறு கற்பிக்கப்படுகின்றார்கள்.

மலையக சிறார்களுக்கும இதே விதமாக போதனைகள் சில அறிஞர்களால் வழங்கப்படுவதுதான் வேதனையானதும், வேடிக்கையானதும் ஆகும்.

## மலையக மக்களுக்கான கல்வி.

மலையகத் தமிழரின் கல்வித்தேவைகளில் அவர்கள் தங்களுடைய வாழ்க்கைச் சூழலை விளங்கிக்கொள்வது மிக முக்கியமானது. தங்களது சமூக உயர்விற்கு எவையெல்லாம் தேவை என்பதை அவர்கள் தனி மனிதர்களாகவும் சமூகங்களாகவும் அறியும் தேவையுள்ளது. ஏனெனில் அந்த அறிவு இல்லாமல் அவர்களால் எதை எதற்காக எப்படி போராடி வெல்லலாம் என்று முடிவு செய்ய இயலாமல் போகும்.

மலையகத்தின் அடிப்படைக்கல்வி தரத்தை உயர்த்துவதானால் பாடசாலைகள் மலையகத்தின் சூழலுக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும். இடைநிலைக் கல்விக்காக மாணவர்கள் போகவேண்டிய தொலைவுகளும் பட வேண்டிய சிரமங்களும் குறைக்கப்படவேண்டும். நகரத்து பாடசாலைகளும் ஆசிரிய விகிதத்தை விட குறைந்த தொகையான மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் பாடசாலைகள் நடத்தப்படவேண்டும்.

மலையகத்தில் இருந்து ஆசிரியர்கள், வைத்தியர்கள் பெருளியலாளர்களாக, சட்டக்கலைஞர்கள், சட்ட வல்லுனர்கள் போன்றோர் உருவாக வேண்டும். அப்படி அவர்கள் உருவாகுவதன் நோக்கம் மலையக சூழலில் இருந்து தப்பியோடுவது மட்டுமே என்றால் அவர்கள் பெற்ற உயர்கல்வியின் பயன் என்ன. மலையகத்தில் இருந்து உருவாகக்கூடிய கல்விமான்களும் தொழில் வல்லுனர்களும் மலையகத்தின் தேவைகளுக்கு முகம் கொடுக்க கூடிய விதமான நிபுணர்களாக வேண்டுமென்றால் அவர்களுக்கு இளம் பருவத்தில் இருந்தே சமூகம் பற்றிய அறிவு ஊட்டப்படவேண்டும். அதுபோலவே மலையகத்தின் தேவைகளுக்கு முகம் கொடுக்ககூடிய மருத்துவர்கள் தொழிலுட்பவியலாளர்கள் போன்றவர்கள் உருவாக்கப்படவேண்டும். அவர்களை உருவாக்குவதற்கான அமைப்புக்களாக மலையத்திற்கான பல்கழைக்கழகமும் தொழிநுட்பகல்லூரிகளும் வேண்டும். அவை தமது பாடத்திட்டங்களையும் அதன் பொரும்பான்மையான மக்களையும் மலையகத்தை மையப்படுத்தியதா அமைக்க வேண்டும்.

மலையக சமூகம் தனது கல்வித்தரத்தில் உயர்வெய்தும் வரை மலையக மக்களின் வாழ்க்கை தரம் உயரும் வரை மலையகக்கல்வி மலையக மக்களின் இருப்பும் தேவையும் சார்ந்ததாகவே ஒவ்வொரு மட்டத்திலும் அமைய வேண்டும். அத்தகைய உயர்விற்கு தடையாக நிற்கக்கூடிய பண்பாட்டு சீரழிவு, சமூக சீரழிவு செயற்பாடுகள் மக்களால் நிராகரிக்கப்படவேண்டும். இவற்றை அரசாங்கம் மனம் விரும்பி மேற்கொள்ளாது. மலையக முதலாளிமார்களுக்கோ தொழிற்சங்க அரசியல் தலைமைகளே அதை பற்றிய அக்கறை காட்டாது. இந்நிலையை மக்கள் இயக்கங்கள் மூலமும் சரியான அரசியல் சிந்தனையால் வழிநடத்தப்பட்ட போராட்டங்கள் மூலமே மாற்ற இயலும்.

மலையகத்தில் இருந்து ஒரு சட்ட மேதையோ, உலக புகழ்பெற்ற மருத்துவரோ, பெரிய விஞ்ஞானி எவருமோ உருவாகலாம். அதைப்பற்றி மலையக மக்கள் பெருமைப்படுவதானால் அவர்களது அறிவும் ஆற்றலும் மலையக மக்களுக்கும் இந்த நாட்டின் மக்களுக்கும் முதலில் பயன்படவேண்டும். அப்படிப்பட்டவர்களாக மலையக கல்வி மான்கள் அமையாத பட்சத்தில் அவர்களை மெச்ச முடியுமா? மலையகத்திற் பிறந்து வளர்ந்து மக்களின் இன்னல்களை அறிந்து தம்மை உயர்த்திக்கொள்ள வேண்டி விலகிச்செல்லாமல் மக்களுக்கு பயன்படுகின்ற பணிசெய்வோரை மெச்சுவதற்கு மலையகம் தன்னை பழக்கிக்கொள்ளுவது புதிய கல்வி பண்பாட்டை ஊக்குவிக்க மிக உதவும்.

**சி. சிவசேகரம்**

மனிதனை ஒவ்வொரு வினாடியும்
மகிழ்ச்சியுடையவனாக செய்யக்கூடிய
சித்தாந்தம் செல்வ செழிப்பு, சகோதரத்துவம்
நோக்கி அவனை கொண்டுச்செல்லக்கூடிய
சித்தாந்தமே என் சித்தம்.

– பகத் சிங் –

# மானிடங்கள்

பதவிக் கனவினிலும்
கிடைத்தக் கதிரைச் சுகத்திலும்
மனிதம் இழந்து மண்ணில்
மந்தைகள் ஆகிப்போனார்

\|/ \|/

நக்கிப் பிழைப்பதிலே
நாய்களைத் தோற்கடிப்பார்
மானம் இழந்து நாளும்
மண்டியிட்டுக் கிடப்பார்

\|/ \|/

அறிவைச் சொல்பவரின்
அழிவுக்கு குழிப்பறிப்பார்
சுயநலச் சாக்கடைக்கு
ஏழைச் சமூகத்தை ஈடுவைப்பார்

\|/ \|/

மத முழக்கமிட்டே
மண்ணைச் சுரண்டுவார்
பகுத்தறிவைக் கண்டால்
பக்தி போச்சுதென்பார்

\|/ \|/

சாமிகள் பேரைச் சொல்லி
காமச் சாமிகளாக பெருச்சாலிகள்
ஊரெங்கும் உலாவிடுதே
உண்மை அறிந்தோரே கவனம்

வாசிப்பை தூக்கிலிட்டு
வாழுமிந்த அறிவாளர்
சமத்துவங்கள் நிலைத்தோங்க
சற்றுமே இடம் வழங்கார்

\|/ \|/

நாம் உணர்வு மறுத்து
ஊமைச் சனங்களை உருவாக்கி
கொடுமைக்கு பணி செய்யும்
குரங்கு உலகம் படைத்திடுவார்

\|/ \|/

நிமிர்வோர் நெஞ்சம் பிளக்க
அரசியற் கூலிகளாகி வேட்டை
ஆசிரியர்களும் இங்கே
"ஆசி கூறும் சிறியவரானர்

\|/ \|/

கொடும் எதிர்ப்பும் சுமையிடையே
உண்மை வழி செல்லும் மானிடரே
துவளாதீர் எதிர்கொள்வீர்
முன்செல்வீர்
புதுயுகம் மலரும் புவியாளும்
உலகம் வாழும் !

பா. மகேந்திரன்
காவத்தை

அன்பின் ஐயா,

நீங்கள் எங்கள் அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயரில் கொண்டதேனோ? என்ன எழுதுவதென்றே தெரியவில்லை ஏனென்றால் உங்கள் இழப்பின் அதிர்விலிருந்து இன்னும் நாங்கள் நால்வரும் மீளவில்லை

ஐயா, உங்களுடன் வாழ்ந்த காலங்கள் ஒரு அற்புதமான புத்தகத்தின் ஒவ்வொரு பக்கங்களும் எவ்வளவு சுவாரசியமாக இருக்குமோ அது போலத்தான் உங்களுடன் வாழ்ந்த காலங்கள் விலைமதிக்க முடியாதவை. உங்கள் ஞாபகத்தின் பக்கங்கள் அனைத்தும் எம்மனங்களில் மௌனம் செய்யப்பட்டுள்ளது. அவற்றை ஒரு சில ஏடுகளில் எழுதிவிட முடியாது.

எம்முடைய தாய் ஒரு தசாப்த காலத்திற்கு மேலதிகமாக நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் கூட அவர் வாழ்ந்த காலம் வரை அவரின் மனம் நோகாமல் அவரைப்பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அது மட்டுமில்லாது, எனது அம்மாவால் எங்களது தேவைகளை நிறைவேற்றமுடியாத சந்தர்ப்பங்களில் எங்களது அனைத்துத் தேவைகளையும் எனது தாயின் ஸ்தானத்திலிருந்து பூர்த்திசெய்துள்ளீர்கள். எங்களுடன் தந்தையாக இருந்த காலங்களை விட தாயாக இருந்ததே கூடுதல்.

ஐயா, நீங்கள் யாருடைய மனமும் நோகாமல் நடந்துக்கொள்ளும் ஒரு நேர்மையான மனிதர் நான் சிறுவயதில் படிப்பதில் குறைவு ஆனால் அதற்காக ஒரு நாளும் அடித்ததோ, ஏசியதோ கிடையாது. அந்த சந்தர்ப்பங்களில் "உங்களால் முடியும் மனதை தளரவிடாதீர்கள்" என்று உற்சாகப்படுத்துவீர்கள். என்னை விட்டு சொற்ப காலத்தில் சென்றுவிடுவீர்கள் என்றா ஐயா, என்மீது அளவு கடந்த அன்பு வைத்தீர்கள்?

"அம்மா" என்றழைக்கும் குரல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது. "நீ" என்று கூட இதுவரை காலமும் என்னை பேசியதில்லையே அந்த காலங்கள் இனித்திரும்பவராதோ ஐயா...!

எதிர்பாராது ஏற்பட்ட பொருளாதார பின்னடைவின் காரணமாக மிகவும் கஸ்டப்பட்டீர்கள். அந்த சந்தர்ப்பங்களிலும் கூட உங்கள் மனந்தளராது

எங்கள் அனைவரையும் நன்றாக படிக்கவைத்தீர்கள் எங்கள் நலனில் அக்கறை காட்டிய உங்களுக்கு ஏனய்யா இந்த கொடிய நோய் வந்தது.

எந்தச்செயலையும் காலந்தாழ்த்தாது உடனுக்குடன் செய்யவேண்டும். என்று செயல்பட்டுள்ளீர்கள் அதனால்தான் அடிக்கடி சொல்லுவீர்கள், எங்கு சென்றாலும் 5 நிமிடத்திற்கு முன்னால் செல்லவேண்டும் என்று அதனால்தான் காலனவன் விரைவாக உங்களை கவர்ந்து சென்று விட்டானோ?

கடைசியாக கொழும்பிற்கு மருத்துவ பரிசோதனைக்கு ஆயத்தமாகி செல்வதற்கு முதல் நாள் கேட்டீர்கள் "என்னை விட்டு எப்படியம்மா இருப்பீர்கள்" என்று. உங்களுக்கு முன்னதாகவே தெரிந்து விட்டதா? எங்கள் அனைவரையும் கதறித்துடிக்க இடையில் விட்டுச்செல்வீர்கள் என்று.

நீங்கள் என்னைவிட்டு சென்றதாக கொள்ள முடியாது. ஏனெனில் உடல்மட்டுமே எங்களை விட்டுச் சென்றுள்ளது. உங்களது நல்ல சிந்தனைகளாலும், சுமையான நினைவுகளாலும் எங்களுடன் வாழ்ந்து கொண்டேயிருப்பீர்கள். உங்கள் எண்ணப்படியே நாங்கள் நால்வரும் நெறிபிறழாது நடப்போம். நீங்கள் "நான் எவ்வாறு வளரவேண்டும்" என்று ஆசைப்பட்டீர்களோ அதுபோல நிச்சயமாய் நான் வளருவேன். நாங்கள் நால்வரும் உயர்வுடன் வாழ்ந்து நீங்கள் வாழ்ந்த காலப்பகுதியை அர்த்தமுள்ளதாக்குவோம் என்று உறுதியுடன் கூறுகின்றேன்.

**காயத்ரி (மகள்)**

> எனக்கு எதிராக பலாத்காரம் புரியப்படுமாயின்
> அதற்கு எதிரான பலாத்காரம்
> என்னிடம் உருவாகும்
>
> – குருதிஸ் பழமொழி –

# நினைவுப்பகிர்வு

*“வரலாறு தானே உருவாவதில்லை*
*மாறாக படைக்கப்படுவது.*
*வரலாறு வேகமாக அசையும்போது*
*பெற்றோர்கள், படைப்பாளிகளாகவும்*
*வரலாறு மெதுவாக அசையும்போது*
*பிள்ளைகள், படைப்பாளிகளாக*
*இருப்பதும், மாறுவதும்*
*அதிசயங்கள் இல்லை.”*

குடும்ப நிறுவனத்தின் உருவாக்கம், அதன் முக்கியத்துவம் என்பன ஒவ்வொரு வரலாற்று காலக்கட்டத்திலும் இருக்கின்ற சமூக அமைப்பை பொறுத்து வேறுபடுகின்றது. இன்று நாம் பார்க்கும் குடும்ப நிறுவனங்கள். முதலாளித்துவம் அல்லது நிலப்பிரபுத்துவம் என்ற சமூகத்தை இயக்குவதற்கு உதவிப்புரிவதாக அமைகின்றன.

இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பும் இவ்வாறான குடும் நிறுவனங்களை பாதுகாப்பதற்காகவே இருக்கின்றன. இதில் மாற்றம் ஏற்பட பொதுவான சமூக மாற்றமும், பொதுவான சமூக மாற்றத்திற்கான குறிப்பான குடும்ப மாற்றங்களும் அவசியமாகின்றன.

அந்த வகையில் சமூக மாற்றத்திற்கான பாதையில் தான் இணைந்தது மட்டுமல்லாது தனது பிள்ளைகளையும் இப்பணியில் பங்குக்கொள்வதற்காக உருவாக்கியுள்ளார் என்பதை நினைக்கையில் பெருமிதம் கொள்ளத்தக்க செயலாக அமைகின்றது.

சமூக வேலைத்திட்டத்தில் இவருடன் இணைந்து வேலைசெய்யும் போது பல்வேறு அறிவுரைகள், வழிக்காட்டல்கள். நிதானமாக செயற்படல் போன்ற இன்னோரன்ன விடயங்களை எனக்கு கற்றுக்கொடுத்தவர்.

இவரது பெயர் நாராயணசாமி என்று கூறப்பட்டாலும், நான் இவரை ஐயா என்று அழைப்பதில் ஒரு அவா காரணம் தந்தையாய், சகோதரனாய், நண்பனாய், தோழனாய் என்னோடு பழகிய நாட்கள் என் நினைவை விட்டு அகல மறுக்கின்றன.

மனித உறவுகளில் நிலைத்திருப்பது தோழமை உணர்வுதான் என்பது எனது அனுபவத்தின் மூலம் பெற்றுக்கொண்டது. மனிதன் தான் இறந்த பின்னும் மண்ணில், என் மனதில் நிலைத்திருக்கின்றான் என்றால் அவன் சமூக மாற்றத்தில் பங்கெடுத்துள்ளான். தான் வாழும் பிரதேசம் அடிமைத்தனத்தில் இருந்து மாற வேண்டும் என்ற உயரிய இலட்சியத்துடன் போராடி இன்றும் எம் மத்தியில் நினைவுகளுடன் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார் ஐயா.

இவரது சமூக பணிகள் தொடரும். கூடிய சீக்கிரத்தில் ஐயா கண்ட கனவுகள் நிச்சயமாக நனவுகளாக மாறும். அப்பொழுதும் ஐயாவின் நினைவுகளுடன் எம் உறவுகள் தொடரும்.

**செ. விஜயகுமார்**
**இராகலை.**

உண்மைகள் முரட்டு பிடிவாதம் கொண்டவை.

- ஆங்கில பழமொழி -

# ஒரு வரலாற்று சுவடு

ஒரு விடிவின் பாதையில்
காலைக்கதிரவன்
கண்ணீருடன் வந்தான்
கலக்கம் தரும் செய்தியுடன்
அதிர்ச்சிக்கான
அழைப்பு மணி ஒலித்தது.
ஐயோ... என்ற
அலறலுடன்.

❋ ❋ ❋

ஒரு தேயிலைச் செடியின்
துளிர்விட்ட அரும்பு
பாசச்சோலையின்
பக்குவமாய் மலர்ந்த மலர்
உச்சிமலையில் என்றும்
ஒளி வீசிய விளக்கு
அடடா அவர் மனிதருள்
மாணிக்கம்

❋ ❋ ❋

மாற்றத்தைக்கான துடித்தது
அவர் மனம்
மலரிலும் மென்மையானது
அவர் குணம்
விடியலுக்காகவே விழித்திருந்தது
அந்த விழி
விடியும் முன்னே
உறங்கிப்போனது எங்கள்
விதி

பாராட்டுவது மட்டுமே
அவர் பாசை
அந்த பாசைக்காக எத்தனை
ஜீவன்கள் ஜிசை
அந்த கனிமொழி
தரிசனத்திற்காக எத்தனை
உயிர்கள் ஏங்கிக்கிடந்தது.

❋ ❋ ❋

உங்கள் பிரிவால் - ஒரு
சமூகத்தின் வரலாறு
சாய்ந்து விட்டது.
அண்ணா ...
நீ ஒரு சாக்கிரடஸ்
ஏதேன்சுக்கு மட்டுமல்ல
எமது கண்ணீருக்கும்
ஒளி பாய்ச்சியவன் நீ.

❋ ❋ ❋

நான் சொல்வேன்
நல்ல நண்பர்கள்
உங்களைப்போல்
இனி இந்த ஞாலத்தில்
பிறக்கபோவதில்லை
அறிவுச்சூரியனின்
வினாக்கதிர்களோ உங்களஸி
பிரிவாற்றாமையாலா
குளிர்ந்து போய்விட்டது.

விடியலே ...
ஏன் விடிந்தாய்
விடிவின் சொந்தக்காரன்
எம்மை விட்டு சென்ற கணத்திலா
நீ விடிய வேண்டும்.
மலையே ... ஏன் சுடுகின்றாய்
குளிரின் நாயகனின்
பிரிவு உண்ணையும்
வாட்டி விட்டதா

✵ ✵ ✵

தென்றலே நீ ஏன் வந்தாய்
மென்மை அர்த்தம்
மெல்லென மறைந்த போதா
நீ வரவேண்டும்.
காலமே ஏன் சுடுகின்றாய் - எங்கள்
கலங்கரை விளக்கு
அணைந்த போதா
நீ வரவேண்டும்

கல்வியே
குன்றிலிட்ட தீபமாயஸி
குதூகலித்து வந்த உன்
பிரகாசமெங்கே
மங்கிவிட்டதா
மாண்டு விட்டதா
காய்ந்து விட்டதா
கருகி விட்டதா
கடவுளைத்தேடி
கணதூரம் சென்று விட்டதா

✍ ஆ. செந்தில்குமார்



தனது மனைவி, பிள்ளைகளுடன் தோழர் நாராயணன்



தனது பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடன் தோழர் நாராயணன்

# நீங்கள்

நீங்கள் மறைந்தீர்கள் நீங்காத நினைவுகளை தந்து விட்டு
நீங்காத நிலையான இடத்தை இதயத்தில் தூவிவிட்டு
நீங்கள் அன்பின் இருப்பிடம்
நீங்கள் பண்பின் பிறப்பிடம்
நீங்கள் இனியவர் எளியவர்
நீங்கள் இதமான இதயத்திற்குரியவர்
நீங்கள் பழகியதில் நாங்கள் பண்பட்டோம்
நீங்கள் பேசியதில் நாங்கள் வயப்பட்டோம்
நீங்கள் படாத பாடில்லை துயரில்லை-இவை
நீங்கள் புடம் போடப்படுவதற்கான பொடிகள்
நீங்கள் கூறியவை நிலையாய் நினைவில் நிற்கின்றது.
நீங்கள் பழகியவை பசுமையாய் சான்று பகர்கின்றது
நீங்கள் வாழ்ந்ததோ நிகரற்ற வாழ்வு
நீங்கள் நடந்ததோ நெறியான பாதை
நீங்கள் ஏமாற்றுக்குள்ளானீர்கள் - எனினும்
நீங்கள் எமாற்றிய்தாக வரலாறில்லை
நீங்கள் மரணித்தீர்கள் மனித மனங்கள் மாறிட
நீங்கள் மனிதத்தின் உறைவிடம்
நீங்கள் தூவிய புரட்சி விதைகள்
நீங்கள் போற்றிய சமுதாயத்தின்
நிலையான மாற்றத்திற்கு வழி சமைக்கும்

**கண்ணீர் துளிகள் கண்களை மறைக்க**
**எஸ். தியாகமணி (வெஸ்ட்ஹோல்)**

# ආදරණීය මාමාට මාගේ උපහාරයයි...

දයාබර මාමේ අපහැර මෙලොවින් ගිය දින සිට අප සියළු දෙනා සිටින්නේ දරාගත නොහැකි ශෝකයෙනි ඔබ අපට දැක්වූ සෙනෙහස දයාව, කරුණාව මින් ඉදිරියට නොලැබෙන හෙයින් අපට ඉමහත් පාඩුවකි

මා මුලින් ඔබගේ පවුලට බැඳුන දා පටන් මාගේම පියෙකු ලෙසින් සැළැකුවේය. මාගේ සැමියාගෙන් පසු ඔබගේ පවුලෙන් ලැබූ සෙනෙහසය, ආදරය කරුණාව ලැබුවේ මාගේ මාමාගෙන්ය. එබැවින් මාගේ මාමා මාහට තවත් පියෙකි. පියාණනි ඔබ මෙතරම් ඉක්මණින් අපගෙන් සමුගත්තේ ඇයි. ඔබ සමග මා ටික කලක් ගතකලත් ඔබ නැති දුක මාහට ඉවසා ගත නොහැකිය.

මාමේ ඔබ අපගෙන් සදාහටම සමුගෙන ගියත් ඔබගේ මතකයක් සැමදා රඳා පවති. ඔබ වැනි මහගු පුද්ගලයකු මා හට මාමා වීම මහත් ආඩම්බරයකි. තවද ඔබ අප සමගම සිටිය යුතු පුද්ගලයෙකු යැයි සිතමි.

ඔබ අසනීපවී සිටින දවස්වල මා සිතුවේ මාමා නැවතත් යථාතත්වයට පත්වී සියළු දෙනා සමග සතුටින් සිටිවී කියා. මා කිසි දිනක නොසිතුවෙමි, මෙතරම් ඉත්මණින් ඔබ අප දමා යාවී කීයා මාමේ ඔබ අසනීපවූ දා පටන් අප සියළු දෙනා සිටියේ දුකකින්ය. මාමේ තවත් දුකක් නම් ඔබගේ මුණුපුරා,මිණිබිරිය නොදැකම ඔබ අපෙන් සමුගැනීමය මාමේ ඔබ නැවතත් මාගේ කුස තුළින් මාගේ දරුවෙකු ලෙසින් ඉපදේවායි මම ප්‍රාර්ථනා කරමි.

මාමේ ඔබ අපගෙන් සමුගෙන ගියත් ඔබගේ පවුලේ සියිළු දෙනා සමග මා සමගියෙන්, සතුටෙන් හා ඔවුන්ගේ දුකේදී සතුටෙදීත් ඔහුන් සමගම සිටින්නෙමි.ග එමෙන්ම ඔබගේ පුතා ද (මාගේ සැමියා) ඔබ සිටින විට බලාගත් ආකාරයෙන්ම ආදරයෙන් රැක බලා ගන්නෙමි.

මාහට තවත් පියෙකු ලෙසින් ඔබගෙන් ලැබූ සෙනෙහස ඉමහත්වය මින් පසු කිසිකෙනෙකුගෙන් සදාගාලීය නොහැකියග ඉතින් මාගේ පියාණනි මතු සසරේදීත් ඔබ මට පියෙකු ලෙසින් ලැබේවා. ඔබගේ දරුවන්ට මෙම ආත්මයේදී ඔබ පියෙකු වීම ඔහුන් කල පිනකි.

අයියා යන නාමය මාගේ ජීවිතය තිබෙන තුරු නොමැකේ මාමේ ඔබ ගැන මා තුල තිබූ ගෞරවය කවදත් රදා පවතී. මාමේ ඔබ නැවතත් අප සමග පවුලට එක් වී සතුටින් ජීවත් වේවියැයි මම සිතමි.

--චන්ද්‍රවදනා ගෝබි--

# ஐயா எங்கே?

வானம் இருண்டுவிட்டது
சூரியன் எங்கே?
நேற்றிருந்த நட்சத்திரங்கள்
எங்கே?
நிலவு தான் எங்கே?
கதறியழுகிறது வானம்

▸▸ ▸▸ ▸▸

இலவம் பஞ்சு மரத்தின்
இலைகள் எல்லாம்
வாடிப்போய்விட்டன
தேயிலை தளிர்கள் யாவும்
விளைந்து விட்டது
சிவந்த ரோசா
உதிர்ந்து விட்டது

▸▸ ▸▸ ▸▸

உன் சிரிப்பு நிறைந்த
வீட்டில் இன்னு
எங்களை அமிழ்த்திக்
கொல்லும் மௌனம்
ஓடித்தப்பிக்க நினைக்கிறோம்
முடியவில்லை
மௌனத்தின் நடுவிலேயே
குத்திட்டு உட்கார்ந்திருக்கிறோம்
நண்பர்கள் முதுகுதடவி
தலை வருடி

அறுதல் பல
சொன்னார்கள்
இழப்பொன்றுக்கு
ஈடாகும் ஆறுதலை
யாருக்கேனும்
கூறு இயலுமா?

▸▸ ▸▸ ▸▸

எமது சிரிப்பை
எவ்வளவு நேசித்தாய்
என்பது எமக்குத் தெரியும்
அழுகையை நீ
விரும்பியவனல்ல

▸▸ ▸▸ ▸▸

உன் இறப்பை
நினைப்பூட்டும்
அந்த அழுகையை
நிறுத்திக் கொள்கிறேன்
எம் சிரிப்பில்
நீ வாழ்ந்திருப்பாய்

அருண்
மகன்

but determined
to change the world
upside down to
guarantee equality and
eradicate
discriminations
Their souls are truthfull.

If you too a comrade,
Need no penance,
have no illusions
rebirth, nirvana,
samadhi and utopi

comrade yi
you live
died
le

ah
enlightment
comrade
r soul blessed,
od
n,
es and
ah.
en't you a comrade
Comrades are
t blessed,
d, sheperd
nrade either

# நிகரற்றவருக்கு நினைவஞ்சலி

மாசற்ற அன்பர் நெஞ்சே
　　மாறாத பெட்டகமாய்
திகழ்ந்த எம் தெய்வம்
　　திக்கற்று மறைந்தது ஏனோ

உண்மைக்கு இலக்கணமாய் இருந்து
　　ஊரவரை காத்த அன்பர்
கண்கண்ட தெய்வத்தினை
　　காலனவன் கவர்ந்ததேனோ

பாசத்தை ஈன்றமைக்கு
　　நேசக்கரம் நீட்டி
பாரினில் இருந்து - இப்போ
　　பரிதவிக்க விட்டதேனோ

ஆலமரமாய் வாழ்ந்து
　　அன்பெனும் நிழல் தந்த
உங்களின் பிரிவை
　　மாறாத வடுவாய்
மனதில் சுமந்து
　　உங்களின் ஆத்ம சாந்திக்காய்
அஞ்சலி செலுத்துகின்றோம்.

**என். அஜந்தா**
**தரம் - 11**
**வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தியாலயம்**

# 'ஐய்யா' என்கின்ற கொள்கையாளன்

**சந்திரலேகா கிங்ஸ்லி**

ஐய்யா என்று மட்டும் தான் அவர் எனக்கு அன்றும் இன்றும் அறிமுகமாகி இருக்கின்றார். அவரின் மரணம் தந்த செய்தியில் என்னைப் பக்குவப் படுத்திக் கொண்டு கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு முன் என் கணவருடாக எனக்கு அவர் அறிமுகமானது நம் கட்சித் தோழன் என்றுதான் எனக்கு அவர் பழக்கமான நாள் முதல் கடைசியாக அவரை (ஒரு இளைஞனாக) கண்ட நாள் வரை அவரிடம் நான் கற்றுக் கொண்ட மனத்திடம், உறுதி, நம்பிக்கை, உடன்பாடு, போராட்டம், தளராமனம், பணிவு, பௌவியம் நியாயம், தீர்மானம் கொள்ளல், அயரா உழைப்பு, சவாலை எதிர்க் கொள்ளும் திறன் என ஏராளம் ஏராளம்.

அவர் ஒரு கொள்கைப்பிடிப்பாளன் இதனால் அவரை ரொம்பப் பிடிக்கும் ஏனெனில்கொள்கையாளன் என்று தன்னை சொல்லிக்கொள்ளாத கொள்கைபிடிப்பாளன். இன்றைய சூழ்நிலையில் ஒரே கொள்கையில் எப்படி வாழ்வது பலரும் பலவிதமாக கேட்டுக் கொள்ளும் கேள்வியிது உலகம் பல்வேறு கோணத்தில் பல்வேறு பரிமாணத்தில் வளர்த்துக் கொண்டிருக்கும், உலகத்தோடு ஒழுக கொள்கை மாறி அடிப்படைகளை மறந்து தனக்கேற்றப்படி கொள்கைகளை மாற்றிக்கொண்டும் மாற்றிக்கொண்டவைகளுக்கு வக்காலத்து வாங்கி பக்க இசைக்கு பலரின் கொள்கைகளை தோண்டி புதைத்து துவைத்து சிதைத்து துவசம் பண்ணி வாழ்ந்துக் கொண்டிருக்கும் பலரின் மத்தியில் ஒரு கம்யூனிஸ்டாக தன் கொள்கையில் தளராமல் மிகுந்த நேர்த்தியோடு வாழ்ந்த ஒரு கொள்கைப்பிடிப்பாளன். பிதற்றி உச்சி முதல் உள்ளங்கால் வரை ஓராயிரம் கொள்கைகளை ஒட்ட வைத்து தத்துவங்களை ஏட்டிலும் எழுத்திலும் வாயிலும் பிதற்றி வாழ்க்கையில் தவறிவிட்ட பலரின் மத்தியில் அவர் தத்துவங்களை மிகச்சரியாக உள்வாங்கிக்கொண்டவராக வாழ்ந்தும் காட்டினார் உழைக்கும் வர்க்கத்தினரின் ஒவ்வொரு வியர்வைத்துளியிலும் வெற்றியுண்டென வீரம் பேசிய கொள்கைப்பிடிப்பாளன்.

இழப்புகளிலும் மிகப்பெரிய சந்தோசத்திலும் சாதாரண மனிதனின் அகமும் முகமும் அப்பட்டமாய் அதனை வெளிக்காட்டுவதென்பது இயற்கையான விடயம்தான் ஆனால் தத்துவார்த்தமாய் உலகத்தை விளங்கிக்கொண்டதனாலோ என்னவோ ஐயா எல்லா கஸ்டதிலும் இழப்பிலும் வரவிலும் வாழ்விலும் தாழ்விலும் நெருக்கிடையான நேரத்திலும் கூட மிக நிதானமாகவே தன் காலடிகளை எடுத்துவைத்திருக்கின்றார்.

ஒரே பேச்சு அதே முகம் அதே கண்கள் அதே சிரிப்பு அதே நடை உடை இவை எல்லாமே அவர் நமக்கு கற்றுக் கொடுத்த பாடம் இதனைக்கூட ஒரு கொள்கைப்பிடிப்பாளனின் உயர்ந்த உதாரணமாகவே நாம் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. சந்தோசத்திலும் தனது அன்றாட செயற்பாடுகளில் எது வித மாற்றங்களும் இல்லாமல் தனது பயணத்தைத் தொடர்ந்து சென்றதானது அவரது தனித்துவத்தைக்காட்டி நிற்கின்றது.

உழைப்பில் மிகவும் நம்பிக்கை வைத்த அவர் உழைப்பாளர்களுக்கு கொடுக்கும் ஊதியத்திலும் நியாயத்தைக்கடைப்பிடிக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். உழைப்பை நம்பியதாலோ என்னவோ உழைப்பாளிகளை அவர் ரொம்பவும் நேசித்து வாழ்ந்தார். பாட்டாளி வர்க்கப் போராட்டங்கள் வெல்வது உறுதியென்று தன் மரணத்திலும் கூறிச் சென்ற ஐய்யாவின் பண்புகளையும் நல்ல கருத்துக்களையும் மாக்சிய லெனினிச மாசேதுங் சிந்தனைகளையும் பின்பற்றி மானுடம் வெல்ல வழி சமைப்போம்.

எங்கே நீதியிருக்கிறதோ
அங்கே எனக்கு உரிமை இருக்கு
எனக்கு உரிமை இருக்குமாயின்
அங்கு நீதியும் இருக்கும்

– குர்திஸ் பழமொழி –

[illegible]
[illegible]
[illegible]er
A[illegible]ah
Kh[illegible] enlightment
[illegible]
[illegible] comrade
[illegible]
[illegible] your soul blessed,
[illegible] good
[illegible]tion,
[illegible] prophet and
[illegible]ah.
[illegible]en't you a comrade
[illegible]
Comrades are
not blessed,
[illegible]d, shepherd
[illegible] god
[illegible] comrade either
[illegible] are
[illegible] materialists
[illegible]
[illegible]ally they see,
[illegible]

but determined
to change the world
upside down to
guarantee equality and
eradicate
discriminations
Their souls are truthfull.

If you too a comrade,
Need no penance,
have no illusions
rebirth, nirvana
samadhi and utopia

comrade you born
you lived
died too.
lessong wil[illegible]
From your [illegible]th
That is one [illegible]e
[illegible]
All will [illegible]
Your truthf[illegible]
Teaches us [illegible]

# சத்தியமான ஆத்மா

உங்கள் ஆத்மா
ஆசிர்வதிக்கப்பட்டதா?
நீங்கள் நல்ல சமாரித்தனா?
கடவுளின் பிரதிநிதியா?
தேவ தூதனா?
ஞான மடைந்தவரா?
இல்லாவிட்டால்
தோழரா?

ஜ௸ ஜ௸

உங்கள் ஆத்மா
ஆசிர்வதிக்கபடாவிடின்
நீங்கள் நல்ல சமாரித்தனில்லை
கடவுளின் தூதுவரில்லை
தேவ தூதருமில்லை
அவ்வாறெனின்
தோழரா?

ஜ௸ ஜ௸

தோழர்கள்
ஆசிர்வதிக்கப்படுவதில்லை
ஞானமடைவதில்லை
மேய்ப்பரில்லை
கடவுளால் அனுப்பபடுவதில்லை
பிறப்பால் தோழராவதுமில்லை.

ஜ௸ ஜ௸

தோழர்கள்
இயங்கியல் பொருள் முதல்வாதிகள்
அதனால்
விஞ்ஞான பூர்வமாக பார்ப்பர், கேட்பர்,
ருசிப்பர், முகர்வர், சிந்திப்பர்
மாயைகளை நம்புவதில்லை
ஆனால்
சமத்துவம் நிலைநாட்ட
பாரபட்சம் ஒழிக்க
இவ்வுலகை தலைகீழாய் மாற்ற
திடம் கொள்வர்
அவர்களின் ஆத்மா
சத்தியமானது.

ஜ௸ ஜ௸

நீங்களும் தோழரா?
அவ்வாறெனின்
உங்களுக்கு பாவமன்னிப்புமில்லை
மாயை, மறுபிறப்பு
நிர்வாணம், சமாதி
கற்பனவாதமுமில்லை

ஜ௸ ஜ௸

தோழரே !
நீங்கள் பிறந்தீர்கள்
வாழ்ந்தீர்கள்
இறந்தீர்கள்.
உங்களின் பிறப்பு, வாழ்வு
இறப்பிலிருந்து படிப்போம்
ஒருவர் அனைவருக்காகவும்
அனைவரும் ஒருவருக்காகவும்
வாழ்வது என்பதே
அப்பாடம்
உங்கள் சத்தியமான ஆத்மா
ஒரு கோடி கற்பிக்கும்.

✍ பிரதீஸ்

# மலைகளை வென்ற மானுடம்

இந்த பயணத்தின் வழிநெடுகிலும் எத்தனை துயரங்களை பார்த்துவிட்டோம் எவ்வளவு துயரங்களை சந்தித்துவிட்டபோதிலும் புதிதாய் ஏற்படும் துயரத்தை இலகுவில் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. துயரத்தை கண்டு அஞ்சாமல் இருக்க முடியும் அழாமல் இருக்க முடியுமா? ஐயா! நீங்கள் இறந்தபோது ஏற்பட்ட துயரத்தை எழுத்திலோ பேச்சிலோ வெளிப்படுத்த முடியுமா என்று தெரியவில்லை அழுகையை தவிர துயரத்தை இயல்பாய் வெளிப்படுத்த வேறெந்த ஊடகமும் இருப்பதாய் தெரியவில்லை.

அவரைப்பற்றிய அறிமுக குறிப்பொன்றை எழுதுமாறு என்னை கேட்டுக்கொண்டனர். அவரை பற்றி எழுத முடியவில்லை என்று நான் சொல்ல போவதில்லை. அவரைபற்றி எழுதவும் பேசவும் நிறையவே உள்ளன. அவரது கருத்துக்கள் நடைமுறைகள் அதன் சரி பிழைகள் எமக்கு சிறந்த படிபபினைகளாக இருக்கும். எனக்கும் அவருக்குமான உறவை வெளிப்படுத்த இந்த குறிப்பு உதவுமென நினைக்கிறேன்.

ஐயா எல்லோராலும் 'நாராயணன்' என்று அழைக்கப்படுவார். அவரது முழுப்பெயர் சிவசூரிய நாராயணசாமி என்பதாகும். அவரது தந்தை நல்லப்ப ரெட்டியார், தாய் சொக்காயம்மா 1955-03-16 அன்று வடக்கு பூண்டுலோய மேற்பிரிவில் (மில்லர் தோட்டம்) பிறந்தார். இவருக்கு சகோதரர்கள் 06 போர், இதில் ஐவர் சகோதரிகள் இவர் இளையவர், அவர்கள் அனைவரும் இவரை மிகவும் நேசித்தார்கள். இவரும் அவர்களுடன் மிக அன்பாக இருந்தார். ஐயாவின் தந்தையார் சீர்திருத்த எண்ணம் கொண்ட ஆன்மீகவாதியும், மனித நேயம் மிக்கவருமாக வாழ்ந்திருக்கின்றார். ஐயாவிற்கு 10 வயதாக இருக்கும்போதே அவரது தந்தையார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். ஐயாவின் தந்தையார் தெலுங்கை பூர்வீகமாக கொண்டவர். அவர் இறந்த பிறகு ஐயாவின் குடும்பம் மிகுந்த பொருளாதார பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தது. ஐயாவின் சகோதரிகள் 13-14 வயதிலேயே தோட்டத்தில் பெயர் பதிந்து தொழிலாளர்களாக வேலை செய்த அனுபவத்தை ஐயா மிக கவலையுடன்

பகிர்ந்துக்கொள்வார். அவர்கள் இன்னமும் உழைக்கின்றார்கள். கடுமையாக உழைப்பது அவரது பரம்பரையில் இருந்து அவருக்கு கிடைத்த பரிசாகும்.

ஐயா 7ஆம் வகுப்பு மட்டுமே படித்துள்ளார். 5ஆம் வகுப்புவரை தோட்டத்து பள்ளிக்கூடத்திலும், படிப்பை நிறுத்தும் வரை பூண்டுலோய தமிழ் மகா வித்தியாலயத்திலும் கல்விக் கற்றார். 1970 ஆம் ஆண்டு நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் காரணமாக தோன்றிய செயற்கையான பஞ்சம் மலையக பிரதேசங்களை மிக கடுமையாக தாக்கியது. இவர்களது குடும்பம் இப்பஞ்ச காலத்தில் மிக கொடுமைகளை அனுபவித்தது. ஆயினும் அப்போது அநேகமாக சுய உற்பத்தியல் ஈடுபட்டிருப்பதால் தப்பிக்கொள்வதற்கு வசதியாக இருந்தது என்பார். சுய உற்பத்தி, சுய பொருளாதாரம் அவர் அடிக்கடி கூறிய நடைமுறைப்படுத்திய விடயங்களாகும். ஏழ்மை காரணமாக அவரை தோட்டதில் பெயர் பதிய முனைந்த போது சகோதரிகள் அவரை கொழும்பிற்கு அனுப்பிவைத்துள்ளனர். 1970 ஆம் ஆண்டு கொழும்பு சென்றாலும் அம்மை நோய்கண்டதால் மீண்டும் திரும்ப நேரிட்டது.

ஐயா, சிறுபராயத்திலே மிக கடுமையாக உடல் உழைப்பில் ஈடுபட்டவர். அவரது சிறிய தந்தையார் கடுமையான உழைப்பாளியும், ஐயாவால் மிகவும் விரும்பப்பட்டவரும் ஆவார் அவர்கள் இருவரும் கொந்தரப்பு மலையில் பட்ட கஸ்டங்களை அடிக்கடி சொல்லி கவலைப்படுவார். அவருக்கு தான் படிக்கவில்லையே என்ற ஏக்கம் இறுதிவரை இருந்தது. ஐயா மாட்டிற்கு புல் அறுத்துக்கொண்டிருக்கும்போது, அவ்வழியே பாடசாலைக்கு செல்பவர்களை பார்த்து தான் எத்தனைமுறையோ கண்ணீர் விட்டதாக கூறியிருக்கின்றார்.

1974 கொழும்பு சென்று 1998 அவர் மயிலாடி காணிக்கு வரும் வரையில் அவர் கொழும்பிலேயே இருக்கின்றார். அவர் கொழும்பில் இருந்த காலக்கட்டத்தில் மலையகத்தில் இருந்து வேலைக்கு வந்த இளைஞர்களுக்கும், உயர்கல்வி கற்றுக்கொண்டிருந்த இளைஞர்களுக்கும். அவர் தன்னால் முடிந்த உதவிகளை செய்திருக்கின்றார். அதேபோல மலையகத்தில் உள்ள பல பாடசாலைகளுக்கு தன்னால் இயன்ற

பொருளுதவிகளை செய்திருக்கின்றார். எங்கள் அம்மாவான சுந்தரியை காதலித்து 1983-03-16 அன்று திருமணம் முடித்தார். அம்மாவையும் எங்களையும் மிக நேசித்தார். அம்மா 2002 ஆம் ஆண்டு இறந்தார். அவர் இறக்கும் வரை சுமார் 12 வருடகாலமாக நோயாளியாக இருந்தார்.அவருக்கு சகலவிதமான உதவிகளையும் செய்து அவரை தன் பிள்ளை போல பார்த்துகொண்டார். அம்மா இறந்த பின்னர் மிகுந்த மனக்கவலைக்கு உள்ளானார். ஐயா அந்த நேரம் இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அந்நேரத்தில் உடைந்து போனாலும் மீண்டும் தன்நம்பிக்கையோடும், அம்மாவின் நினைவுகளோடும் வாழ்க்கையை எதிர்கொண்டார். ஐயா 90 களில் புதிய ஜனநாயக மாக்சிய லெனினிச கட்சி அரசியலோடு தன்னை இணைத்துக்கொண்டார். 1997 ஆம் ஆண்டு முதல் கட்சி மேதினம், அரசியல் கூட்டங்களுக்கு என்னை அழைத்துச்செல்வார். மார்ஸிய அரசியலின்பால் என்னை நகர்த்தியவர் அவர் தான். புத்தங்கள் வாசிக்கவும், எழுதவும் உற்சாகப்படுத்துவார். நாங்கள் மேற்கொண்ட புரட்சிகர அரசியலின் காரணமாக சிறைசெல்ல நேரிட்டது. அந்த இரண்டு வருடத்தில் என்னை பார்க்க வந்த எந்த தருணத்திலும் என்னை அதைரியப்படுத்தவோ, அழவைக்கவோ இல்லை. மிகுந்த நம்பிக்கை தரக்கூடிய வார்த்தைகளை மட்டுமே சொல்வார்.

அவருக்கும் எனக்குமான உறவு இரு நண்பர்களுக்குமிடையிலானதாகும். அடிக்கடி நாங்கள் முரண்படுவோம். அநேகமாக அரசியல் விவாதங்களின் கருத்துவேறுபாடுகள் ஏற்படுவதுண்டு. ஆயினும் அது மிக சுமூகமாக முடிந்துவிடும். நாங்கள் மிக சுவாரஸ்யமாக பேசிக்கொண்டிருப்போம். எங்கள் நால்வருடனும் ஒரு நண்பனைப்போல நகைச்சுவையான விடயங்களை பகிர்ந்துக்கொள்வார். நாங்கள் ஐவரும் நண்பர்களை போல வாழ்ந்தோம். நாங்கள் ஒரு நண்பரை இழந்துவிட்டோம்.

கட்சியில் இணைந்து அரசியல் வேலை செய்துக்கொண்டிருந்த காலக்கட்டத்தில் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தபோது என்னைப்பார்த்து "உன்னை இந்த சமூகத்திற்கு பரிசாக தருகின்றேன்" என்றார். இறுதிவரை இச் சமூகத்தை இவ்வுலகத்தை பாதுகாக்கும் போராட்டத்தில் உறுதியான போராளியாய் நிற்க நெஞ்சுரத்தை அளித்தவர் ஐயா தான்.

சகோரிகள், நண்பர்கள், தோழர்கள், உறவினர்கள், ஊர்மக்கள் நாங்கள் அனைவரும் ஒரு தூய இதயத்தை இழந்துவிட்டோம். இனி திரும்பி வராது. ஐயா காணியைச் சுற்றி வருவீர்களே; ஒவ்வொரு பூவையும். அரும்பையும் குழந்தையின் வாஞ்சையோடு தடவுவீர்களே; அந்த அன்பு நெஞ்சை இழந்துவிட்டோம்.

எங்கள் நெற்றியில் முத்தமிட்ட அந்த உதடுகள் நிரந்தரமாய் மூடிக்கொண்டன. உங்கள் இறப்பை எங்களால் தாங்கிக்கொள்ள முடியாதது உண்மை. உங்கள் விருப்பப்படியே உங்கள் இறுதி நிகழ்வு நடந்தது. நீங்கள் விரும்பியபடி உங்கள் வழி நிற்போம். தொடர்ந்து பயணிப்போம். நீங்கள் விட்டதிலிருந்து தொடருவோம். இன்னும் தூரச்செல்வோம். இந்த சூரியனை நெருங்குவோம். அழகியதோர் உலகை படைப்போம். மானுடத்தின குரலாய் மலையெங்கும் எதிரொலிக்கின்றது உங்கள் குரல். அவை தலைதாழ்ந்து மரியாதை செய்கின்றன. அந்த மானுடம் இந்த மலைகளை வென்றது.

**ராஜன் (மகன்)**

அனைவருக்காவும் கண்ணீர் சிந்தாதவர்கள்
அனைவரையும் இதயபூர்வமாக நேசிக்கதவர்கள்
சுரண்டுகிறவர்களுக்கும், கொடுமைக்காரர்களுக்கும்
எதிராக போராட மாட்டார்கள்.

– பகத் சிங் –

இந்த மலை நாட்டினிலே
உழைக்கும் மக்கள் நாங்க //
உயர்வே இல்லாம வீழ்ந்து கிடக்குறோங்க //
பாட்டன் பூட்டன் காலந்தொட்டே
இதே நிலம தாங்க //
பாட்டாளி வர்க்கம் இணைந்து
போராடுவோங்க //

(இந்த மலை நாட்டினிலே)

இறப்பரும் தேயிலையும் எங்க உழைப்பு தாங்க //
நாட்டின் பொருளாதாரத்திலே முதுகெழும்பு நாங்க //
நம்ம வீட்டு அடுப்பில் எல்லாம் பூன தூங்குதூங்க //
இந்த பூமியையே புரட்டிப் போட எழுந்து வாங்க நீங்க //

(இந்த மலை நாட்டினிலே)

கோயில் கட்டி கும்பம் ஏத்தி தொழுது நின்றோ நாங்க //
ஏழை எங்கள் வாழ்வை கடவுள் திரும்பி பார்க்கலீங்க //
கடவுள் பேரில் சுரண்டும் முதலை வாயை கிழிப்போம் வாங்க //
இந்த சனியன்களை பகுத்தறிவால் துரத்தியடிப்போம் வாங்க//

(இந்த மலை நாட்டினிலே)

வழிய வந்து வாயிழிச்சி வாக்கு கேக்குறாங்க //
வறுமை தனை ஒழிக்கிறதா கோசம் போடுறாங்க //
சம்பள ஒப்பந்தத்திலே காட்டி கொடுத்த நீங்க //
இனி ஓட்டு கேட்டு வந்திங்கனா ஓத குடுப்போம் நாங்க //

(இந்த மலை நாட்டினிலே)

**நெல்சன் காவத்தை**

# புரட்சியாளர்கள் சரணடைவதில்லை

**இராகலை பன்னீர்**

சுரண்டல் மிக்க சமூக அமைப்பினை உடைத்து பொதுவுடமை படைக்க விளையும் புரட்சியாளர்கள் உலகில் பல லட்சம் பேர் உள்ளனர். இவர்கள் புகழ், பொருள், பதவி, பட்டம் போன்ற ஆசைகளை துறந்து அடக்கப்பட்ட மக்களின் விடுதலையை முதன்மையெனக் கொள்கின்றனர். இவர்கள் சாதி, இனம், மதம், மொழி, நிறம் எனும் வட்டத்திற்குள் அடைப்பட்டு நில்லாது முழுமனித குலத்தையும் ஒன்றென எண்ணும் இயல்புடையவர்கள். மனசாட்சியும் மனத்தூய்மையும் மிகுந்தவர்களாக இவர்கள் இருப்பதால் அநியாயங்களும் அக்கிரமங்களும் தலைவிரித்தாடுகின்ற போதெல்லாம் இவர்கள் மௌனம் சாதிப்பதில்லை. அடக்கு முறைக்கும் கொடுங்கோன்மைக்கும் அஞ்சி விடுவதில்லை. அவ்வப்பொழுது வரும் சவால்களுக்கும் துன்பங்களுக்கும் முகம் கொடுத்து தளராது மக்களிடம் செல்லும் மாண்பு இவர்களுடையது.

வெறும் சாதாரண பேர் வழிகள், ஏமாற்றுக்காரர்கள், வேசக்காரர்கள் அரசியல் கூத்தாடிகள், கோமாளிகள், சுயநலமிகள் எனப்பலரும் ஏனையோரை காரண காரியமில்லாது விமர்சிப்பதிலும் காட்டிக் கொடுப்பதிலும் புகழ் பட்டம் பதவிகளுக்காக எந்த அற்பனின் காலிலும் விழுவதிலும் முனைப்புக் காட்டுவர். மேலும் இத் தன்மை வாய்ந்தோர் நேரத்திற்கு ஒரு வேடம் ஏற்கவும் நிறம் மாறவும் கட்சித் தாவவும் முடிகிறவர்களாய் இருப்பர். பெருஞ்செல்வ செருக்கும் ஆளும் வர்க்கத்தின் ஆதரவும் இவர்களுக்கு கை கூடுவதால் இவர்களால் மக்களை இலகுவாக ஏமாற்ற முடிகிறது.

மாறாக புரட்சியாளர்கள் உண்மையான மக்கள் விசுவாசிகளாக இருப்பதால் மக்களிடம் கற்கவும் மக்களுக்கு வழிகாட்டவும் மக்களை அமைப்பாக அணிதிரட்டவும் மக்களுக்காக போராட்டங்களில் ஈடுபடவும் செய்கின்றனர். இன, மத, மொழி, நிறம் எனும் அடையாளங்களால் மேற்கொள்ப்படும் அடக்கு முறைகளை எதிர்த்து இவர்கள் போராடுகின்றனர். வர்க்க விடுதலைக்காகவும் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை முறியடிக்கவும் இவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். புரட்சியாளர்கள் எவ்வேளையிலும் எதிரியிடம் தனது கொள்கைகளை விட்டு சரணடைவதில்லை.

மலையகத்தில் வேசக்காரரகளும், கூத்தாடிகளும் அரசியல் கோமாளிகளும் அற்பர்களும் இருப்பது போல மக்கள் விடுதலையை நேசிக்கின்றவர்களும் அதற்காக உழைக்கின்றவர்களும், இருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. தோழர் நாராயணன் மக்களோடு நின்றவர் மக்களுக்காய் உழைத்தவர் இரண்டாயிரம் வருட சாதிப்பெருமையெல்லாம் தூக்கி வீசி மனத்தூய்மையுடன் மக்கள் போராட்டங்களில் பங்கெடுத்தவர். இலங்கை மக்களுக்கும் இயற்கைக்கும் எதிரான மேல்கொத்மலை நீர்தேக்கத்திட்டம், சேது சமுத்திரத்திட்டம், நுரைச்சோலை அனல் மின் திட்டம் போன்றவற்றிற்கு எதிரான மக்கள் இயக்க போராட்டங்களுக்கு பங்களிப்பும் ஆதரவையும் நல்கியவர்.

இவர் நஞ்சிக்கலக்காத உணவும் சுத்தமான நீரும் மக்களுக்கு தேவை என்பார். எல்லோர் மீது அன்பு செலுத்துவார். மலையக தோட்டங்களில் வாசிப்பு கலாச்சாரம் மேலோங்க வேண்டும் என்பதற்காக தனது மயிலாடிக்கிரமத்தை சூழவுள்ள தோட்டங்களில் வாசிகசாலைகளுக்கு கொழும்பில் இருந்து புத்தகங்களை தருவித்து வழங்கினார். இவர் தன்னிடம் செல்வம் மிகுந்திருந்தபோது செருக்கு கொள்ளவோ பின் நலிவுற்றபோது வருந்திச் சாயவோ இல்லை. எப்போதும் புன்னகைத் தவழும் முகத்துடன் எப்படி நலமா? என்பார். நாராயணன் நல்ல மனிதர், நல்ல தந்தை தன் மனைவிக்கு நல்ல கணவர், மக்களுக்கு நல்ல வழிகாட்டி, தன் மகன் மூன்று வருட சிறைவாசம் அனுபவித்து வந்தபோது அவர் யாரிடமும் அவர் விடுதலைக்காக கையேந்தி நிற்கவில்லை. அவர் விடுதலையான பின்பு அக்குடும்பத்தை அரசியல் வாழ்விலிருந்து விலக்கி வைக்கவுமில்லை.

எங்கள் தோழர் நாராயணன் மலையத்தில் தூய்மை வாய்ந்த மனித குலத்துள் ஒருவர். அவரது இறப்பு எங்களுக்கு மீளாத துயரத்தை தந்துள்ளது. அவரை பின் பற்றுவோம். புரட்சியாளர்கள் சரணடைவதில்லை. இதற்கு நாராயணன் நல்ல எடுத்துக்காட்டு. பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங்கத்தின் பிரதி தலைவரான இவரது இழப்பு சங்கத்திற்கும், புதிய ஜனநாயக மார்ஸிய லெனினிச கட்சிக்கும் பெரும் இழப்பினை ஏறிபடுத்தியள்ளது. இவரது வழியில் முன்செல்வதே இன்று எமது பணியாகின்றது.

# உன் மரண செய்தியின்...

கொடிதாயினும்
அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு
கொடியது
மரணம்

✡ ✡ ✡

தானும் தான் சார்ந்த - என
மட்டுப்படுத்தப்பட்ட
சுயம் நிலை தவிர்ந்து - சமூக
மாற்றதிற்காயும் - சீரிய
சிந்தனையை சுமந்த - உன்
வாழ்க்கை அர்த்தமுள்ளது.

✡ ✡ ✡

உண்மையாய் - நீ
கொண்டிருந்த
ஒடுக்கப்பட்ட மக்களின்
மேண்மை வேண்டிய - சிந்தனை
உன்னை மாமனிதன் ஆக்கியது.
இறுமாப்பு முழுதும்
ஓரங்கட்டி எளிமையான
மொத்த உருவானாய்.
ஒவ்வொருபொழுதும் - உன்
அணுகுமுறைகள் - மனிதத்தின்
மாண்பை உணர்த்தின

✡ ✡ ✡

அதனுள்ளும் - இந்த
பிரளயத்தை உருமாற்றும்
நம்பிக்கைகீற்றும்
இணைந்திருந்தன.

உன்னோடு ஐந்தாறு
மணித்தியலம் - மட்டுமே
உரையாடிய அனுபவம்
மரணசெய்தி கேட்டு
உன்னையொத்தவர்களின்
நட்பை நெறுக்கப்படுத்த
எனக்குள் நானே
உத்தரவிட்டுக்கொண்டடேன்
தெளிவுறும் இந்த
மலைமுகடுகளில் - உன்
மரணசெய்தியின்
எதிரொலிகள்

✡ ✡ ✡

அடக்குமுறை
அடிமை விலங்கை
உடைக்கும் பலம் கொண்ட
சம்மட்டி வசையாய்
மாற்றம் பெறும் - இந்த
லயமும் விரைவில்
விடுதலையின்
சேதிசொல்லும்.

✡ ✡ ✡

இந்த மலைகள்
உணரந்த
ஓலங்கள்
செமிப்புகளாய் ஓர் நாள்
வெற்றியின் ஓசையாய்
எதிரொலிக்கும்

உன் மரணம் பலருக்கு
பாடத்தையும் - சிலருக்கு
சீற்றத்தையும் - எங்களுக்கு
நம்பிக்கையையும் தந்திருக்கின்றது.
இந்த மலை முகடுகளின்
வீரியம் - ஏக்கமாக
ஏற்றம் - எதிர்பார்ப்பாக
உன் எண்ணமும்
சுதந்திர வேட்கையும்
திண்ணமாக - எங்கள்
திடசங்கட்பம் - உனக்கு
அர்ப்பணமாகட்டும்
உயிரோடு நீ
உணர்த்தியது
மரணத்தில்
மாட்சிமை பெறுகின்றது.

✡ ✡ ✡

நாராயணன் என்ற
நாமமும்
நம்பிக்கைகுறிய மாற்றத்தின்
உயிர் நாடியே !

தோழமையுடன்
அருணா - செட்சுமணன்
ஆசிரியர்.
நிகர் சஞ்சிகை

# தொழிலாளிவர்க்க மனிதாபிமானி தோழர் நாராயணன்

-இ.தம்பையா-

## தோழர் நாராயணின் இறப்பு

தோழர் நாராயணனின் மரணம் எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத விதமாக நடந்தேறிவிட்டது. அவர் மரணப்படுக்கையில் இருக்கும்போதும் அவரின் மரணத்தின் பின்னர் அவரது உடலை அடக்கம் செய்யும் வரை அவரது பிள்ளைகளும், தோழர்களும், நண்பர்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள் சராசரியான நடவடிக்கைகளை விட வித்தியாசமானவை.

அவரின் மூளையில் ஏற்பட்டிருந்த புற்றுநோய் மிகவும் முற்றிய நிலையில் இருந்ததால் சத்திரசிகிச்சைக்குட்படுத்தி தேவையற்ற பரீட்சார்த்தத்தில் ஈடுபடாமல், அவர் இருக்கும் வரை இருக்கட்டும் என்ற மனநிலையை அவரது மகன்களான ராஜன், கோபி, அருண் என்போர் ஏற்படுத்திக்கொண்டனர். அவரது மகள் காயத்ரிக்கு நோயின் கடுமை பற்றி அறிவிக்கப்படவில்லை. அவரால் அதனை தாங்கிக்கொள்ள முடியாதிருக்கலாம் என்பதால் அவருக்கு அறிவிக்கப்படவில்லை. அவரது நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், தோழர்களுக்கு அவரது சுகவீனம் பற்றி அறிவிக்கப்பட்டது. ஏறக்குறை எல்லோரும் வந்து பார்த்தார்கள் எனலாம்.

கொழும்பு "நவலோக்க" தனியார் வைத்தியசாலையில் 29-07-2010 அன்று அனுமதிக்கபட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் நோயின் தாற்பரியம் தெரிந்தவுடன் அங்கிருந்து கொழும்பில் அவரது மகன் கோபி வசிக்கும் வீட்டிற்கு 01-08-2010 அன்று கொண்டுவரப்பட்டு ஒரு வாரத்திற்கு மேல் அங்கு வைத்து பராமரிக்கப்பட்டார். 2010-08-11 ஆம் திகதி அவருக்கு உணவையோ, நீராகாரத்தையோ உட்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

அன்றிரவு ஒரு வைத்தியரின் உதவியுடன் நீராகாரத்தை வழங்கவும், சிறுநீர் வெளியேறவும் குழாய்கள் பொருத்தப்பட்டன. ஆகஸ்ட் 12 ஆம் திகதி சுவாசிப்பதில் பிரச்சனை ஏற்பட்டது அவரது நிலைமை மோசமாகி கொண்டே போனது. அவரை எப்படியாவது அட்டன் ரொசல்ல, மயிலாடி, (கிலங்டன் பாம்) கிராமத்திலுள்ள வீட்டிற்கு கொண்டு போவதென்று முடிவு செய்யப்பட்டது. இரவு 8 மணிக்கு வாகனத்தில் ஏற்றப்பட்டார். வாகனம் போய்கொண்டிருக்கும் போது அவ்வாகனத்தில்

சென்றவர்களில் ஒருவராக தோழர் திருச்செல்வம் என்பவர் எனது கைப்பேசிக்கு குறுஞ்செய்தியொன்றை அனுப்பியிருந்தார். நாராயணன் காலமாகிவிட்டதாக அது கூறியது. பதில் குறுஞ்செய்தியில் வாகனத்தில் செல்வோருக்கு தெரியாவிடின் அறிவிக்காமல் கொண்டுபோய்ச்சேருங்கள் என் கூறினேன். வாகனத்தில் சென்றவர்களில் ராஜனுக்கு மட்டும் தெரியும் என்பதை அறிந்தேன். வாகனத்தில் அவரது மகன் கோபி, மகள் காயத்ரி, சகோதரன் உங்கு, அவரின் மகள் அனு மற்றும் நண்பர்களும் சென்றனர். அவர்களும் சாரதியும் கலவரப்பட்டுவிடுவார்கள் என்பதால் காலமாகியதை கூறாமல் நாராயணின் உடல் அவ்வாகனத்திலேயே எடுத்துச்செல்லப்பட்டது. 13 ஆம் திகதி அதிகாலை 2.30 மணிக்கு உடலை வீட்டிற்கு எடுத்துச்செல்லும் போது மகளைத்தவிர ஏனையோருக்கும் தெரிவிக்கப்பட்டது. மகள் அதிகாலை 4 மணியளவில் தகப்பன் இறந்து விட்டதை அறிந்துக்கொண்டாள். பிறகு எற்லோருக்கும் அறிவிக்கப்பட்டது. இறுதி நிகழ்வு 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 12 மணிக்கென அறிவிக்கப்பட்டது.

அடைமழைக்கு மத்தியிலும் மக்கள் வந்து அஞ்சலி செலுத்திச் சென்றனர். நெற்றியில் சில்லறைக்காசு பொட்டு வைப்பது முதல் எல்லா சமய சடங்குகளும் தவிர்க்கப்பட்டன.

13 ஆம் திகதி காலையில் 6 மணிக்கு என்னுடன் தொடர்பு கொண்ட மகன்மார் சமய சடங்குகள் சம்பிரதாயங்கள் எதுமின்றி கட்சித்தோழரின் இறுதி நிகழ்வுகள் செய்யப்படுவது போல செய்யவேண்டும் என கூறினர் காலை 6.30 மணிக்கு தொடர்புக்கொண்டு தன்னுடைய இறுதி நிகழ்வை சமய சடங்குகளின்றி செய்ய வேண்டும் என நாராயணன் எழுதி வைத்திருந்த குறிப்பொன்றை தேடிக்கண்டுபிடித்துவிட்டதாக மகன்மார்கள் தெரிவித்தனர்.

அவர் கட்சியின் உறுப்பினராகவும், பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங்கத்தின் பிரதித்தலைவராகவும் இருந்தார். எனினும், இறுதி நிகழ்வை எப்படி செய்வது என்பதை அவரது பிள்ளைகளின் முடிவின்படி செய்வது நல்லதென கருதினோம். அவர்கள் எந்தவித சமயசடங்குகளையும் செய்வதில்லை என்பதில் உறுதியாக இருந்தனர். அதற்காக அவர்கள் அவர்களது உறுவினர்களுடன் தொடரந்து இறுதி நிகழ்வுகள் முடியும் வரை விவாதித்து போராடவேண்டியிருந்தது.

பலரும் அஞ்சலி செலுத்திய பிறகு கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.

செந்திவேல் உட்பட மத்திய குழு உறுப்பினர்கள் தோழர் நாராயணனின் உடலுக்கு செங்கொடி போர்த்தி இறுதி வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் கட்சியின் தேசிய அமைப்பாளர் வெ. மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்களும், நண்பர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தினர். கவிதையொன்றும் பாடப்பட்டது. இதன் பின்னர் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் 9 வருடங்களுக்கு முன்னர் அகால மரணமடைந்த மனைவியின் புதைக்கருகில் (அவர்களது குடும்ப மயானத்தில்) நாராயணின் உடலும் சர்வதேசச் பாட்டாளி வர்க்க கீதம் இசைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

## ஆரோக்கியமான அஞ்சலி நிகழ்வுகளின் அவசியம்.

இங்கு சமயசடங்குகளின்றி அடக்கம் செய்யப்பட்டமை குறித்து சமய நம்பிக்கை கொண்டவர்கள் இன்னும் அவர்களது வாயைமென்றுக் கொண்டிருக்கின்றார்கள். பல சந்தர்ப்பங்களில் இதற்கு விடையளிக்கப்பட்டது.

## பாதிக்கபட்டவருக்கு மனவள உதவியாக இறுதி நிகழ்வுகள்

இறப்பு என்பது இறப்பவருக்கு உடல் ரீதியான வேதனையானது. அவர் இறந்த பிறகு அவருடன் நெருக்கமானவர்களுக்கு பலவிதமான காரணங்களினால் வேதனை ஏற்படுகின்றது. அதனை இழப்பு, துன்பம், துக்கம், துயரம் என்றெல்லாம் அழைப்போம். இறந்தவருடன் நெருங்கிய தொடர்புக்கொண்டவர்கள் பிறர் மீது ஆத்திர உணர்வுடையவர்களாகவும், விரக்தியடைந்தவர்களாகவும், குற்ற உணர்வுடையவர்களாகவும், தனிமை உணர்வுடையவர்களாகவும், தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாகவும். வாழ்க்கை மீது வெறுப்படைந்தவர்களாகவும் இருப்பார்கள். சிலவேளைகளில் இறந்தவரின் இறப்பினால் ஏற்படப்போகும் பொருளாதார கஸ்டங்களை எண்ணி இறந்தவரின் மீது குற்றம் காண்பவர்களாகவும் இருப்பர். சிலர் இறப்பை தாங்க முடியாது தற்கொலை செய்ய முயற்சிப்பதுண்டு.

அந்த வேதனையிலிருந்து மீள்வதற்கு துணைப்புரியம் வகையில் இறப்பு நிகழ்ந்தது முதல் இறுதி நிகழ்வுகள் முடியும் வரை நினைவில் இருக்கும்வரை பல விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுண்டு.

இறப்பு என்பதை ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமாக பார்க்கின்றது. மனிதன் கடவுளிடம் சென்றுவிட்டதாகவும், அவனின் ஆத்மா கடவுளின் உலகதிற்கு சென்று வாழ்வதற்காகவே இறுதி கிரியைகள்

செய்யப்படுகின்றன. இவ்வுலகத்தில் இறந்தவர் எவ்வாறு வாழ்ந்தார்; அவரிடமிருந்து ஏனையோர் கற்க வேண்டியவை எவை என்பதை ஆராயாமல் அவர் தவறிழைத்திருந்தால் கடவுள் அவரை மண்ணித்து விடவேண்டும் என்றும் அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்றும் மன்றாடுவதற்காகவே இறுதி நிகழ்வுகள் இடம்பெறுவதுண்டு.

இந்து மதத்தின் படி பிறப்பும், இறப்பும் துடக்காகவே கொள்ளப்படுவதுண்டு. பொதுவாக குழந்தை பிறந்து 30 நாட்களுக்கும் ஒருவர் இறந்து 30 நாட்களுக்கும். பிறப்பும் , இறப்பும் நடந்த வீடுகள் சாதாரணமான உறவிற்குரிய வீடுகளாக அல்லது துடக்கு (தீட்டு) கொண்ட வீடுகளாகவே கொள்ளப்படுவதுண்டு.

## கிரியைகளில்லாமல் இறுதி நிகழ்வு நடத்தும் உரிமை

இவ்வாறான சூழ்நிலையில் மதநம்பிக்கை இல்லாதவர்கள், மதசார்பில்லாதவர்கள், நாஸ்தீகர்கள், கம்யுனிஸ்ட்கள் திருமணம், மரணம் போன்ற நிகழ்வுகளை அவர்களுக்கு ஏற்ப நடத்திக்கொள்வதற்கு, அவர்கள் சிறுபான்மையாக இருக்கும்போதும் ஆதிக்கமற்றவர்களாகவும் இருக்கும்வேளைகளில் இச்சமூகம் இடமளிப்பதில்லை.

மதநம்பிக்கை கொண்டவர்கள் பெரும்பான்மையாக இருப்பதனால் குறிப்பாக இறுதி நிகழ்வுகளின் மதக்கிரியைகளை செய்து இறந்தவரை மத அடையாளத்துக்குள்ளாக்கும் நிலையை அதிகமாக காணமுடியும். மதக்கிரியைகள் செய்யாவிட்டால் இறந்தவரின் உறவினர்களுக்கு தோசமேற்படுவதனால் வாழ்க்கையில் பல விதமான கஸ்டங்கள் ஏற்படுவதாக மதநம்பிக்கையாளர்கள் கூறவதுண்டு. இது ஒருவகையில் இறந்தவரை அவமதிக்கும் செயலாகவே அமைந்துவிடுகிறது. இறந்தவர் அவரின் குடும்பதிற்காகவும் அயலவர்களுக்கும், சமூகத்திற்கும் செய்த பங்களிப்பை மதிப்பிடாமல் அவரின் இறப்பையும் பாவகாரியமாக காட்டி அதற்கு பரிகாரம் செய்யவே மதக்கிரியைகள் செய்யப்படுவதாக குடும்பத்தார் வலியுறுத்துவதுண்டு. மதக்கிரியைகளை செய்த குடும்பத்தினருக்கு ஒப்பீட்டளவில் கூடிய வாழ்க்கை பிரச்சனைகளும் ஏற்படலாம். ஆனால் மதக்கிரியைகளை செய்யாதவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் பூதகரமாக்கப்படுவதுண்டு. மதநம்பிக்கையுடையவர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஜனநாயகபூர்வமாக பிற கருத்துக்களுக்கும், நிலைப்பாடுகளுக்கும் மதிப்பளிப்பதில்லை. ஆனால் மதநம்பிக்கையற்றவர்களும், மதசார்பற்றவர்களும் கம்யுனிஸ்ட்டுக்களும்

மதநம்பிக்கையுடையோரின் உரிமைகளுக்கு குறுக்கே நின்றதில்லை.

இறந்தவரை பாவம் செய்தவரைப்போன்று சித்தரிப்பது பொதுவான மதங்களின் அணுகுமுறையாகும். அதில் இந்து மதப்படி அடுத்தவர்களினால் தீண்டத்தகாத வீடாக இறப்பு சம்பவித்த வீடு அணுகப்படுகின்றது.

சாதியடிப்படையில் கிரியைகள் வெவ்வேறாக செய்யப்படுவதுண்டு. பிராமணக்குருக்கள் இறுதிக்கிரியைகளை செய்வதில்லை. சைவக்குருக்களே அவற்றை செய்வர், 30 நாட்களுக்குப் பிறகு இறப்பு நிகழ்ந்த வீட்டு துடக்கு (தீட்டு) கழிப்பதற்கு பிராமணக்குருக்கள் கிரியைகளை செய்வர். அதேபோன்று பிராமண வீடுகளில் இறப்பு சம்பவித்து 16 ஆம் நாள் துடக்கு நீங்கிவிடும். ஏனையோரின் துடக்கு 30 நாட்களுக்குப் பிறகே நீங்கும். மரணச் செய்தியை அறிவிப்பது, குழிவெட்டுதல், மற்றும் கிரியைகள் தாழ்த்தப்பட்டதாக கொள்ளப்படும் சாதியினரை கொண்டு செய்யப்படும்.

இவ்வாறான மதக்கிரியைகள் இறப்பு நிகழ்ந்த வீட்டாரையும், இறப்பு நிகழ்ந்த வீட்டாருடன் தொடர்புள்ளவர்களையும், அந்நிகழ்வுகளில் பங்கெடுப்போரையும் சடங்குகள், கிரியைகள் சாதிய வழக்காறுகள் போன்றன பெரும் அசௌகரியத்திற்குள்ளாகின்றனர். மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் சடங்குகள் மக்களை கைதிகளாக்குகின்றன. பணம் படைத்தவர்கள் அவர்களின் ஆதிக்கத்தை நிலை நாட்டும் வகையில் கிரியைகளை செய்வர்.

இறப்பினால் துயரடைந்துள்ளவர்களை மேலும் துயரத்திற்குள்ளும், குழப்பத்திற்குள் தள்ளும் மூட நம்பிக்கைகளை கொண்ட, ஏற்றத்தாழ்வுகளை கொண்ட மன அழுத்தங்களுக்குள்ளாக்கும். மதக்கிரியைகளுக்கு மாறான அறிவுபூர்வமான விஞ்ஞானபூர்வமான, பண்பாட்டு நடவடிக்கைகள் துயரடைந்துள்ளவர்களுக்கு மனவளஉதவிகள் போன்று அமையும் பண்பாட்டு நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

### கம்யுனிஸ்ட்டின் வாழ்வும் இறப்பும்

ஒருவர் வாழும்போது மட்டுமன்றி இறந்த பிறகும் அவரின் வாழ்க்கையை முறையாக மதிப்பீட்டு அவருடைய நேர்மறையானதும், எதிர்மறையானதுமான விடயங்களிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்ளும் பழக்கத்தை கம்யுனிஸ்ட்டுக்கள் கொண்டுள்ளனர்.

ஒரு கம்யுனிஸ்ட் வாழும்போது மனிதனால் ஏற்படுத்தப்பட்டுள்ள வர்க்க மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக பலவழிகளில் போராடிக்கொண்டு தனது சொந்த வாழ்க்கையை ஏற்றத்தாழ்வுகள் சுரண்டல் போன்றவற்றின் அடிப்படையில் கட்டாமலும், வாழாமலும் இருக்கின்றான். அப்படிப்பட்ட ஒருவரின் இறுதி நிகழ்வுகளிலும் ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல், மூடநம்பிக்கைகள் போன்றவற்றை வெளிக்காட்டுவனவாகவும், நிலை நிறுத்துவனவாகவும் இருக்கக்கூடாது என்றே விரும்புவான். அதனையே அந்த கம்யுனிஸ்ட்டுடன் அரசியல், சமூக வாழ்க்கையை, வாழ்ந்தவர்களும் விரும்புவர் இதன் மூலம் அவரின் சுயநலமற்ற வாழ்க்கையை மதித்து போற்ற முடியும். இந்த மாதிரியான நடத்தைகள் அவரைப்போன்று வாழ்ந்துக்கொண்டிருப்பவர்களுக்கும், அவரைப் போன்று வாழாதவர்களுக்கும் நம்பிக்கை தரக்கூடியதாக அமையும்.

கம்யுனிஸ்ட்டுகள் அனைவருக்காக ஒருவரும், ஒருவருக்காக அனைவரும் வாழ்வதையே வாழ்க்கையாக, சமூக வாழ்க்கையாக கொண்டுள்ளனர். இந்த வாழ்க்கை சமூகத்திலுள்ள அனைவரும் வாழும்போது சுரண்டல், ஏற்றத்தாழ்வு, சுயநலம், போட்டிப் பொறாமை போன்றவற்றை ஒழிக்க முடியும். என்று நம்புகிறார்கள்.

கம்யுனிஸ்ட்டுகளல்லாதவர்களும் பொதுவாழ்க்கையை கொண்டு இருக்கின்றார்கள். அவர்களின் பொதுவாழ்க்கை என்பது அனைவருக்குமாக ஒருவர் தியாகம் செய்து வாழும் ஒருபக்க கடப்பாட்டை மட்டுமே கொண்டிருக்கின்றனர் அதாவது சுயநலமில்லாத சமூகசேவை செய்வது மட்டுமே வாழ்வு என்ற கருத்தைக் கொண்டு சிலர் செயற்படுகின்றனர். இதில் அவர்களின் தியாகம் மதிக்கப்படவேண்டியதாயினும், சமூகத்தின் ஆதிக்க கட்டமைப்பை சிறிதளவேனும் கேள்விக்குறப்படுத்த அந்த வாழ்வு துணைபுரியாது. பொதுவாழ்க்கையில் இருப்பதாக கூறிக்கொண்டு நடித்துக்கொண்டும் மக்களை ஏமாற்றி அதிகாரத்தில் இருப்பவர்களை விட இவர்கள் மதிப்பிற்குரியவர்களே.

கம்யுனிஸ்ட்டுகள் பிறப்பு, வாழ்வு, அன்பு, பாசம், காதல், இறப்பு போன்றவற்றை விஞ்ஞானபூர்வமாக விளங்கிக்கொள்வதனால் அல்லது விளங்கிக் கொள்ள முயற்சிப்பதனால் அவர்களுக்கு கடவுள், மதநம்பிக்கைகள் இல்லாததுடன் மூடநம்பிக்கைகளையும் எதிர்கின்றனர். பகுத்தறிவாளர்களும், நாஸ்தீகர்களும் மூட நம்பிக்கைகளையும்

எதிர்ப்பதுடன் கடவுள் எதிர்ப்பு, மத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. இடைவிட மதச்சார்பின்மையை வாழ்க்கை முறையாகக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

மதச்சார்பற்றவர்களும், பகுத்தறிவாளர்களும், **நாஸ்தீகர்களும்** மூடநம்பிக்கைகளையும் எதிர்ப்பதுடன் கடவுள் எதிர்ப்பு, மத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. இதைவிட மதச்சார்பின்மையை வாழ்க்கை முறையாகக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். மதச்சார்பற்றவர்களும், பகுத்தறிவாளர்களும், நாஸ்தீகர்களும் மூடநம்பிக்கைகளை எதிர்த்தாலும் அவர்களிடையே முரண்பாடுகளை கொண்டிருப்பர் இவர்களையும் கம்யுனிஸ்டுக்களையும் பிரித்தறிய வேண்டும்.

## நாராயணனின் வாழ்வு

1955 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி வடக்கு பூண்டுலோயா தோட்ட மேல் பிரிவில் நல்லப்பரெட்டியாருக்கும், சொக்காயம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வியை வடக்கு பூண்டுலோயா மேற்பிரிவு பாடசாலையிலும் பின்னர் பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்திலும் படித்தார். வீட்டு பொருளாதார நிலைக்காரணமாக படிப்பை இடைநிறுத்திவிட்டு கொழும்பிற்கு சென்று நகைவியாபாரக்கடையில் வேலைசெய்து, பின்னர் தனது சொந்த நகை வியாபாரத்தில் ஈடுபட்டார். அவரது குடும்பத்தினருக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் (நாங்கள் வடக்கு பூண்டுலோய கீழ் பிரிவில் வசித்தோம்) தொடர்பு இருந்தது. அவரது தந்தையாரும் எங்களது அவ்வாவும் (ஆச்சி, பாட்டியும்) தெலுங்கில் கதைத்துக்கொள்வர். அவருடைய தகப்பனார் சாதியத்திற்கு எதிராகவும், மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் சீர்திருத்தவாத நிலைப்பாட்டினை கொண்டிருந்ததாக அறிய முடிகிறது. வடக்கு பூண்டுலோயா மேற்பிரிவில் கோயில் வழிபாட்டில் சாதிய ஆதிக்கமும், சாதியரீதியான சண்டைகளும் நீண்டகாலம் இருந்தன. அதனை தணிக்கும் வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கென இன்னுமொரு தனியான மாரியம்மன் கோவில் நாராயணனின் தகப்பனின் முயற்சியினால் அமைக்கப்பட்டது.

அவரின் சீர்திருத்த நிலைப்பாடு நாராயணனையும் பாதித்திருந்ததை அறிய முடிந்தது. சாதியத்திற்கு எதிராகவும் வேறு சமூக அநீதிகளுக்கு எதிராகவும் எழுபவராகவும், அவற்றுக்கு எதிரான செயற்பாடுகளில் கலந்து கொள்ளும் செயற்பாட்டாளர்களாகவும் இருந்து வந்துள்ளார்.

நான் 1980 இல் கொழும்பு பல்கலைகழக சட்டபீடத்திற்கு தெரிவாகி சென்றேன். 1981 ஆண்டு பிற்பகுதிக்குப் பிறகு நாராயணனுக்கும் எனக்கும் மிகவும் தொடர்பு ஏற்பட்டது. அவர் கொழும்பு செட்டியார் தெருவில் அவரது மைத்துனரான சந்திராவுடன் சேர்ந்து நகை வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தார். பின்னர் கெனன் ஜுவலரியை அவர் தனியாக நடத்தினார். அக்காலக்கட்டத்தில் அவர் தனது உறவினர்கள், நண்பர்கள் என பலரை நகை வியாபாரத்தில் ஈடுபடுத்தினார்.

1983 யூலை இனக்கலவரத்தில் பல இழப்புக்களுக்கு மத்தியில் அவர் இந்தியாவிற்கு சென்றார். அங்கு எந்தவொரு தொழில் முயற்சியும் செய்யமுடியாது திரும்பிவந்தார். அவர் இந்தியாவில் இருந்த காலப்பகுதியில் அவருடைய கடையில் நான் தங்கி இருந்து எனது பல்கழைக்கழக படிப்பை மேற்கொண்டேன்.

அவர் 1983 யூலை இனக்கலவரத்தினால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீண்டும் வர்த்தகததில் ஈடுபட்டு கெணன் ஜுவலரி வர்த்தகத்தை விரிவுபடுத்தினார். பின்னர் எமரல் ஜுவலரி, மாருதி ஜுவலரி என பங்குடமை வர்த்தகத்தை மேற்கொண்டார் அவரிடம் சொந்தமாக கார், வேன், லொறி, போன்ற வாகனங்களும் இருந்தன.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் ஆதிக்கத்திலேயே இருந்த போட்டி நிறைந்த நகை வர்த்தகத்தில் மலையகத்தோட்டமொன்றின் சாதாரண குடும்பத்திலிருந்து வந்த நாராயணனின் வளர்ச்சி பெரிய சவாலானது வர்த்தக சூழ்ச்சிகள் அவரை ஒன்றுக்கு மூன்றுமுறை மிகவும் பாரதூரமான நட்டங்களுக்குள்ளாக்கி, கஸ்டத்திற்குள்ளாக்கியது.

முதலாளித்துவ சூட்சுமங்கள் கூடிய நிலப்பரபுத்துவ ஆதிக்கம் கொண்ட வர்த்தகத்துறையில் இரண்டு மூன்று முறை வீழ்த்தப்பட்ட போதும் அவர் வாழ்க்கையை தொலைத்து விடவில்லை சுவரிடம் காணப்பட்ட தொழிலாளர் வர்க்க மனிதாபிமானத்தால் சமகால வர்த்தகத்துறையில் நின்று பிடிக்க முடியவில்லை. இரண்டு மூன்று முறை வர்த்தகத்துறையில் அவருக்கு ஏற்பட்ட வீழ்ச்சியின் போதெல்லாம் அவர் ரொசல்லையிலுள்ள மயிலாடி கிராமத்திலுள்ள அவருடைய வீட்டிற்கே சென்று நாளாந்த வாழ்க்கைக்காய் போராடிய போதும் அவரது தொழிலாளர் வர்க்க மனிதாபிமான இருப்பை கைவிட்டுவிட வில்லை. மிகவும் மூர்க்கமாக போராடி வியாபாரக் கொடுக்கள் வாங்கவில்லை நேர்செய்து மட்டுமன்றி அவரது பிள்ளைகளான ராஜன் கோபி அருண் காயத்திரி ஆகியோருக்கான

கல்வியை புகட்டினார். ஆவர்கள் தற்போது அவர்கள் சொந்தக்கால்களில் நிற்கும் நிலையை அவரது நம்பிக்கைக்கூடாக எற்படுத்தினார்.

சீர்த்திருத்தவாத கருத்துக்களை கொண்ட அவர் எனது அரசியல் இலக்கிய செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குபவராக இருந்து வந்தார். குறிப்பாக தேசியகலை இலக்கிய பேரவை 1980 களிலும் 1990 களிலும் கொழும்பில் மேற்கொண்ட நடவடிக்ககைளுக்கு பங்கு கொடுத்தார். ஆவர் எனக்கு பிறந்த ஊர்காரன் குடும்ப நண்பன் சுறைப்பங்கானி என பல வித உறவுகளுடன் இருந்தபோதும் அவர் ஒரேடியாக எனது அரசியல் கருத்துக்களையோ கட்சியையோ ஏற்றுக்கொள்ளவில்லை நானும் அவரை எனது அரசியலுக்கும் கட்சிக்கும் வென்றெடுக்கும் நோக்கத்துடன் பழகவில்லை. அவரது மனைவி மனோரீதியாக பாதிக்கப்பட்டு அகாலமரணமடைந்த போது அவருக்கு பெரிய பாதிப்பெனினும் தொடர்ந்து திடத்துடன் வாழ்ந்து வந்தார்.

அவர் இயல்பாகவே குடும்ப விவகாரங்களிலும் நாளாந்த விடயங்களிலும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக இருந்தார். மனிதாபிமானியாக இருந்தார். அதனால் கட்சியையும் கொள்கையை ஏற்றுக்கொண்டார். 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் கட்சி போட்டியிடுவதென முடிவெடுத்தவுடன் அவர் தேர்தலுக்கு நிதி சேகரித்து கொடுத்தது முதல் பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். அக்காலக்கட்டங்களில் நடைபெற்ற யுத்ததிற்கு எதிரான ஆர்பாட்டங்களிலும் பல நடவடிக்ககைளிலும் ஈடுப்பட்டார். 1997 இல் இரத்தினபுரியிலுள்ள வேவல்வத்தை இடம்பெற்ற இன வன்முறைக்ளுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டதுடன் பாதிக்கப்பட்ட தோட்டத்தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவதிலும் முன்நின்று உழைத்தார். கட்சியின் தொடர்புடைய இடதுசாரி(சிங்களத்தோழர்கள்) தோழர்களுடன் நெருக்கமான உறவை வளர்த்துக்கொண்டு அவர்களுக்கு ஒத்துழைப்பையும் உதவிகளையும் வழங்கினார். 1998 மே ஆண்டு நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் கட்சி புதிய இடதுசாரி முன்னணியின் அங்கமாக போட்டியிட்ட போது நுவரெலியா மாவட்டத்தில் அவரும் போட்டியிட்டு பிரசார வேலைகளை முன்னெடுத்தார். இவ்வாறு படிப்படியாக கட்சியுடன் நெருங்கிய மலையகப்பிரதேச தோழர்களுடன் இணைந்து செயற்பட்டு அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டார். 2006 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பாட்டாளிவர்க்க புதிய ஜனநாயக சங்கத்தின்

பிரதி தலைவர்களில் ஒருவராக செயற்பட்டு வந்தார். கட்சி போட்டியிட்ட தேர்தல்களில் அவர் தொடர்ந்தும் போட்டியிட்டு பங்கெடுத்து வந்தார்.

இவ்வாறு கட்சி நடவடிக்ககைளிலும் வெகுஜனப் போராட்டங்களிலும் ஈடுபட்டார். அவரது மூத்த மகனான ராஜன் சிறையிலிருந்த காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி நடைபெற்ற போராட்டங்களில் பங்கெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மலையக சமூகத்தின் கல்வி பின்தங்கி இருக்கும் நிலையை மாற்றுவதற்கும் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துதற்கும் கூட்டாகவும் தனியாகவும் பல நடவடிக்கைகளை அவர் எடுத்து வந்துள்ளார். பொருளாதாரரீதியாக கஸ்டமான மாணவர்களுக்கு நிதியுதவிகளையும் செய்து வந்தார். அவரது வீட்டில் அவரது மனைவியின் நினைவாக சுந்தரி என்ற பெயரில் அவரின் பிள்ளைகளையும் அவர்களது நண்பர்களையும் கொண்டு மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களை நடத்தி வந்தார். கற்றலையும் கற்பித்தலையும் ஊக்குவிக்கும் வகையில் தேசிய கலை இலக்கியபேரவையின் மலையகப் பேரவையினூடாக நடத்தப்பட்ட பட்டிமன்றங்களை தோட்டங்கள் தோறும் எடுத்துச் செல்லவும் தோட்டங்கள்தோறும் வாசிகசாலைகளை அமைக்கவும் முன்னின்று உழைத்தார்.

மலையக சமூகத்தின் கல்வி வளர்ச்சி, விழிப்புணர்வு என்பவற்றுடன் தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கை தரம், பண்பாடு என்பவற்றை வளர்க்க பாடுபாட்டார் எனலாம். இவ்வாறான ஒரு தொழிலாளர் வர்க்க மனிதாபிமானியின் காலத்திற்கு முந்திய மறைவு எல்லோருக்கும் பாதிப்பானது. இவரது சமூகபங்களிப்பை விளாவாரியாக மதிப்பிடுவதன் மூலம் நாம் சமூக சிந்தனை, சமூக நடவடிக்கைகளுக்கு ஊக்கியாக இருக்கலாம்.

# நாராயணனன் ஐயாவின் உணர்வும், மறைவும்

ஆயிரம் மரங்கள் இம்மண்ணில்
தோன்றிமறைந்தாலும்
அதன் பரம்பரைகள் என்றும்
நிழல் கொடுக்கும்

இந்த மண்ணிற்குள் மறைந்தது
அவரின் உடல் மட்டுமே தவிர
அவரின் உணர்வுகள் மறையவில்லை
மீண்டும் இம்மண்ணில் நிச்சயம் மலரும்

வர்த்தகராய் தான் வசதியாய் வாழ்ந்தாலும்
ஏழை மக்களை ஏளனமாய் பாராது
நம்மில் ஒரு தோழன் என தோள் கொடுத்த
மனிதர் இவர்

ஆடம்பரமாய் தான் ரசித்து வாழ்ந்து வந்த
அழகிய அந்த வாழ்க்கை
நயவஞ்சகர்களால் திசைமாறிய போதும்
தன்னம்பிக்கையால் தலை நிமிர்ந்தார்

பாமர மக்களின் வாழ்க்கை
பயணத்தை மாற்றி அமைக்க
புதிய பயணத்தை தொடர்ந்த
உண்ணத மனிதர் இவர்

கவி அழகிற்காய் நான் ஏதும் கூறவில்லை
இம்மனிதர் மறைந்த கவலையிலே
கவலையுடன் அலைபோலகுறித்த
கூட்டத்தின் புலம்பலையே எழுதினேன்.

**என். கஜன்**
**பார்கேப்பல்**

# பெரியப்பாவிற்காக...



பூவை போன்ற மனமும்

என்றும் புன்சிரிப்பும்

தேர்ந்த கலையும்

கொண்ட பெரியாரே

வானம் இருண்டால் கூட

மாறாத உங்கள் அன்பு

இன்று எமக்கில்லை

என வருந்தும் நம்

பூவுலகை விட்டு

மரத்தை போல் சாய்ந்தீர்கள்

**என்றும் கண்ணீரோடு**

**சொல்லும் இணைப்பிரியா பிள்ளைகள்**

# ஐயாவிற்கு ஒரு மடல்

அன்புள்ள ஐயாவுக்கு. நான் நலம் உங்கள் நலம் அறிய அவா?

அம்மா எப்படி இருக்காங்க ஐயா. அம்மா தனியா இருக்காவுத்தான் எங்களை விட்டுப்போயிட்டிங்களா ஐயா? உங்கள் பிரிவு எங்கள் எல்லோரையும் நிலைக்குலைய வைத்துவிட்டது. இன்னும் கொஞ்ச நாள் இருந்திருக்கலாமே ஐயா.

உங்களை போல தந்தை கிடைக்க நாம் என்ன புண்ணியம் பண்ணினோம் என்று தெரியவில்லை.

ஐயா. நாங்கள் எங்களை பிறந்தது முதல் எங்களை நீங்கள் வளர்த்த விதம் தொடர்பாக ஒவ்வொரு விடயத்தையும் எங்களிடம் பகிர்ந்துகொண்ட விதம் எல்லாமே ஒரு சராசரி தந்தையை விட மேலாக இருந்தது. நீங்கள் உங்களை எங்களிடம் ஒரு தந்தையாக காட்டிக்கொண்டதை விட ஒரு நண்பனாக இருந்ததுதான் எம்மிடையே நினைவில் இருக்கிறது. ஒரு பிள்ளையை எவ்வாறு வளர்ப்பது. எவ்வாறு வழி நடத்துவது என்பதற்கு எல்லாம் நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறீங்க ஐயா.

ஐயா. நீங்க அம்மா மேல் வைத்திருந்த அன்பு. காதல். மரியாதை எல்லாமே நீங்கள் ஒரு சிறந்த கணவன் என்பதற்கான அடையாளம் அம்மாவின் பிரிவின் பின்னர் நீங்கள் மனரீதியிலும். உடல் ரீதியிலும் நிறைய பாதிக்கப்பட்டதை எம்மால் உணர முடிந்தது. இதை எல்லாவற்றையும் மீறி நீங்கள் எங்களை வழிநடத்த தவறவில்லை. அம்மாவின் இழப்பை நீங்களே ஈடு செய்து. எமக்கு சந்தோசத்தை காட்டி வளர்த்தீங்க. நீங்க இருக்கிறீங்க என்ற தைரியத்தில் இவ்வளவு நாள் வாழ்ந்திட்டோம் இனி நீங்க இல்லாத நாட்களை எவ்வாறு கடக்க போகின்றோம் என்று புரியவில்லை.

ஐயா. நீங்க சாதாரண தோட்ட தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்து மிகவும் கடுமையாக போராடி ஒரு நல்ல நிலைக்கு வந்தவர். உங்களுடைய வளர்ச்சிக்கு உங்க தன்னம்பிக்கையும் முயற்சியும் தான் காரணம் ஒரு செயலை தொட்டால் அதை என்ன பாடுபட்டாவது முடிக்க வேண்டும் என்ற தைரியத்தை உங்களிடம் கற்றுக்கொள்ள முடிந்தது. உங்களிடம் ஒரு எளிமையை காணமுடிந்தது.

ஐயா. நீங்கள் செய்த தொழிலையே நானும் செய்ய வேண்டும் என்ற விருப்பில் இந்த தொழிலுக்கு வந்தேன். எனக்கு செட்டியார் தெரு புதிய அனுபவமாக

இருந்தது. பழகிய இடமாக இருந்தாலும் நீங்கள் இருந்த நிலையை அடைய வேண்டும் என்ற குறிக்கோளோடு வந்தேன். அங்கு வந்ததற்கு பிறகுதான் என்னால் முழுமையாக உங்களது உழைப்பையும் முயற்சியையும் உணர முடிந்தது.

ஐயா. தொழில் ரீதியாக நீங்கள் தோற்று விட்டதாக பலரும் கதைத்தார்கள் ஆனால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வியாபார தொழிலில் இலாபம் அடைந்தால் மட்டும் தான் வெற்றி என்று நினைக்கிறார்கள். இன்றைய காலக்கட்டத்தில் இலாபம் பெற எதையும் செய்ய துணிகிறார்கள். ஒருவரை அழித்து இலாபம் பெற்று வியாபார தொழிலில் வெற்றி பெறுவது வெற்றியல்ல.

ஐயா. நீங்க என்ன நினைத்தீர்கள்? எல்லோரும் நல்ல நிலையில் இருக்க வேண்டும்; அந்த பண்போடுதானே தொழில் செய்தீர்கள். இன்று உங்கள் வழிநடத்தலின் கீழ் வந்த நியைபேர் நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஐயா இதுவும் தொழிலின் வெற்றிதான்.

ஐயா. இன்று நீங்கள் இல்லாவிட்டாலும் ஊரோடு நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிய முடிகிறது.

ஐயா. தொழில் ரீதியில் நீங்கள் தோல்வி அடையவில்லை. சிறிய பின்னடைவை கண்டீர்கள் அவ்வளவுதான் அதை மீள்கட்டி எழுப்பும் காலம் வெகு தொலைவில் இல்லை.

அதேபோல நீங்கள் எம்மை சார்ந்த சமூகத்திற்கு செய்ய வேண்டும் என்று எண்ணிய கடைமைகளை உங்கள் சார்பில் நாங்கள் தொடர்ந்து செய்வோம் என்று உறுதி அளிக்கிறோம் ஐயா.

ஐயா. இறுதியாக ஒரு விடயம்; "இனி எத்தனை தடவை மண்ணில் நாம் பிறந்தாலும் உங்களுக்கே பிள்ளையாக பிறக்க வேண்டும்" என்று தயவுடன் கேட்கிறேக். நாம் உங்களிடம் தவறவிட்ட காலங்கள் விடயங்களை இன்னொரு பிறப்பிலாவது பூர்த்தி செய்ய விரும்புகிறோம்.

இந்த பிறப்பில் நீங்கள் விட்டுச் சென்றதை நாங்கள் உங்கள் துணையுடன் வெற்றிகரமாக தொட்டுச்செல்வோம் என உறுதியுடன் கூறி இந்த மடலை முடிக்கிறேன்.

அன்பு மகன்

கோபி

# சரஸ்வதி சபதம்

எல்லோருக்கும் கல்வி
வெறும் சுலோகமாய்
ஏட்டுச்சுரக்காயாய்
எம்மை ஏமாற்றும் வித்தையாய்
பழங்கதையாய் போனது.

பணம் இருப்பவருக்கே கல்வி
உலகமயம் தந்த பாடம்
கல்வி, செல்வத்திடம்
தோற்றுப்போய்விட்ட
காலத்திற்கு
நினைவஞ்சலி செலுத்த வாரீர்.

நுகர்வு மட்டுமே என
வாழ்விற்குள் நுழைந்தவைகளால்
பகுத்தறிவும், கல்வியும்
மூலதன்மாக போக்கிரிகளிடம்
போய்ச்சேர்ந்துக்கொண்டது.

மூலதனமாகவன்றி
என் திறன் வளர்க்க
எம் எல்லோருக்கும் கல்வி என்று
முதுமொழி பேசுவோம்.
பொதுமொழியாக்குவோம்.
கல்வியை காப்பாற்ற - ஒரு
சரஸ்வதி சபதம் மட்டுமே
போதுமாய்ப்படவில்லை.

பிருத்திவி

# அண்ணா எங்கள் ஆசான்

முறைசார் கல்வியில் தேர்ச்சிபெறாத அதிகமானோரை நீங்கள் நகை வியாபாரத்தில் பயிற்றுவித்து, வழிகாட்டியாகவும், ஆசானாகவும் இருந்துள்ளீர்கள். அந்த அதிகமானோரில் நானும் ஒருவன்.

தாய் தந்தை முகம் காணாத எனக்கு நீங்கள் சகோதரன் என்பதை விட பெற்றோராகவே இருந்துள்ளீர்கள். உங்கள் தைரியம் வாழ்க்கையின் நம்பிக்கை வேகம், கடின உழைப்பு பிறர் மீது அன்பு போன்றன பாரிய பொருளாதார கஸ்டங்கள் வந்தபோதும் மாறவில்லை. அது எனக்கு முன்னுதாரணமாக இருக்கின்றது. அநீதியைக் கண்டு எழும் உங்களின் பண்புகள் நீதிக்காக போராடும் விடுதலை சுதந்திரம் வேண்டும் அனைவருக்கும் எடுத்துக்காட்டாகும். நீங்கள் என்னுடன் நெருங்கிய நண்பனாக பழகியதையம் என்னால் மறக்க முடியவில்லை. உங்களின் இறுதி நாட்களில் உங்களுடன் இருக்க கிடைத்தமை எனது தாய் தந்தையின் இறுதி நாட்களில் இருக்காத குறையை போக்கியது போன்று உணர்கிறேன்.

**தம்பி**
**ந.ஜெயரட்னம்**
**(உங்கு)**

மக்கள் மக்கள் மட்டுமே
உலக வரலாற்றை சிருஸ்டிக்கும்
உந்து சக்தி ஆவார்

- மாவோ -

# பன்மை கொள்வோம் பாடீரே

நீ நீங்களாகவும்
நான் நாமாகவும்
ஆவதில்தான் பலம்

▸▸ ▸▸ ▸▸

ஒரு கணம்...
சீனா செம்மை போர்த்ததும்
வியட்நாம் வீரியமானதும்
பன்மையின் பலம் தான்

▸▸ ▸▸ ▸▸

அடம்பன் அதன வழியில்
சென்றிருந்தால்
சிற்றெரும்பு சீரற்று
நகர்ந்திருந்தால்
காகந்தன் கூட்டம் சேரா
போயிருந்தால்
மோதுண்ட நீரும்
முட்டலுக்கும் மோதலுக்கம்
பயந்து நின்றிருந்தால்
பலம் சொல்ல பாதை...?

▸▸ ▸▸ ▸▸

ஒருமையாயிருப்பதில்
ஒன்றுமில்லையெனும் பொழுது
பன்மையாயாகி
பலம் கொள்ள பயமேன்...?

ஆலம் அதன் விருட்சத்தில்
இலையை பன்மையாக்கி
கிளைகள்
கொண்டு நின்றதில் தான்
வெற்றிகண்டது.

தன்னை நிலை நிறுத்தும்
தன்மை பெறுவதில்
வேரைப்பாய்ச்சி
வித்தைப்பாய்ச்சி
வித்துப்பலபெற்று தன்
விலை நிலத்தில் பலம்பெற
மீண்டும் மீண்டுந் துடிக்கிறதே.

▸▸ ▸▸ ▸▸

ஆலம் போலாய்...
நிழலுக்கு அகலஞ்சேர்க்கும்
நிகழ்வில் மூழ்கல் கொள்வோம்
சோர்வுறும் உயிர்காயும்
புத்துயிர் பெறலில்
புத்துணர்வுடன் சங்கமிப்போம்.
அமைதியான பொழுதுகளிலும் !

**செம்மலர் மோகன்**

**அன்புள்ள ஐயா,**

உங்கள் அன்புக்குரியவன் எழுதும் மடல் இது என் மடலை வாசிக்க நீங்கள் இல்லை என்பது என் அறிவிற்கு தெரியும் ஆனால் அதனை முழுமையாக ஏற்கும் மனப்பக்குவம் எனக்கு இன்னும் வரவில்லை.

நீங்கள் சுகவீனமுற்று சில நாட்கள் மட்டுமே எம்முடன் வாழ்ந்தீர்கள் நாம். சில நொடிகளிலேயே இழந்து விட்டோம். உடலால் மட்டுமே நீங்கள் எம்மை பிரிந்தீர்கள் உணர்வுகளால் இன்னும் எம்முடனேயே வாழ்கின்றீர்கள்.

நாம் பழகியது சில வருடங்கள் தான் ஆனால் நாம் பழகிக்கொண்ட ஒவ்வொரு நொடியும் எனக்கு பெருமிதமானது பெறுமதியானது உயிருள்ளவரை என்னுடன் வாழ்வது.

ஏனெனில் உங்கள் அனுபவத்தினை உங்கள் உயர்வுகளை, உங்கள் எதிர்பார்ப்புக்களை வாழ்க்யையின் அனுபவங்களினை பகிர்ந்தவை. அந்த ஒவ்வொரு நொடியும் ஒரு அனுபவம் மிக்க வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்த ஒரு உழைப்பாளியின், மார்க்ஸிஸத்தினை ஏற்று வாழ்ந்த ஒரு நேர்மையான மனிதனின் அனுபவப் பகிர்வல்லவா அது.

நயவஞ்சகமாக சுரண்டி வஞ்சனை செய்தே வாழும் மனித உலகிலே, சுயநலமிகள் அதிகமாக இருக்கும் வியாபார உலகிலே நீங்கள் எவ்வாறு ஒரு பொதுநலவாதியானீர்கள்? உங்கள் சுயநலமென்பது பொது நலம்தானே பணமும் பொருள் சேர்வதுதான் வாழ்க்கையென்று பலரும் ஓடுகின்றனர். நீங்கள் மட்டுமே ஏனோ மார்க்சிச வாழ்க்கையை ஏற்றீர்கள். அது சரியான வாழ்க்கை என்பதனை உறுதியுடன் நம்பினீர்கள். உழைப்பின் மகிமையை உணர்ந்தவர் நீங்கள். உழைப்பாளே உயரந்தவரும் நீங்கள்; அதுதான் நீங்கள் உழைப்பாளர்களையும், விவசாயிகளையும் உயர்வாய் எண்ண வைத்த காரணமா? ஒரு அற்புதமான மனிதனை நான் இழந்து விட்டேன்.

நாம் அலவளாவிய அந்த நிசப்தமான இனிய இரவுகள் மீண்டும் வராதுதான். ஆனால் அவை உயிருள்ளவையல்லவா? எந்நாளும் என் நினைவில் வாழும். சுகவீனமாக உள்ள நேரத்தில் கூட நீங்கள் என்னால் கடுமையாக உழைக்க முடியும். நான் உழைப்பினை மட்டுமே நம்புகின்றேன். என்று உறுதியான மனநிலையுடன் கூறுவீர்கள்.

நான் மார்க்ஸிய வழியில் நிற்பவன். அதனை நான் ஏற்றவன் மார்க்ஸிய வழியில் நேர்மையாக வாழ்ந்தால் நாம் எதனையும் சாதிக்கலாம். என்று அடிக்கடி கூறுவீர்கள்.

"மார்ஸிய வாழ்வுதான் சிறந்தது" என்று சொல்லாமல் மட்டுமன்றி வாழ்ந்தும் காட்டினீர்கள்.

எப்போதும் நீங்கள் மலையகம் பற்றியே அதிகம் பேசுவீர்கள் மலையக மண்ணையும் மக்களையும் ஏனோ மற்றவைகளைவிட அதிகம் நேசித்தீர்கள். அது உழைப்பின் மீதுள்ள மரியாதை போலும்.

மலையக மக்களின் உணவு பழக்கத்தினையும் எம்மக்கள் பெறவேண்டும். என்று அடிக்கடி கூறுவீர்கள்.

மலையகம் பற்றி நீங்கள் கதைத்தது நான் என்று ஒன்று இருக்காது என்பது எனது அனுபவம் கல்விக்காக எதையும் செய்யலாம் என்பது உங்களின் எண்ணம் மார்க்ஸிய கல்வியால் எதையும் சாதிக்கலாம் என்பது உங்களின் அசையா நம்பிக்கை. கல்வி சேவையாக நீங்கள் தரமான கல்வி வழங்க வேண்டும் என்ற நன் நேரத்தில் வீட்டிலேயே கல்வியகம் உருவாக்கியதில் அடைந்த திருப்தியை வேறெதிலும் பெற்றிருக்கமாட்டீர்கள்.

நெஞ்சுறுதி என்றால் அது உங்களுடன் உடன் பிறந்ததுவோ? என்னுடன் நீங்கள் பகிர்ந்து கொண்டவரை துன்பகரமான வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ்ந்தீர்கள் வறுமையை உழைப்பால் வென்றவர் நீங்கள்.

எந்தவொரு சவாலையும் உறுதியுடன் எதிர்கொண்டீர்கள்; எந்த பிரச்சனையையும் நிதானமாக கையாண்டீர்கள்.

ராஜன் சிறையில் இருந்த காலப்பகுதியில் உங்கள் மனஉறுதியையும், நிதானத்தையம், பொதுவாழ்வில் கொண்ட அக்கறையையும் அருகில் இருந்து கண்டுள்ளேன் ஒரு தந்தையாக, ஒரு நண்பனாக ஒரு சிறந்த வழிக்காட்டியாக நீங்கள் வாழ்ந்தவர். ஒரு தந்தையாக பிள்ளைகளினை பொது வாழ்வில் ஈடுபடவும், சவால்களுக்கு முகம் கொடுக்கவும் தைரியத்தையும், வாழ்வில் நற்பண்பினையும், பழக்கவழக்கங்களினையும் அளித்தவரல்லவா? வறுமையிலும், சவாலான காலப்பகுதியிலும் நம்பிக்கையுடன் வாழ தைரியத்தினை அது அளித்துள்ளது.

மின்விளக்கில்லாத வீட்டில் நிசப்தமான இரவில் உங்களுடன் அலவளாவியவை. காணியை சுற்றி களைப்பாற நடந்து பேசியவை இன்னும் எனக்குள்ளே ஒலிக்கிறது. ஒரு சிறந்த வழிக்காட்டியை, ஒரு அற்புதமான மனிதனை ஒரு நல்ல நண்பனைத்தான் இழந்துள்ளேன்.

நான் பழகியவரை உங்கள் நண்பர்கள் கூறியவரையில் பிள்ளைகள் பகிர்ந்துக்கொண்டவரையில் தொழில் வாழ்வினும் பொது வாழ்விலும் ஒரு நேர்மையான மனிதனாயிருந்துள்ளீர்கள்.

குடும்ப வாழ்வில் ஒழுக்கமும் நேர்மையும் உள்ள வழிக்காட்டியாக இருந்துள்ளீர்கள் நீங்கள் ஒரு முழு வாழ்க்கையை வாழ்ந்துள்ளீர்கள். ஒரு நியாயமான மனிதனாக சமூகத்திற்கும், குடும்பத்திற்கும் கடமைக்கு மேலாக செய்துள்ளீர்கள். இனி செய்ய வேண்டியதென்று ஒன்றுமில்லையே உங்கள் பொறுப்புகளை நாம் ஏற்கிறோம். நிம்மதியாக போய் வாருங்கள். பிரிவென்றொன்று நமக்கில்லை. நிம்மதியாய் போய்வாருங்கள்.

மனிதன் என்ற விலங்கிற்கு பகுத்தறிவும் மனசாட்சியும் வேண்டும். நீங்கள் முழு மனிதனாக வாழ்ந்தீர்கள். நாம் உங்களினை பார்த்து மனிதனாக வாழ முயற்சிக்கிறோம்.

**நான் மனிதனாக வாழ்வேன் என்ற**
**நம்பிக்கையுடன் முடிக்கிறேன்.**

**தோழமையுடன்**
**இரா. ரஞ்சன்**

கலாச்சாரம் இல்லாத ஒரு படை
மந்த புத்தியுடைய ஒரு படையாகும்
ஒரு மந்த புத்தியுடைய படையாக
எதிரியை தோற்கடிக்க முடியாது

– மாவோ –

# தந்தையின் பங்கு

**ஒருவருடைய வாழ்வியலின் போக்கை தீர்மானிப்பதில் அவர் வாழும்** காலம், சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு கலாச்சார சூழலே **தாக்கம் செலுத்துகின்றது. ஆனால் ஒரு பிள்ளையின் வாழ்க்கையில்** மேற்கூறிய காரணிகளை செப்பணிட்டு சமூக அரங்கிற்கு முன்னுதாரமான **சமூக பிரஜையை உருவாக்கவதில் ஒரு தந்தையின் பங்கு** முதன்மை பாத்திரம் வகிக்கிறது எனலாம்.

**தந்தையர் நாடெனும் போதினிலே**
**ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே..**

என்று பாடுவர் மகாகவி என்வே தான் தந்தையானவர் ஒரு பிள்யையின் வழிதடத்தை செப்பணிடுவதிலே பல்வகை பாத்திரம் ஏற்பவராக இருக்கின்றார். அவ்வாறான ஒரு தந்தை உண்மையாக தன் பிள்ளையின் வாழ்க்கை கோலத்தை உருவாக்குவதில் இந்த சமூக யாதார்த்தத்தைஎந்த கண்ணோட்டத்தில் விளங்கி செயல்படுகின்றார் என்பதிலேயே அவரின் உழைப்பின் சமூக கணதி தங்கியுள்ளது எனலாம். அந்தவகையில் இன்றைய எமது வாழ்வியல் சூழலானது ஆதிக்க போராட்டத்தின் கெடுபிக்குள் சிக்கி மேலாதிக்கம் தன் இருப்புக்காக திணிக்கும் இழிநிலை பண்பாட்டு சீரழிவிற்கும் உலக மயமாக்கத்தின் நுகர்வு கலாச்சார மோகத்திற்கும், சுரண்டல் பொருளாதார ஆதிக்கத்திற்கும் ஆட்பட்டுக்கிடக்கின்றது. எனவே இத்தகையதோர் சமூக பின்னனியில் சாதாரண உழைக்கும் மக்கள் தொட்டு அறிவு ரீதியாக வளர்ச்சி பெற்றவர்கள் ஈராக ஒட்டு மொத்த சமூகமும் முதலாளித்துவ உலமயமாக்கல் சிந்தனை திணிக்கும் தனி மனித ஈடேற்றம் நோக்கிய அதனுடைய நிகழ்ச்சி நிரலுக்குள் சுற்றி சுழன்று கொண்டிருக்கின்றார்கள்.

ஏகாதிபத்திய உலக மயமாக்கல் இன்று ஒவ்வொரு குசுனிக்குள்ளும் புகுத்திற்கொண்டு எம்மை ஆட்டுவித்து எமது ஒவ்வொரு அசைவையும் தீர்மானிக்கும் சக்தியாக மிக வேகமாக பரவி வருகின்றது. ஒரு புறம் நவீன விஞ்ஞான வளர்ச்சி என்ற பெயரில் கொண்டு வந்து கொட்டல்படுகின்ற பண்பாட்டு சீரழிவுகள். இளம் தலைமுறையினரை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படுகின்ற நாசகார அழிவுகள் மனித வாழ்வுகான சுற்றுப்புற சூழலை சிதைத்து

நீர், காற்று இயற்கை வளங்கள் அனைத்தையும் பாழடித்து எதிர்கால வாழ்க்கையை கேள்ளிவிக்குறியாக்கி நின்கின்றது. இன்னொருபுறம் சுரண்டல், இனவொடுக்கம், மொழி, பண்பாட்டு கலாச்சாரம் தொட்டு ஒட்டுமொத்த சமூக இருப்பின் மீதான மேலாதிக்க வண்மம் காட்டு மிராண்டித்தனமாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இவ்வாறானதோர் சமூக பின்னனியில் பெற்றவர்கள் தங்களுடைய பிள்ளையின் வாழ்க்கை பயணத்தில் ஆற்றக்கூடிய பங்கு எத்தகையது. குறிப்பாக இன்றைய சமூக வழக்காற்றில் முதன்மை படுத்தப்படுகின்ற தந்தையின் பங்கு எத்தகையது என்ற கேள்வி முதன்மை பெறுகின்றது.

ஏனெனில் ஒவ்வொரு பெற்றோரும் தம் வாழ்நாளில் முக்கால் வாசிக்காலம் ஓடித்திரிவது தம் பிள்கைளின் நல்வாழ்விற்காகவே ஆனால் அவர்களின் அந்த அயராத உழைப்பை எவ்வாறான நோக்கத்தை மையமாக கொண்டது என்பதை ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில் இன்றைய யாதார்த்த வாழ்வியல் பண்பாடானது. அன்பு, பாசம், கருணை, மனிதநேயம் என்பவற்றை மறுத்து சுகாதாரம், சுயகௌரவம், சுய உழைப்பு என்பவற்றை மறந்து பணத்தை சுற்றி எழுந்து நிற்கக் கூடிய தனி மனித ஈடேற்றத்தை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளது. எனவே இன்று ஒவ்வொரு பெற்றோரும் நினைப்பது. தங்கள் பிள்ளைக்கு கோடி கோடியாக பணம் சேர்க்க வேண்டும். இன்று எம்மீது பலவந்தமாக திணிக்கப்பட்டு வரும் இந்த ஏட்டுக்கல்வியை பிள்ளைகளின் சுய விருப்பத்திற்கும் அப்பால் திணித்து அவர்களை கல்வியில் உயர்ந்தவர்காளாக மாற்றி விடவேண்டும் என்பதே. ஆனால் பெற்றவர்களால் ஊட்டி வளர்க்கப்படும் சிந்தனையின் உச்சம் அவர்களின் உழைப்பை மென்று விழுங்கி சுய நலப்போட்டியில் உச்சத்திற்கே தள்ளி விடுவதை பெற்றவர்கள் புரிந்துக்கொள்வதேயில்லை.

ஒருவனுடைய வாழ்க்கைக்கு கல்வியும் பொருளாதாரமும் அவசியமே ஆனால் கல்வி என்பது ஒருவனுடைய வாழ்வியல் சமூக பண்பாட்டு சூழலுக்கும் சுய ஆற்றல் விருத்திக்கும் பல அனுபவ திரட்சியாகவே அமைய வேண்டும் அதே வேளை சுய உழைப்பின் இறுதி விளைவாக ஒருவனுடைய வாழ்க்கையை செப்பனிட்டுக்கொள்ளக்கூடிய வருமானம் போதுமானது.

ஆனால் ஒருவனுடைய வாழ்க்கையில் ஆரோக்கியமான வாழ்விற்கு தேவையான சுகாதாரம் மிக்க இயற்கை சூழலும் சுயதிபத்தியதுடனும் சுய கௌரவத்துடனும் வழக்கூடிய சமூக சூழலுமே மிக அவசியமானது. இவை சரியாக அமையுமிடத்து வாழ்க்கை தேவையான அறிவாற்றலையும் பொருளாதாரத்தையும் இயல்பாகவே பெற்றுக்கொள்ளக்கூடிய சூழல் உருவாகும். இந்த உண்மை பல பெற்றவர்களால் மறுக்கப்பட்டு வருகின்றது. அவர்கள் நினைப்பதெல்லாம் பணம் ஒன்றே பிள்ளையின் எதிர்காலத்திற்கு போதமானது என்பதே. அதை பெற்றுக்கொள்ளக்கூடிய கல்வியை எப்படியாவது அவர்களுக்கு திணித்து விட்டால் தம்து கடமை முடிந்து விடும்.

ஆனால் யதார்த்தம் வேறுவிதமாக இருந்து வருகின்றது. இன்று எமது இயற்கை வளம் முற்றுமுழுதாக சூரையாடப்பட்டு வருகின்றது. முதலாளித்துவம் அதிகார இருப்பின் போட்டி நீர், நிலம், காற்று அணைத்தையும் நஞ்சாக்கி விட்டிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் பூமியின் வெப்பம் அதிகரித்து வருகின்றது. இன்னும் 50 ஆண்டுகளில் ஒரு சொட்டு குடிநீருக்காக ஏங்கும் நிலைவரப்போகின்றது. காலநிலை தலைகீழாக மாறிவிட்டிருக்கிறது. ஆனால் இவற்றை பாதுகாக்கவோ இதிலிருந்து மீட்சிபெறவோ எந்த அறிவியல் பண்பாட்டு வேலைத்திட்டமும் இன்றைய கல்வி செயற்பாட்டில் கிடையாது மாறாக எம்மீது திணிக்கப்படும் கல்வி சுயசிந்தணை, சுய ஆற்றல், சுயகௌரவம் என்பவற்றை மழுங்கடித்து நவீன கூலி, அடிமைப்பட்டாளம் ஒன்றை உருவாக்குவதையோ அடிப்படையாக கொண்டியங்கிவருகின்றது. அதில் அது வெற்றி பெற்றுவருகின்றது. எனலாம்.

மறுபுறத்தில் சமூக அரசியல் செயற்பாடானது பெரும்பாண்மையான உழைக்கும் மக்களையும் அபிவிருத்தி அற்ற சமூகம் முழுவதையும் கையேந்தி அடிமை விசுவாசமிக்கவர்களாக வைத்துக்கொள்வதில் தன் ஆதிக்க நலன் சார்ந்த நிகழ்ச்சி திட்டத்தை பலமுணைகளில் மிக பலமாக உற்புகுத்தி வருகின்றது.

எனவே தான் குடும்பமைய வாழ்க்கை முறையை கொண்ட எமது வாழ்வியல் அம்சத்தின் ஒரு தந்தையின் பங்கு அவர் தம் பிள்ளை வாழ்கையின் வழிநடத்தி இந்த பிற்போக்கு இழிநிலை கலாச்சார சூழலில் ஆதிக்க நலன் சார்ந்து அடிவருடி நிற்கும். நிலையை நோக்கி

அமைத்து தரப்போகிறார்கள் அல்லது இந்த சமூக யாதார்த்தத்தை புரிந்து தமக்காகவும் சமூகத்திற்காகவும் வாழக்கூடிய ஒரு சமூக பிரஜையை உருவாக்குவதற்கான சூழலை உருவாக்கி கொடுக்கப்போகிறதா என்பதிலேயே தங்கியிருக்கின்றது.

ஆனால் பெரும்பாலான பெற்றார்கள் சுழன்றடித்து உழைக்கும் உழைப்பின் யாதாரத்தத்தை ஒரு புது கவிஞனின் கவிதை மிகத்தெளிவாக சொல்கின்றது.

*கடைத்தெருவாக இருக்கட்டும்*
*திருவிழாவாக இருக்கட்டும்*
*எங்கு சென்றாலும் - உன் கைப்பிடித்தே*
*அழைத்துச்செல்வேன் - நீ*
*தொலைந்து விடக்கூடாது என்பதற்காய்*
*காலம் மாறி கைமாறாய்*
*நீ என் கைப்பிடித்து அநாதை*
*இல்லம் விட்டு*
*சென்றபோதும்*
*உன்னையே*
*பார்த்துக்கொண்டிருந்தேன்*
*நீ*
*தொலைந்து விட கூடாதென்பதற்காக*

எனவே தான் இவற்றுக்கு மாறாக தெளிந்த சிந்தனையோடு தன் வாழ்க்கை பாதையை புரிந்துக்கொண்டு அதன் பட்டறிவில் இருந்து தன் பிள்ளைகளையும் தன்னை சார்ந்து நின்ற சமூகத்தினருக்கும் சரியான வழியை காட்டிச் சென்றிருக்க கூடிய தோழன் நாரயணனின் வாழ்க்கை இன்றை பெற்றோர்கள் முன்னுதாரனமாக கொள்ள வேண்டும்.

**-வெ. மகேந்திரன்-**



தோழர் நாராயணன் மற்றும் அவரது துணைவியார்



தனது நன்பர்களுடன் தோழர் நாராயணன்



தனது நன்பர்கள் மற்றும் பிள்ளைகளுடன் தோழர் நாராயணன்

# சமூக மாற்றத்திற்கான பண்பாட்டு அடையாளங்களை நோக்கி

**ஜே. சற்குருநாதன்**

"பாட்டாளி வர்க்கம் அரசியல், பொருளாதார ரீதியாக ஒன்றிணைந்து வர்க்க அடிப்படையில் போரடுவதைப்போல முற்போக்கான பண்பாட்டு அம்சங்களை இணைத்துகொண்டும் போராடவேண்டும்" என்பது இத்தாலிய மாக்சிய அறிஞர் அந்தோனியோ கிராம்சியின் கருத்தாகும். பண்பாடு என்பது ஒரு சமூகம் தனக்கென கொண்டுள்ள பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், உணவு பழக்கவழக்கங்கள், மரபுகள், நம்பிக்கைகளின் கூட்டுத்தொகுதியாக அமைகின்றது.

இவ்வாறான பண்பாட்டை ஒரு சமூகம் கட்டியெழுப்பும் போது இரண்டு வகையான அடையாளங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆதிக்க அம்சங்களையும் வர்க்க மேலான்மையையும் பேணுகின்ற பண்பாட்டு அடையாளம் ஒன்று ஆகும். மற்றையது அடிநிலை மக்களின் நிலையை விளக்கும் பண்பாட்டு அடையாளங்களாகும். மேலும் மத்திய தர வர்க்கம் கட்டமைக்கும் பண்பாட்டு அம்சங்களும் இதனுள் அடங்கும். இப்பண்பாட்டு அம்சங்களின் முன்னேறிய வடிவங்களை பாட்டாளி வர்க்கம் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென கிராம்சி குறிப்பிடுகின்றார். ஆதிக்க பண்பாட்டு அம்சங்களுக்கு உதாரணங்களாக இந்திய சமூகத்தில் பார்பனிய ஆதிக்கத்தையும் கருத்தியலையும் குறிப்பிடலாம். இதனை பின் நவீனத்துவவாதிகள் 'பெருங்கதையாடல்' என அடையாளப்படுத்துவர். ஆதிக்க சக்திகள் தங்கள் மேலான்மையை பேனுவதற்கு பண்பாட்டை கட்டியமைப்பதுடன் அதனை அடிநிலை மக்கள் பின்பற்றக் கூடிய வகையில் அமைப்பு ரீதியான முயற்சிகளையும் மேற்கொள்வதை காணலாம். சாதியம், பெண்ணடிமை, தேசியம் இனம் மொழி அடிப்படையில் இப்பண்பாடு, ஆதிக்க சக்திகளால் கட்டிமைக்கப்படும்.

இந்து சமூகத்தை பண்பாட்டு ரீதியான ஆய்வுக்குட்படுத்திய M.N சிர்னிவாஸ் 'சமஸ்கிருதமாதல்' என்ற எண்ணக்கருவை முன்வைத்தார். தாழ் நிலையில் உள்ளவர்கள் இந்து மரபில் வரையறைக்குட்பட்ட

நிலையில் இந்துக்களது சமய கருத்தியல் சடங்குகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றை பின்பற்றி மேலோங்கலை நிகழ்த்தும் செயல்முறை நிகழ்வதாக அவர் குறிப்பிட்டார். தாழ் நிலையில் உள்ளவர்கள் மாமிசம் உண்ணல், மது அருந்துதல் போன்றவற்றையும், கிராமிய வழிபாட்டு முறைகளையும் கைவிட்டு, ஆகம வழிபாட்டை தழுவுவதற்கு ஊக்கமளிக்ககூடிய வகையில் பார்ப்பனியம் செயற்படுவதாக குறிப்பிடுகின்றார்.

ஆனால் நிகழ்வது என்னவெனில் இச்செயற்பாடு அந்தஸ்து நிலைக்கு உட்பட்டதாவே இருக்குமே தவிர அமைப்பு சார்ந்து இருக்கமுடியாது. அதாவது இந்திய மரபில் பிராமணியம் பிறப்பில் உணர்த்தப்படுவதால் தாழ் நிலை உள்ளவர்கள் பிராமணர்களாக முடியாது, மேல் நோக்கி பெயர்ச்சி பெறபடுமேயொழிய பிராமணர் என்ற வட்டத்துக்குள் வரமுடியாது. இங்கு உணர்ந்து கொள்ளவேண்டிய விடயம் யாதெனில் தொழிலாளர் வர்க்கம் வர்க்க ரீதியாக ஒன்றுபடுவதையும், அமைப்பு ரீதியான மாற்றத்துக்காக போராடுவதையம் தடுப்பதற்காகவே முன்னெடுக்கப்படுகின்றது. இதனை பாட்டாளி வர்க்கம் உடைத்தெறிவதோடு எதிப்புக்குரலை நடைமுறை வாழ்வியலுடன் இணைத்து வெளிப்படுத்த வேண்டும்.

அடிநிலை மக்கள் பின்பற்றும் பண்பாட்டு அடையாளங்கள் பெரும் கதையாடல்களுக்கு உட்படாதவை. அங்கு கிராமிய வழிபாட்டு முறைகள் கூத்துக்கள், சாதாரண திருமண நடைமுறைகள் போன்றவற்றை கொண்டிருக்கும். ஆகம வழிபாட்டு அம்சங்கள் குறைவாகவே பின்பற்றப்படும். நாட்டார் வழக்காறுகள் மிகுந்துள்ள அடி நிலை மக்களின் பண்பாடு ‘கூட்டு வாழ்வியல் முறையை’ கொண்டிருந்தாலும் பிற்போக்கு தன்மைகொண்ட மூடநம்பிக்கைகளும், ஆதிக்க சக்திகளின் பண்பாட்டுக் கூறுகளும் காணப்படும். இத்தகைய அம்சங்களை நீக்கி சமூக மாற்றத்திற்கான பண்பாடு கட்டியெழுப்பப்படுவது அவசியமாகும்.

அதேவேளையில் மத்தியதர வர்க்க பண்பாடானது தொழிலாளர் வர்க்க நிலையில் இருந்து மேலுயர்த்தப்பட்டவர்களின் அடையாளங்களை கொண்டிருக்கும். தங்களை மத்தியதரமாக அடையாளப்படுத்தி கொள்பவர்களில் பலர் அதிகார வர்க்க தன்மை கொண்டவர்களாவும், புரட்சிகர அமைப்புகளுக்கு தலைமைத்தாங்கக்கூடிய வர்க்க நிலை

காணப்பட்டாலும் அதனை தவிர்த்து பிற்போக்கு கருத்து நிலையில் கவனமாக செயற்படுவர். பாட்டாளி வர்க்க சிந்தனையை கட்டி வளர்க்கவேண்டிய முன்னணி வர்க்கமாகிய தொழிலாளர்களுடன் தொடர்புகளை வைத்துக்கொண்டாலும், பதவியாசை, அதிகாரம், பயந்த மனநிலை போன்றவைகாரணமாக சமூக மாற்றத்திற்காக செயற்படுவதில் சுயநல போக்கு காணப்படுவதுடன், சில வேளைகளில் இவற்றுக்கு எதிராக செயற்படுவதும் உண்டு. ஆனால் இவர்களது பாட்டாளி வர்க்க கருத்தியல் கூறுகளை புரட்சிகர அமைப்புகள் பயன்படுத்திகொள்ள வேண்டும். தொகுத்து நோக்குமிடத்து மக்கள் சார்ந்த புதிய பண்பாட்டு புரட்சியானது தொழிலாளர் வர்க்க தலைமையில் சமூக மாற்றத்திற்கான அடிப்படைகளை கொண்டதாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

**தோழர் நாராயணன் தன்னை பற்றி குறித்து வைத்திருந்தவை**

1 உணர்ச்சிக்கு அடிமை
2 திட்டமிட்டு செய்ய பொறுமையின்மை
3 சோம்பல் அதிகம்
4 நிலையில்லாத்தன்மை
5 உடம்பு அசதி
6 சுடுசொல் பேசுதல்
7 தூக்கம் கூடுதல்
8 மனைவிக்கும் நேர்மை அற்ற நிலை
9 இரவு விழித்தல்
10 உதவி செய்தவை சொல்லி காட்டுதல்
11 எல்லாம் தெரியும் என்ற எண்ணம்
12 திமிர் பேச்சு
13 யாருக்க எதை செய்யாமை
14 தனியார்வ தேர்வம் கொண்ட பற்று
15 சுத்தம் இன்மை
16 உடம்பு நலத்தை பார்க்க விட காரியங்கள் உள்ளது
17 அலட்சிய மனப்பாங்கு
18 நேர் இருந்து பேசாமை
19 கூட்டு பொறுப்பை விடுதல் எங்கு போகும்
20 அவசர குணம்
21 பிறர்மீது கோபம்
22 தன் காரியம் நாடல்
23 மற்றவர்கள் பேச்சுக்கு மதிப்பு அளிக்காமை

# மனிதனாய்...

உனக்காய் வாழ் என்றாய்
வாழ்கிறேன் என்றேன் - மனிதன் என்றாய்
ஆனாலும் நமக்காய் பலர்
வாழ்ந்தனரே என்றேன் - வாழத்தெரியாதவன் என்றாய்

நம் இனம் உயர்வானது என்றாய்
ஆம் உயர்வானது என்றேன் - மனிதன் என்றாய்
ஆனாலும் மற்றவருக்கு அவர்
இனம் உயர்வென்றேன் - இனத்துரோகி என்றாய்

இனத்துக்குள்ளும் பாகுபாடு அவசியம் என்றாய்
அவசியம் என்றேன் - மனிதன் என்றாய்
இருந்தும் ஒடுக்கப்டுவோரை மேலும் ஒடுக்குதல்
முறையோ என்றேன் - ஒதுக்கப்படவேண்டியவன் என்றாய்

பெண் ஆணிலும் தாழ்வானவன் என்றாய்
ம் தாழ்வானவாள் என்றேன் - மனிதன் என்றாய்
என்றாலும் அதற்கு ஆணாதிக்க சமூகம்
பங்குவகிக்க வில்லையோ என்றேன் - ஆணடிமையான் என்றாய்

இறுதியில் இவ்வுலகம் நியாயமானது என்றாய்
கேள்விக்கிடமேயில்லை என்றேன் - ஆ மகான் என்றாய்
இருந்தும் நாம் மனிதனாய்
இல்லையே என்றேன் - வாழத்தகுதியற்றவன் என்றாய்

சு.விஜயகுமார்

## தோழர் நாராயணணின் இறுதி நிகழ்வின் போது





# தோழர் நாராயணனின் இறுதி நிகழ்வின் போது





தோழர் நாராயணணின் இறுதி நிகழ்வின் போது





# மலையக மக்களுக்கான ஆசிரியத்துவம்
# Pedagogy for Upcountry People

(மலையக மக்களின் உண்மையான விடுதலைக்கும் பண்பாட்டு எழுச்சிக்குமான செயற்பாடுகளில் பங்கேற்ற தோழர் எஸ் நாராயணன் அவர்கள் மரணித்து ஏறத்தாழ ஒரு மாதமாகின்றது. ஆவர் செயற்பட்ட விதம் விவாதித்த விடயங்கள் இன்றும் பசுமையான நினைவுகளாக முன் வருகின்றன. பேச வேண்டிய விடயங்களை எளிமையாகவும், அதே வேளை ஆழமாகவும் முன்வைக்கின்ற ஆற்றல் அவரிடம் அதிகமாக காணப்பட்டது. குறிப்பாக இளம் ஆசிரியர்களோடு கலந்துரையாடும் போது மலையக மக்களின் அரசியல் பண்பாட்டு விடயங்களை மேம்படுத்துவதற்கும் அவர்களை புதிய அரசியல் கலாசாரத்துக்குள் வளர்த்தெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பேசுவார்.

வர்க்க உணர்வும், அறிவும் உடைய ஆசிரயர்களின் பங்கு மலையக போராட்ட வரவாற்றில் மிக அவசியமான உந்து சக்தியாக அமைய வேண்டும் என்பது சமூக விஞ்ஞானத்தைப புரிந்துக் கொண்டுள்ள எவருக்கும் தெளிவாகத் தெரியும். மலையகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் கல்வியியலாளர்கள் கல்வித் துறை சார்ந்த நிருவாகிகள் இவ்வாறு தான் செயற்பட வேண்டும் எனபதில் மிகவும் தெளிவான நிலைப்பாட்டைக் கொணடிருந்த தோழர் நாராயணனின் நினைவாக இக்கட்டுரை எழுதப்படுகினறது. மிகவும் ஆழமாகப் பரிசீலனை செய்யப்பட வேண்டிய மலையக மக்களுக்கான ஆசிரியத்துவம் எனும் விடயம் தொடர்பான சிந்தனைக் குறிப்புகள் மட்டுமே இடம் பெறுகின்றது.)

I

சகலருக்கும் கல்வி, வாழ்கை நீடித்தக் கல்வி கல்வியை பெறுவது என்பது சிறுவர்களின் உரிமையாகும். ஓவ்வொரு பிள்ளைக்கும் கல்வியை வழங்குவது அரசாங்கத்தின் மிகமுக்கியமான பொறுப்பாகும் போன்ற கருத்தோட்டங்கள் சர்வதேச மாநாடுகளிலும், கல்விசார்ந்த கலந்துரையாடல்களிலும் பேசப்பட்டாலும் அவை எந்தளவு நடைமுறைசாத்தியமான வகையில் வெற்றிகரமாக அமுல் செய்யப்படுகின்றது என்பது கேள்விக்குரியனதாகவும் பல

சந்தர்ப்பங்களில் அதன் நடைமுறை கேலிக்குரியதாகவும் உள்ளதை நாம் கண்டுவருகின்றோம்.

வர்க்கபேதம் உள்ள ஒரு நாட்டில் கல்வி செயற்பாடுகள் அனைத்துமே ஆளும் வர்க்கத்தைப் பாதுகாப்பதாகவும் அதற்கேற்றவகையில் பண்பாட்டு பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் மரபுகள் விழுமியம் போன்றவற்றை கற்றவர் அறிவுதளத்தில் பதித்துவைப்பதாகவே காணப்படும். வள ஒதுக்கீடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், தர உள்ளீடு, அவற்றின் பயன்பாடு, கற்பித்தல் முறை நுட்பங்கள், மாணவர் பங்கேற்றல், பரீட்சை முறை, கணிப்பீட்டு திட்டங்கள், ஆசிரியர் நியமனம், பயிற்சி வழங்குதல், பதவி உயர்வு, அதிபர் நியமனம், ஊக்குவிப்பு கல்விசார் கருத்தரங்குகள், செயலமர்வுகள் நடத்துதல் போன்ற அனைத்து செயற்பாடுகளிலும் ஆளும் வர்க்கத்தின் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்ற அதேவேளையில் கல்வி முறைமையின் சகல மட்டங்களிலும் குறித்த தேவைகளை எதிர்பார்க்கும் மட்டத்தைவிட சற்று அதிகமாக செய்து முடிக்கும் கூட்டம் ஒன்றுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சியளித்து எப்போதும் தயார் நிலையில் வைத்திருப்பதைக் காணமுடியும்.

பிரேசில் நாட்டின் கல்வியியலாளர் பவுலோ பிரேயீரி (Paulo Freirie 1921 -1997) குறிப்பிடுவதுபோல முதலாளித்துவத்தில் கல்வி வழங்குவதானது வங்கியில் பணம் இடுவது போலான செயற்பாடுகளாக பொருளற்றதான வெறுமனே மனனஞ்செய்து ஒப்புவிக்கும் ஒரு நிகழ்ச்சி நிரலாக அமைவதைக் காணலாம். நெட்டுறுபண்ணியவற்றை மிகச் சரியாக தரப்படும் நேரத்தில் கொட்டுகின்றவர்கள் சித்திபெறுவதும், ஏனையவர்கள் அதனை தவறவிட்டு விரக்தியடைவதும், இறுதியில் தற்கொலை செய்துகொள்வதுமான கல்வியின் உபநிகழ்ச்சி நிரல்களையும் நாம் கண்டும் அனுபவித்தும் வருகின்றோம்.

பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் பெற்றுக்கொண்ட கல்வி தகமைகளின், சான்றிதழ்களின் வாழ்க்கைக்கான பயன்பாடு யாது?, வாழ்க்கையின் சவால்களுக்கான விடைகளை விஞ்ஞான அடிப்படையில் கண்டறிவதற்கான அறிவு எந்தளவு பெறப்படுகின்றது? என்ற கேள்விகளுக்கு விடைகாண முற்பட்டால் முதலாளித்துவக் கல்விமுறையின் தாழ் நிலையை கண்டறிய முடியும். குறைந்தபட்சம் முதலாளித்துவ

உற்பத்தி பொறிமுறைக்கு தேவையான தொழிற்சந்தையில் நிலவுகின்ற வெற்றிடங்களை கல்விமுறைமுலம் நிரப்பிக்கொள்ள முடிகின்றதா? மூளைச்சாலிகளின் வெளியேற்றம் என்ற வகையில் நாட்டைவிட்டு ஓடுபவர்களும், தனது கல்விக்கேற்ற தொழிலை பெற்றுக்கொள்ள முடியாத நிலையை நான் நிதர்சனமாக காண்கின்றோம். எனவே இத்தகைய கல்வியின் பயன் என்ன?

எந்தவொரு உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபடாது கணிணி இயந்திரங்களின் முன்னே அமர்ந்து அதனை இயக்குவதோடு ஆங்கில மொழியில் பாண்டித்தியம் பெற்று குளிரூட்டப்பட்ட அறைகளில் இரண்டு இளம் பெண் முகாமைத்துவ உதவியாளர்களையும் வைத்துக்கொண்டு செயற்படுவதற்கு வசதியளிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிவேயே தற்கால முதலாளித்துவ கல்வி கனவுலக வாழ்க்கையை முன்மொழிகின்றன. இவர்களுக்கான உணவை உற்பத்திசெய்யப்போது யார்? அவர்களுக்கென வழங்கப்படவுள்ள கல்வி யாது? வானளவு உயர்ந்து செல்லும் உணவின் விலைகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது யார்? எனும் வினாக்களுக்கு அறிவுபூர்வமான விடையை தேடுவோமாயின் புதிய கல்வி முறையின் அவசியத்தை புரிந்துக்கொள்ள முடியும்.

2

ஓவ்வெரு பிள்ளைக்கும் பொருத்தமான கல்வியினை சகலருக்கும் சமமாக வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். வாழ்க்கைக்கு அவசியமான கல்வியை பெற்றுக்கொள்வது பிள்ளையின் உரிமையாகவும் இருக்கின்ற சூழலில் இலங்கையில் உள்ள பாடசாலைகளின் வகைப்பாடானது மேற்குறித்த கோரிக்கைகளுக்கு எதிரானதாகவே அமைவதைக் காணலாம். கல்வியை தனியார்மயமாக்கியதன் பின்னர் தோன்றியுள்ள சர்வதேச ஆங்கில மொழிமூலமான பாடசாலைகள் தேசிய கல்விமுறமையினை கேலிக்குரியதாக மாற்றுவதைக் காணலாம். அதேவேளையில் அரசாங்கப் பாடசாலை முறைமையில் தேசிய, மத்திய 1AB, 1C, வகை இரண்டு, வகை மூன்று என பாடசாலைகளை வகைப்பிரித்திருப்பதும் அவற்றின் தொகை அடிப்படையிலான வேறுபாட்டை மாவட்டங்களின் அடிப்படையில் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு பாதகமான வகையில் தொடர்ந்து காப்பாற்றி வருகின்றமையினை கல்வியின் மீதான ஒதுக்குதல் செயற்பாட்டுக்கு சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம்.

பிரபல்ய பாடசாலைகள், வசதிக்கூடிய பாடசாலைகள் என்பன நகரத்தில் வாழும் வசதிமிக்க கனவான்களுக்கு மேலும் சொத்துக்களை சேர்த்துக்கொள்ளவும் இனிவரும் பல பரம்பரையினருக்கு அவற்றை மேலும் அதிகரித்து வழங்கக்கூடிய எதிர்காலத்தை உறுதி செய்கின்றன. குறித்த அளவுள்ள செழுமையாக்கப்பட்ட மைதானங்கள் நீச்சல் தடாகங்கள் ஒவ்வொரு பிரிவுக்குமான தனித்தனி நூலகங்கள், ஓய்வறைகள், முதலுதவி சிகிச்சை அறைகள், அவர்கள் குறிப்பிடுவதுப்போல் நக நுனியில் தகவல்களை பெறக்கூடிய குளிரூட்டப்பட்ட கணணியறைகள் என பட்டியல் நீண்டு செல்கின்ற வாய்ப்புகளை ஒரு சிறுபகுதி மக்களின் பிள்ளைகள் மட்டும் அனுபவிப்பதைக் காண்கின்றோம்.

எல்லவற்றுக்கும் மேலாக எதற்காக கல்வி, அக்கல்வி எவ்வாறு வழங்கப்படவேண்டும், யாருக்கு கல்வி, என்பனவற்றை தீர்மானிக்கின்ற கல்விக்கொள்கை என்பது இன்றைய சூழலில் வடிவமைக்கப்படாமல் மேல்வர்க்கம் தமக்கு வெட்டிக்கொள்ளும் ஒரு படுகுழியாகவே கொள்ளமுடியும்.

3

மேற்குறித்த கல்வி செயற்பாடுகளின் பின்னணியிலேயே மலையக மக்களுக்கான கல்விசார் பிரச்சினைகள் அணுகப்படவேண்டும். அடக்கப்படும், கொடூரமாக சுரண்டப்படும் ஒரு வர்க்கமாக மலையக மக்கள் இருப்பதோடு இனரீதியாகவும் பெரிதும் வஞ்சிக்கப்பட்ட, துன்புறுத்தப்பட்ட ஒரு மக்கள் கூட்டமான இருப்பதுவும் நோக்கற்பாலது. இத்தகைய பாதக நிலமையை மேலும் பல ஆண்டுகளுக்கு நீடித்து சென்று இம்மகளின் இருப்பமை இல்லாது செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் ஆளும் வர்க்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் முன்னெடுத்து வருவதை நாம் காணலாம்.

பின் நவினத்துவ சாக்கடைக்குள் வீழ்ந்துள்ளோர்கள் மலையகக் கல்வியை வெறும் கல்விசார் பிரச்சினையாக மட்டும் கட்டமைப்பதற்கு முயற்சிசெய்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மலையக மக்களின் வரலாறு, அரசியல், பொருளாதார, பண்பாட்டு காரணிகள் அனைத்துமே மலையக கல்வியில் பாதகமாக செல்வாக்கு செழுத்துவதை அறிந்திருந்தும் தனது அறிவை தொடர்ந்து விளிம்பு நிலையிலேயே

வைத்திருக்கவேண்டும் என்ற ஆவலினாலும் ' அதைக் கட்டுடைத்து வெளியேறினால் மக்களது தளத்தில் செயற்பட நேரிடும் என்பதாலும் அறிவுமுடக்கப்பட்டவர்களாக இருப்பதைக் காணமுடியும்.

ஆனால் வரலாற்றை அறிவியல் பூர்வமாக விளங்கிக்கொண்டு மக்கள் விடுதலைசார்பான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பண்பாட்டு தளத்திலே பாரிய புரட்சி ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து செயற்படுகின்றனர். வஞ்சிக்கப்பட்ட இனம் என்ற வகையில் ஏறத்தாழ 110 வருடங்கள் பின்னடைந்து காணப்படும் மலையக மக்களுக்கான கல்விக்கான 1948 குடியுரிமை பறிப்பு மலையக மக்களை வெளியேற்றுவதற்கான இலங்கை இந்திய அரசுகள் செய்த சூழ்ச்சிகள், இனக்கலவரங்கள், பஞ்சம் அவசரக்கால, பயங்கரவாத சட்டங்களுக்கு கீழான கைதுகள் போன்ற வரலாற்றுக் காரணங்களால் இம்மக்களுக்கான கல்வி கீழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையை காணமுடியும்.

பொருளாதார அடிப்படையில் மிகவும் கோரமாக சுரண்டப்பட்டுள்ள இம்மக்கள் உயிர்வாழ்வதற்கு அவசியமான ஆகக்குறைந்தபட்ச சம்பளத்தையேனும் பெறமுடியாத நிலையில் உள்ளனர். வறுமை, போசாக்கின்மை, நோய்த்தாக்கம், மூளைவளர்ச்சி குறைபாடு, ஊனமுற்ற உடலமைப்பு போன்ற காரணிகள் கல்விக்கு அவசியமான அடிப்படைகளையேனும் பூர்த்திசெய்து கொள்ள முடியாத நிலைமைய தோற்றுவித்துள்ளது. இத்தகைய பாதக நிலையை தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமென்ற வரை கோட்டை நாளுக்கு நாள் மேலும் இருக்கி வருவதை நாம் காண்கின்றோம்.

200 வருடங்களை தாண்டிச் செல்லும் வரலாற்றைக்கொண்ட இம்மக்களுக்கு ஓரங்குல நிலத்தையேனும் சொந்தமாக்காமை, லயங்களிலும் அதனைவிட வசதி குறைந்த மாடி லயன்களிலும் தொடந்தும் அடைத்து வைத்திருப்பதில் அரசாங்கமும் அதற்கு ஆதரவான பிற்போக்கு தொழிற்சங்கங்களும் தற்காலிக வெற்றிகளை தொடந்து காப்பாற்றி வருவதினை காணமுடிகின்றது. இச்சூழலில் படிப்பதற்குரிய வாய்ப்புகளோ, வசதிகளோ இல்லாமை கல்வி முன்னேற்றத்திற்கு பாதகமாக அமைவதை காணலாம்.

அரசியல் அடிப்படையில் எவ்வித விழிப்புணர்வும் இன்றி செயற்படும் இம்மக்களுக்கு நடந்தவை, நடப்பவை, நடக்கவிருப்பவை பற்றிய அறிவு மிகவும் குறைந்த மட்டத்திலேயே வழங்கப்பட்டிருப்பதை காணமுடியும். தனக்கும், தனது பிள்ளைகளுக்கும் எதிராக செயற்படும் பிற்போக்கு தலைமைகளை இம்மக்கள் தூக்கியெறிய முடியாத நிலை இதனை தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. தனது நலனுக்காக செயற்பட வேண்டிய தொழிற்சங்கங்கள் தோட்ட முதலாளிகளின் பேச்சாளர்களாக மாறியிருப்பதை அறிய முடியாத நிலைமையை இன்னொரு உதாரணமாக கூறமுடியும்.

பண்பாட்டின் அடிப்படையில் கூட்டுணர்வு, தோழமையுணர்வு போன்றன சிதைக்கப்பட்டு தம்மை கூறுபோட்டுக்கொள்ளவும் தமக்கிடையே மோதல்களை ஏற்படுத்திக்கொள்ளவும் தூண்டப்படுகின்ற வாழ்வியல் கோலங்களை நாம் காண்கின்றோம். தொழிலாளர்கள் உதிரிகளாகவும், மேல்கட்டுமானத்தை சார்ந்த கற்றவர்கள் வெறும் வாய்ச்சவடால் காரர்களாக அமட்டும் இருப்பதுவும் இப்பண்பாட்டு சிதைவுகளுக்கு பிரதான காரணங்களாக அமைகின்றன.

4

இத்தகைய வரலாற்று, பொருளாதார, அரசியல், பண்பாட்டு சூழலை ஆழமாக விளங்கிகொள்வதன் அடிப்படையில் மலையக மக்களுக்கான ஆசிரியத்துவம் கட்டியெழுப்பட வேண்டும். இவ்வாசிரியத்துவம் பற்பல தன்மை கொண்டதாகவும், பல பரிமாணங்களை உள்ளடக்கியதாகவும் உயர்ந்தபட்ச அர்ப்பணிப்பை கொண்டதாகவும் காணப்படும்.

இத்தகைய ஆசிரியத்துவ கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றும் போது ஒரு ஆசிரியர் சமூக விஞ்ஞான நிபுணராகவும், கற்பிப்பதில் தோழனாகவும், கற்பதில் தெவிட்டாத தன்மைக்கொண்ட அறிஞனாகவும் முற்போக்கு அரசியல் செயற்பாட்டாளனாகவும் உறுதிமிக்க போராளியாகவும், பொதுவுடமை தத்துவத்தை ஆழமாக கற்கும் மாணவனாகவும் செயற்பட்டு வாழ்வை வெற்றிக்கொண்ட உயர் மானுடனாக செயற்படுவது தவிர்க்கவியலாத வரலாற்றுக் கடமையாகும்.

இந்த அடிப்படையில் மலையகத்துக்கான ஆசிரியத்துவம் பின்வரும் மூன்று பிரதான தளங்களில் செயற்படவேண்டிய ஓர் ஒழுங்காகவுள்ளது

**1. அறிவுத்தளம்**

விஞ்ஞான வழிபட்ட தத்துவம், கோட்பாடுகள், அடிப்படைகள் ஆகியவற்றை ஆழ்ந்து கற்பதன் மூலம் இத்தளம் விரிவாக்கப்படவேண்டும்

**2. பாடசாலை செயற்பாட்டுக்குரிய தளம்.**

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், கற்பித்தல் முறைகள் நுட்பங்கள், கணிப்பீடு ஒப்படைகள் பாட இணை செயற்பாடுகளான விளையாட்டு உடற்பயிற்சி, நாடகம் உள்ளிட்ட நிகழ்கலைகள் மற்றும் படைப்புகள் இளைஞர் முகாம், கூட்டுப்பண்ணை, வாசகர் வட்டம் போன்ற பற்பல செயற்பாடுகள் மூலமாக இத்தளம் விரிவாக்கப்படவேண்டும்.

**3. சமூக தளம்**

தொழிலாளர் அமைப்புகள், வளந்தோர்களுக்கான கல்வி, பொதுவுடமை போதனை, அறிவூட்டல் நிகழ்ச்சிகள், தாபனப்படுத்துதல், கலை, உற்பத்தி பண்பாட்டு விருத்தி போன்ற செயற்பாடுகள் மூலம் இத்தளம் விரிவாக்கப்பட வேண்டும்.

கொள்கையில் உறுதிப்பாடு, செயல் மூல வெற்றி பலம், பலவீனம் அகியவற்றை விமர்சன, சுயவிமர்சன அடிப்படையில் இனங்காணல், சவால்களை வெற்றிக்கொள்ளுதல் போன்ற உறுதியான நிலைப்பாட்டுக்கு அறிவு, அதன் மூலம் பெறப்படும் ஞானம் மிகவும் அவசியமாகின்றது. பொது கல்வியின் குறைபாடுகளை களைவதற்கு சமூக விஞ்ஞான தத்துவங்களை, குறிப்பாக இயங்கியல் பொருள் முதல்வாதத்தை ஆழக்கற்பதும், அத்தத்துவம் தற்போதுவரை எவ்வளவு தூரம் விரிவாகியுள்ளது என்பதையும் விளங்கி தொடர்ந்து கற்பது மிகவும் அவசியமாகும். தத்துவத்தில் தெளிவின்மையென்பது பயணத்தில் சறுக்கல்களையும் பின்வாங்குதல்களையும் தூண்டிவிடும் என்பதை அனுபவங்கள் விளக்குகின்றன.

பாடசாலையில் இடம்பெறும் செயற்பாடுகள் அனைத்திலும் மாணவர்களுக்கு சமூக விஞ்ஞானம் குறித்த அனுபவங்களை பெறக்கூடிய ஏற்பாடுகளை

செய்யவேண்டும். **விஞ்ஞான தன்மைக்கொண்ட அறிவே விடுதலைக்கான திறவுகோல் என்பதை மாணவர்கள் சுயமாகவே விளங்கிக்கொள்ள சுய வழிபட்ட கற்றலுக்கு ஊக்குவிப்பு வழங்குதல் வேண்டும்**. கல்வியின் சாரம் விடுதலைக்கு பயிற்றுவிப்பது ஆகும். இதற்கான கலந்துரையாடல், ஆய்வுகள், ஆக்கம் ஆகியவற்றில் மாணவர்களுக்கு பரீட்சியத்தையும், அனுபவங்களையும் ஏற்படுத்தவேண்டும். உணர்வு விருத்தி, ஆளுமை, நடத்தை என்ற வகையில் செயற்பாடுகள் படிமுறையில் முன்னெடுத்து செல்லப்படவேண்டும். உதாரணங்கள் ஒப்படைகள் போன்றவற்றில் மானுடவிடுதலைக்கான அடிப்படைகள் இணைத்துக் கொள்ளப்படவேண்டும்.

கலையின் பொக்கிசமாக அமைவது விஞ்ஞானம் பயிலுதல் என்ற அடிப்படையில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும். வகுப்பறை நுலகம், வீட்டு நுலகம் என்பவற்றின் மூலம் விமர்சன உணர்வு வளர்த்தெடுக்கப்படவேண்டும். சமூக தளத்திலே தொழிலாளர்களுக்கு அறிவூட்டுதல் விசேட திறமைகளை பெறக்கூடிய பயிற்சிகளை அளித்தல், ஐக்கிய பாடசாலை போன்றவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஆகவே மலையக மக்களுக்கான ஆசிரியத்துவம் என்பது காலத்தின் தேவையாக அமைவதோடு புதியதோர் பண்பாட்டுக்கான தோற்றுவாயாகவும் அமைகின்றது. ஏற்கனவே இதற்கான வேலைகள் ஆரம்பமாகிவிட்டன, அதனை சக்திப்படுத்துவதே இப்பொழுது அவசியமாகின்றது. மனித குலம் படைத்தளித்த அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்தி இதனை முன்னெடுத்து செல்லும் போது ஆசிரியத்துவம் மேலும் மகிமை பெறுவதோடு அதனை நடைமுறை சாத்தியமாக்கும் ஆசிரியரின் வாழ்வும் வெற்றிபெறுகின்றது.

**எஸ். உதயசூரியன்**

# தோழா...

முன்னூறு ஆண்டுகளாய்
மூச்சிறைக்க சுமக்கிறோம்
இன்னும் இன்னுமாய்
சுமைகள் அழுத்த
ஏதுமறியா மந்தைகளாய்
இனினும் சுமக்கிறோம்.
முழுபாரம் மூச்சிறைக்க
முட்பாதையில் நின்று
முணங்கிக்கொண்டிருக்கையில்
தோழா ...
என குரல் கேட்டு
தலை நிமிர்கிறேன்
செங்கொடியோடு
ஒரு படை
ஒடுங்கி, ஒடுங்கி இருந்த
உணர்வெல்லாம் திரண்டு திமிர
செம்படை சுவட்டில்
சேர்ந்து நடக்கிறேன்.
சம்மட்டி அறிவால்
சால்வை சகிதம்
சரித்திரப்பயணத்தில்
முன் வரிசையில் - நீ
என் தந்தையின் வயதென்றாலும்
தோழா என்றாய் - உண்
மூச்சி நிற்கும் வரை
தோழமையோடு தொடரந்தது பயணம்
சாதிவெறியெனும்
சரித்திர குப்பைகளை
தூக்கி எறிந்தீர்
தூரநோக்கோடு
துணைக்கொண்டு நடந்தீர்
ஏகாதிபத்திய திமிர்
பேரினவாத தீ
சுட்டெறிக்கும் மண்ணில்
செங்கொடி நிழலில்
தொடர்ந்தோம் நீள் பயணம்
கயமை, நயவஞ்சகம்
காட்டிக்கொடுப்பு
துரோகத்தனம், சிறை
உயிரிழப்பு - என
இடறிய போதெல்லாம்
எழுந்தோம் - மீண்டும்
நடப்பதற்காய் - நீ
மரணித்தாய் என்பது
யதார்த்தம் - ஆனால்
எங்கள் பயணப்பாதையின்
சுவடுகள் எங்கும் - உன்
நினைவுத்தடங்கள்
வழிதடத்தை செப்பணிடும்
சென்றுவா தோழா
இந்த மலைகளை வென்று...

**புதிய மலையகம்**
**வெ. மகேந்திரன்**

# சீர்த்திருத்த சிந்தனையிலிருந்து வர்க்க விடுதலை நோக்கிய பயணத்தில் தோழர் நாராயணன்

**சை. கிங்ஸ்லி கோமஸ்**

“சமுக கட்டமைப்பு மாற வேண்டும்” என்று சீர்த்திருத்த வாதி கூறுகின்றான். இதற்கான செயற்பாடுகளில் ஒன்றாக பிச்சைப் போடுகின்றார்கள். நான்கு யாசகர்களுக்கு பிச்சைப்போட்டுவிட்டால் சமுககட்டமைப்பு மாறி விடும் என்ற கற்பனா உலகில் காலம் கழிக்கின்றாகள் இதில் என்ன தவறு என்று அதிகமானவர்கள் கேட்கின்றனர் இதைத்தான் செய்ய வேண்டும் என்று வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, பைபில், திருக்குர்ஆன் என அணைத்துமே தர்மம் செய்வது தொடர்பான கருத்துக்களை கூறுவதில் இருந்து காணக்கூடியதாக இறுக்கின்றது.

ஆரம்பக்காலங்களில் திரு. நாராயனசாமி தனது பொது வாழ்க்கையினை சீர்த்திருத்த வாதியாகவே ஆரம்பித்தார் என்றால் மிகையாகாது உதவியினுடாக சமுக மாற்றத்தினைக் கண்டுவிடலாம் என்று நம்பிக்கைக் கொண்டு கேட்டுவந்தவர்க்கெல்லாம் கொடுத்து கேட்காதவர்களுக்கும் கொடுத்து வாழ்ந்த காலங்களில் கொடுப்பார் என்பதற்காக மாத்திரம் அவரை நாடியவர்கள் ஏராளம் இவர்கள் பெற்றுக் கொண்டதுடன் மாத்திரம் நின்று விட்டார்கள். இவர்களால் சமுக மாற்றத்திற்கான அணுவளவு அசைவு கூட ஏற்படவில்லை என்பது சிந்தனையைத் தூண்டிய விடயமாகும் இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் சாதரண மனிதன் ஒருவனாக இருந்தால் சமுகத்தைக்குறை கூறிக் கொண்டு தனது செயற்பாடுகளை நிறுத்திக் கொள்வதற்கான நொண்டி சாட்டாக நன்றி கெட்ட சமுகம் என்னும் ஒற்றைச் சொல்லில் தனிமனித நலனுக்காக சீர்த்திருத்த பாதையிலிருந்து தன்னை மாற்றிக் கொண்டு தான் தன் குடும்பம் என பயணத்தினை ஆரம்பித்து விடுவார்கள். தோழர் நாராயணன் தான் தெரிவு செய்துக் கொண்ட கொள்கைக் காரணத்தினால் தனது சமுகத்தினை ஒதுக்கி சமுகத்தில் இருந்து தானும் ஒதுங்கி விடாமல் தனது சமுக வளர்ச்சிக்கான அடுத்தக்கட்ட நகர்வினை சடுதியாக ஆரம்பித்தார் என்னும் விடயம் அவரது களப்பணியினையும் சமுக நேயத்தினையும் அடையாளம் காட்டுவதாக அமைகின்றது.

'அண்ணன் நாராயணன்' என்று அழைக்கப்பட்ட இவர் தோழர் நாராயணனாக தனது வாழ்க்கையினைத் தொடருவதற்கான பாதையினை புதிய ஜனநாயக மா.லெ. கட்சி வழங்கியதென்பதே உண்மையாகும். சீர்த்திருத்த செயற்பாடுகள் சமூக நிறுவனங்கள் தனி மனிதர்கள் செல்வந்தர்கள் பலராலும் ஆரம்பிக்கப்பட்டு இடையில் நிறுத்துவதும் பல அரசியல் வாதிகள் வாக்கு பெற்றுக் கொள்வதற்கான தந்திரமாக மாத்திரம் இருந்ததன் காரணத்தினால் தோழர் நாராயணன் மனித விடுதலைக்கான சரியானதும் விஞ்ஞான வியல் ரீதியானதுமான பாதை வர்க்க வேறுப்பாட்டை மாற்றியமைக்கும் சோசலிச பாதை என்பன அடையாளப்படுத்தி தான் வாழ்ந்தது மாத்திரம் இல்லாமல் தனது வாரிசுகளையும் சிறந்த வர்க்க போராளிகளாக வளர்த்து மனித வாழ்விற்கு அர்த்தம் கற்பித்து எம்மிடம் இருந்து மறைந்த தோழர் நாராயணன் மரணத்தை வென்றவர் என்பது உலகறியச் செய்ய வேண்டிய விடயமாகும்.

**தோழர் நாராயணன் தன் இறுதி நிகழ்வு எப்படி அமைக்கவேண்டும் என்று தான் குறித்து வைத்திருந்தவை**



# மரணத்தை வென்றவர்கள்

சை.கிங்ஸ்லி கோமஸ்

சந்தையில் வாங்கிய கத்தரி காய்களில்
ஓட்டையிட்டு வாழ்ந்து வரும்
வெள்ளைப்புழுக்களாய்
சபித்து வெட்டித்தூக்கி
குப்பையில் போடப்பட்ட
மனிதர்கள் பலர்

◈◈ ◈◈

புழுவிற்கு சமனான
பல மனித புழுக்கள்
வாழ்ந்த சுவடின்றி
வாழ்த்த மனிதர் இன்றி
மாண்ட கதைகள்
வேதியில் கோடி

◈◈ ◈◈

வாழ்தலே பலருக்கு வேதனையாக
வம்புகள் இவர்கற்கு வாடிக்கையாக
வாழ்வை தொலைத்து
பலர் வாழ்வை சுவைத்து
பலர் உழைப்பில் புசித்து
வேடிக்கை மனிதராய் வீழ்ந்த
பல முடி சூடா மன்னர்களும்
மண்ணில் தடம் இன்றி
தொலைந்தனரே
இவர்
வாரிசுகள் என்றோ
பதவிகள் தொலைத்தால்

தெரு நாயென்றேனும் இவர்க்கு
இப்புவிதனில் மதிப்பில்லை
வாழ்தல் தனக்கென்றும்
வளம் எல்லாம் தமக்கென்றும்
சுகபோகம் உயர் குலம் என்றும்
உழைப்போர் சூத்திரர் எனறும்
கூறி
குடைந்து
சுரண்டி
குருதி சுவைத்து
உயிர் குடித்து
வளர்ந்து வாழ்ந்த
வரண்ட நெஞ்சோர்
நினைக்க உளம் இன்றி மாண்டனரே

◈◈ ◈◈

ஆனால்
'நாராயணன்' என்றொரு
விடுதலை நெஞ்சோன்
ஜகத்தினை மாற்றவே
செயல்பல புரிந்து
மானிட நேயத்தை
மந்திரமாய் கொண்டு
மலைகளை வென்ற
மானுடனானான்
பலர் வாழ்வினில் உயர்ந்திட
ஏனியாய் ஆனான்
இவன்
மலை மானுடர் வாழ்த்திடும்
மனித நேசனும் ஆனான்
இதனால் மரணம் இவனிடம் மரணித்தது

◈◈ ◈◈

# ஆரோக்கியமான உணவு பழக்கத்தை கட்டியெழுப்புவதன் அவசியம்.

*மஞ்சல் இஞ்சி, மூலிகையும்*
*மண்ணில் உள்ள வேர்களையும்*
*அருந்திர தண்ணீரையும்*
*மருந்தாக கண்டிருந்தோம்.*

இந்தியாவில் தமிழகத்தில் இயங்கிவருகின்ற புரட்சிகர அமைப்பாகிய மக்கள் கலை இலக்கிய கழகத்தின் மேற்காணும் அர்த்தம் நிறைந்த பாடல் வரிகள் உணர்வினை தூண்டுவதுடன் நமது மரபான உணவு பழக்கத்தையும் ஞாபகப்படுத்துகின்றது. எமது மரபான உணவு பழக்கங்கள் ஊட்டச் சத்துக்களையும், உடல் ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் வழங்கியது. மேலும் மண்வளத்திற்கும், சுற்றுச் சூழலுக்கும் பெரியளவிலான பாதிப்பினை ஏற்படுத்தாத வண்ணம் விவசாய நடைமுறைகளும் இருந்துவந்தன.

என்று மனிதன் தனது தேவைக்கு அதிகமாக பொருள் சேர்க்க முயன்றானோ அன்றில் இருந்தே உலகில் போட்டி மனப்பாங்கு, அடக்குமுறைகள், சுரண்டல்கள், ஏற்றத்தாழ்வுகள் ஆரம்பித்து விட்டன. இன்றைய உலகமயமாக்கள் சூழலில் இந்நிலை மிகமோசமான கட்டத்தை எட்டியுள்ளது. வர்த்தகத்தினை அடிப்படையாகக்கொண்ட இன்றைய நுகர்வு கலாசார யுகத்தில் குடிக்கின்ற நீர், சுவாசிக்கின்ற காற்று, பேசுகின்ற வார்த்தைகள்கூட காசுக்கொடுத்தே அனுபவிக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. அடுத்த தலைமுறையினருக்கு இந்த பூமியில் ஆரோக்கியமாக உயிர்வாழ முடியாதளவில் மனிதனின் வர்த்தக நோக்கம் கொண்ட ஒவ்வொரு செயற்பாடும் பூமியை காயப்படுத்திக் கொண்டுதான் உள்ளது.

4500 மில்லியன் பழமைவாய்ந்த இந்த உலகத்தில் ஏறத்தாழ 3500 ஆண்டுகளே மனித குலத்தின் வரலாறு. மனிதனின் அறிவின் விளைவாக உலகில் பல்வேறு மாற்றங்கள், அறிவியல் கண்டுபிடிப்புக்கள், அபிவிருத்திகள் ஏற்பட தொடங்கின. இருந்தபோதும் இதேகாலக்கட்டத்திலேயே பூமியில்

பல்வேறு அழிவுகளும், சுற்றுச் சூழல் பாதிப்புக்களும் ஏற்பட தொடங்கின. 1992ம் ஆண்டு 101 சுற்றுச் சுழலியலாளர்கள் ஐக்கியநாடுகள் சபையில் பின்வருமாறு எச்சரித்திருந்தனர்

பூமியை பராமரிக்கும் விதத்தில் ஒரு பெரிய மாற்றம் தேவைப்படுகின்றது. மிக பெரிய மனித துன்பத்தை தவிர்க்க வேண்டுமானால், அன்னை பூமியை தொடர்ச்சியாக கர்யப்படுத்துவதை நிறுத்த வேண்டும். குறிப்பாக பூமி மிகமோசமான அழிவுகளை சந்தித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்திலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இன்று காலநிலை மாற்றம், பூமி வெப்பமாதல் போன்றவை எதிர்காலத்திற்கும் மனிதனின் மற்றும் ஏனைய உயிரினங்களின் இருப்புக்கும் சவாலாக அமைகின்றன.. ஆனால் இன்று வளர்ந்து செல்லும் அறிவியலுக்கும்கூட இதற்கான பரிகாரத்தினை கொடுக்கமுடியாது தத்தளித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

உலகில் வாழுகின்ற பழமையான மனிதர்களின் பண்பாட்டின் ஒரு அங்கமாகவே உணவு பழக்கமும் இருந்து வருகின்றது. பாரம்பரியமான உணவு முறையானது குறித்த இனம் அல்லது பண்பாட்டு குழு வாழுகின்ற பிரதேசத்தின் தன்மை, கால நிலை, தேவையான ஊட்டச்சத்துக்கள், மருத்துவ குணங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிதாகவே இருந்து வந்தன. உணவின் தன்மையும் குறிப்பிட்ட பிரதேசத்தில் இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருந்தது. உண்ணுகின்ற தானியங்கள், பழவகைகள், இலைவகைகள், மாமிசம் போன்றவை உடலுக்கு தேவையான விட்டமீன்கள், கணியுப்புகள், நோய் எதிர்ப்பு சக்தி, இயற்கையான சுவை என்பனவற்றை வழங்கியது.

விவசாய முறைகளும்கூட அந்தந்த சமூகத்தின் சூழலுக்கு ஏற்றவகையிலும், சுற்று சூழலுடன் ஒருங்கிணைந்து உயிர் பல்வகையினை (Bio Diversity) பாதுகாக்கும் வண்ணம் அமைந்திருந்தது. குறிப்பாக பராம்பரிய விவ்சாய முறைகளில் தங்களது பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்தும் அதேநேர சூழலுக்கும் ஏற்ற, இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய மரபுசார் தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட்டதுடன், இவைபெருபாலும் அனுபவத்தின் மூலம் பெற்றுக்கொண்ட அறிவையும், வாழ்வியல் பிரதேசத்தில்

பெற்றுக்கொள்வதற்கு சாத்தியமான வளங்களையும் பயன்படுதத்திய உற்பத்தி முறையின் மூலமாக தன்னிரைவு உணவு உற்பத்தியினை வழங்கக்கூடியதாக அமைந்திருந்தது.

இலங்கை, இந்தியா போன்ற மூன்றாம் மண்டல நாடுகளில் உள்ள மக்களின் பாரம்பரியமான உணவு மற்றும் விவசாய உற்பத்தி முறைகள் காலனி ஆதிக்க காலம் தொட்டு இன்றுவரையிலும் பல்வேறு வடிவங்களில் சிதைக்கப்பட்டு, அழிக்கப்பட்டும் இருக்கின்றதை நமது அனுபவத்தில் பார்க்கலாம். இன்றும் பொதுவாக மனிதன் உண்ணுகின்ற உணவு மற்றும் பாணத்துடன் சேர்த்து நஞ்சை உண்ணுகினறோம் அல்லது பருகுகின்றோம். அபரிமிதமான இலாபத்தினை அடையவேண்டும் என்பதற்காக முதலாளித்துவ சக்திகள் உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்கு அளவுகடந்த வகையில் இரசாயனத்தை பயன்படுத்துகின்றன. இதன் விளைவாக உணவிலே நச்சுத் தண்மை கலத்தல், உணவில் இருக்கின்ற இயற்கையான தன்மை அற்றுப்போதல் போன்ற தன்மைகள் ஏற்படுகின்றன. அளவுக்கு அதிகமான இரசாயனங்களை பயன்படுத்துவதன் விளைவாக மண்வளம் பாதிக்கப்படுவதுடன் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பும், உயிர் பல்வகைமையின் சிதைவும் ஏற்படுகின்றன.

இன்று அதிகரித்து வரும் பாஸ்ட் பூட் (Fast Food) காலாசாரம் மனிதர்களை மேலும் நோயாளிகளாகவும், சோம்பேரிகளாகவும் ஆக்கியுள்ளது. உணவினை பதப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், சுவையூட்டுவதற்கும், கவர்ச்சியூட்டுவதற்கும் இரசாயனங்கள் சேர்க்கப்படுகின்றன. கொக்காகோலா, பெப்சி போன்ற குளிர்பாணங்களில் பூச்சிக் கொல்லி மருந்து கலக்கப்பட்டுள்ளதாக பல ஆய்வுகள் நிருபித்திருக்கின்றன. குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளை விட வளர்முக நாடுகளில் இதன் தன்மை அதிகமாக காணப்படுவதாக கூறப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டதற்கினங்க உணவு வகைகளின் கலக்கப்படுகின்ற இரசாயனங்கள் உடனடியான உடல் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிப்பதில்லை. இது சிறிது சிறிதாக உடலை பாதிக்கின்றது.

கொழுப்பு நிறைந்த தசைகளில் கலப்பதன் மூலம் உடல் பலமிழத்தல், நோய் எதிர்ப்பு சக்தி குறைதல், மருத்துவங்கள் பயனளிக்காமல் போதல் போன்ற தன்மைகள் உடலை பாதிப்பதுடன் ஆயுள்காலத்தையும் குறைக்கின்றது. இதனால் குழந்தைகளும் சிறுவர்களுமே அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்.

விவசாயத்தை பொறுத்தவரையில் பன்நாட்டுக் கம்பனிகள் வீரிய விதைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உற்பத்தியினை அதிகரித்தல் என்ற பெயரில் நெல் உட்பட பல்வேறு தானியங்களில் பாரம்பரியமான விதைகள் இல்லாதொழித்துள்ளனர். உதாரணமாக மரபாக ஆறு மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விதை நெல்லின் மூலம் முன்று அல்லது நான்கு மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்டாலும் மீண்டும் விதை நெல்லை பெற்றுக் கொள்வதற்கு பன்நாட்டு கம்பனிகளையே நாடவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன் பன்நாட்டு கம்பனிகள் விநியோகிக்கும் விதைகளில் இரசாயனம் கலக்கப்பட்டிருப்பதனால் விவசாய நடவடிக்கைகளிலும் சில இரசாயனங்களை பயன்படுத்துவதன் மூலமே பயிர் வளர்கின்ற சதித்திட்டங்களும் இருக்கின்றது என்பதை நமது விவசாயிகள் உணர்வதில்லை வேம்பு, மஞ்சல், இஞ்சி போன்ற இன்னும் பலவற்றுக்கு பன்நாட்டு கம்பனிகள் காப்புரிமை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் தொடர்ந்துகொண்டுள்ளன.

மறுபுறம் இயற்கை அநர்த்தம் காரணமாகவும், இரசாயனங்களின் அளவு கடந்த பாவனையின் காரணமாகவும் மண் வளம் பாதிக்கப்படுகின்றது. இரண்டு அங்குளம் அளவுள்ள வளமான மேற்றள மண் உருவாவதற்கு 1200 ஆண்டுகள் தேவைபடுகின்றதாக ஆய்வுகள் கூறுகின்றன. மனிதனின் கவனயீனமான தவறுகளின் காரணமாக மதிப்பிட முடியாத பெறுமதியுடைய மண்வளம் பாதிக்கப்படுகின்றது. இதனால் சத்தான உணவுகள் உற்பத்தியாவது தடைபடுகின்றது. குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் வாழக்கூடிய நுவரெலியா மாவட்டத்தில் சாதாரண மண் கொள்ளக்கூடிய அளவைவிட மூன்று மடங்கு அதிகமான இரசாயனத்தின் அளவு கலந்துள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன் இரசாயனத்தின் தாக்கம் இருநூறு அடி வரையிலும் நிலத்தடி நீரை பாதிக்கின்றது.

எனவே மனித குலத்திற்கும், நாம் வாழுகின்ற அன்னை பூமிக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையிலான உணவு பழக்கம் மற்றும் விவசாய முறைகளுக்கு மாற்றாக பாரம்பரியமான அல்லது சுற்று சூழலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத வகையிலான சேதன முறையிலான விவசாய முறையினை சமூகத்தில் கட்டியெழுப்புவதற்கான பண்பாட்டு ரீதியான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். மேலும் நீண்டகால நோக்கில் தன்னிறைவாண உணவு உற்பத்தி, ஆரோக்கியமான வாழ்க்கை, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மரபான உணவு வகைகளின் பாதுகாப்பு என்பவற்றை ஏற்படுத்துவதற்கான மாற்று அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவேண்டியது மிக அவசியமாகும். சுற்று சூழல் பாதுகாப்பென்பது எமது சிந்தனை, செயற்பாடு, பணி, உணர்விலும் ஒன்றாக கலக்கவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

தோழர் நாராயணன் அவர்கள் தனது வாழ்நாளில் நச்சுத் தன்மையற்ற ஆரோக்கியமான உணவு பழக்கத்தினை சமூகத்தில் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக செயற்பட்டிருக்கின்றார், அதற்காக பல்வேறு விவாதங்களையும், கருத்துக்களையும் தோழர்களுடன் பகிர்ந்திருக்கின்றார். அந்தவகையில் அவரின் ஞாபகமாக வெளியிடப்படும் இம்மலரில் இக்கட்டுரையினை எழுதுவதன் மூலம் அவரின் கருத்துக்களை மக்களுக்கு பரப்புவதுடன் அவருக்கான புரட்சிகர சமர்ப்பணமாகவும் அமைகின்றது.

-ஜோன்-
ஹட்டன்

கலாச்சாரம் இல்லாத ஒரு படை
மந்த புத்தியுடைய ஒரு படையாகும்
ஒரு மந்த புத்தியுடைய படையாக
எதிரியை தோற்கடிக்க முடியாது

– மாவோ –

# படைப்பின் சாரம்

எதற்கு வந்தோமோ
அதற்காகவே வாழ்ந்தோம்

எங்கு உழைக்கின்றோமோ
அங்கு அடிமையாய் கிடக்கின்றோம்

எப்போது போராடுவோமோ
அப்போது இழந்ததை பெறுவோம்

உன்னுடைய உரிமையை இழந்தாய்
அதற்காகவே போராடுகிறாய்

உழைப்பை நீ கொடுத்தாய்
ஒரு கூட்டத்தின் உல்லாசத்திற்கு

தேயிலையை நீ நட்டு வைத்தாய்
அதற்கே நீ உரமாவதற்கு

எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது உன் உழைப்பிலே எடுக்கப்பட்டது

எதை நீ கொடுத்தாயோ
அது ஏமாற்றப்பறிக்கப்பட்டது

இன்று அடிமைத்தனம் உன்னுடையதோ
அது நாளை உன்தலைமுறையினருடையதாகிறது
மற்றநாள் அது அடுத்த தலைமுறையினதாகும்

இதுவே ஆளும் வர்க்க நியதியாகும்
அவர்கள் படைப்பின் சாராம்சமாகும்

வலி

அம்மா!

வாழ்வு தேடி வந்து விழுந்தோம்
எதும் வாய்க்கவில்லையே.

மாறாத உன் குமுறல்

தேடிக் களைத்த தேயிலைக்கடியில்
நீ பெற்றவைகள்?

தொலைத்தவையோ ஏராளம் !

கோபியன்

# வடக்கில் இருந்து வரும் மடல்

**அன்புள்ள தோழர்களே, எனது புரட்சிகர வணக்கம்.**

உங்களோடு மனந்திறந்து பேச வேண்டும். ஆனாலும் சிலதை பேச முடியாத சுய தணிக்கை இருக்கத்தான் செய்கின்றது. இங்குள்ள நிலைமை என்பதிலும் பார்க்க இலங்கை சூழல் அதற்கு இடம் கொடுக்கவில்லை. நடந்துமுடிந்த போர் அதனால் உண்டான அனர்த்தங்களில் இருந்து எமது மக்கள் விடுபடவில்லை. ஜப்பான் ஹிரோசிமா, நாகசாகி நகர்களின் மீது அமெரிக்காவால் போடப்பட்ட அணுகுண்டின் பாதிப்பு காலம் காலமாக நீடித்து வருவது போலத்தான் வடுக்கள் ஆழமாக உள்ளது.

அரசியல் உரிமைகள் பற்றி மக்கள் அதிகமாக கதைப்பதில்லை. காரணம் அதற்காக மக்கள் அதிக விலையை கொடுத்து விட்டனர். கொடுப்பதற்கு அவர்களிடம் ஒன்றும் இல்லை. தொடர்ச்சியான ஏமாற்றம் அவர்களிடம் தேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளது. இன்று யு9 பாதை திறக்கப்பட்டு அபிவிருத்தி பற்றி பேசுகின்றார்கள்.

அபிவிருத்தி யாருக்கு? அபிவிருத்தி, சொந்த மக்கள் வாழிடம் இன்றி நடை பிணங்களாக திரிகின்றனரே அவர்களுக்கான வேலைத்திட்டம் எதுவும் கிடையாது. உல்லாச விடுதி, பல்தேசிய கம்பனி, வானுயரக் கட்டடம், நீச்சல் தடாகம், இதுதான் அபிவிருத்தி பொருட்களை காட்சிப்படுத்த நல்ல சந்தையாக யாழ்ப்பாணத்தை தெரிவு செய்துள்ளனர் பினான்ஷி யல் நிறுவனங்கள் பல எண்ணிக்கையில் இங்கு முகாமிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தவர் கடனாளியாக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தை நோக்கி இன்று பலரும் படையெடுக்கின்றனர். ஆட்சியாளர்களிடம் வெற்றிக்களிப்பு தெரிகின்றது. சாதாரண சிங்கள உழைக்கும் மக்களிடம் மகிழ்ச்சி தெரிகின்றது. அவர்கள் தமிழ் மக்களோடு உறவாட விரும்புகின்றனர். அவர்களை அன்பாகவே இங்குள்ளவர் உபசரிக்கின்றனர். இனங்களுக்கிடையில் ஒற்றுமை பற்றி பேசிக் கொண்டு இவர்களுக்கிடையில் பதற்ற நிலைமை தோற்றுவிக்கவும் அரசு இயந்திரம் சில சம்பவங்களை திட்டமிட்டு அரங்கேற்றியுள்ளது. 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறார்களாம்.

தோழர்களே, உலகை இடையறாது கண்டு பிடிப்பதுதான் வாழ்க்கை நாங்கள் வாழப்பிறந்தவர்கள் அல்ல மக்கள் துயர் கண்டு பயணிக்க புறப்பட்டவர்கள். இதுவெறும் உணர்ச்சி பெருக்கல்ல உண்மை பெருக்கு இலங்கை உலக உழைக்கும் மக்களோடு பயணிக்க புறப்படுவோம். இது ஆரம்பமும் அல்ல முடிவும் அல்ல தொடர்ச்சி எங்கள் தோழர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்பயணத்தை தொடங்கி விட்டார்கள் கம்யூனிச உலகை அடைவதற்காக.

எமக்கிடையே காலத்துக்கு காலம் பல் வேறு ஆட்சியாளர்களும் (உள்ளூர் ஆட்சியாளர் உட்பட) பகைமையையும் எதிரான மனப்பாங்கையும் வளர்த்து வந்துள்ளனர். இதனால் பிரதேச பாகுபாடு தோட்டக் காட்டான், யாழ்ப்பாணத்தான் என்ற அநாகரிக சொல்லாடலும் செயலும் உருவாக்கப்பட்டது. இது சிங்கள, முஸ்லிம் மக்களையும் அந்நியப்பட வைத்தது. இவர்களுக்கு ஒன்று தெரிய வேண்டும் வடபகுதி தமிழர்களுக்கு அடிவிழும் போதெல்லாம் மலையகத் தமிழர்கள் அழுதார்கள் இந்த அடி அவர்கள் முதுகிலும் பட்டது.

இரண்டு தவளைகளை ஆய்வாள்ன் தனது ஆய்வுக்காக எடுத்துக் கொண்டான் அதனை அதனது வாழிடத்தில் இருந்து எடுத்து வந்து ஒன்றை சுடு நீரிலும், இன்னொன்றை குளிநீரிலும் விட்டபோது சுடுநீரில் விடப்பட்ட தவளை தனது எதிர்ப்பைக் காட்டி உடனே மேலே வந்து விடுகின்றது. குளிநீர் படிப்படியாக சூடாக்கப்பட்டது. தொடர்ந்தும் சகிக்கின்ற சூடு அதிகமானது. அந்தோ தவளை மரணித்துப் போனது. இரண்டாவது தவளையின் நிலைமைதான் இன்று எமக்கு. எமது சொந்த வாழிடத்தில் விரட்டப்பட்டு மாயக்கனவுகளோடு மக்கள் வாழவைக்கப்படுகின்றனர் மேல் கொத்மலை திட்டமென சம்பூர் அனல் மின் திட்டமென எல்லா திட்டங்களும் எம்மக்கள் மீது பரீட்சிக்கப்படும். எதிர்ப்பு குரல்கள் மௌனிக்க செய்யப்படுகின்றது. இதனை தகர்க்க சாத்தியமான வழி வகைகள் பற்றி சிந்திக்க வேண்டும் சரியான தலைமையை இனங்காண வேண்டும்.

*ஆளில்லா வேலியென்று அடர*
*மிரி (தி)க்கினமே*
*முள்ளிலா வேலியென்று முறிய*
*மிரி (தி)க்கினமே ...*

இது இங்கு நெடுந்தீவுப் பகுதியில் பாடப்படும் ஒப்பாரிப் பாடலில் கணவன் இல்லாத பெண்படும் துன்பத்தை காட்டுகின்றது. அது போலத்தான் மக்கள் சரியான வழிகாட்டுதற்குரிய தலைமை இல்லாமல் தலைமை எனக் கூறியவர்களினால் பிழையாக வழிநடத்தப்பட்டதனால் உண்டான வேதனை இழப்புக்களினால் துன்பப்படுகின்றனர் இதற்கு சரியான தலைமை பாட்டாளி வர்க்க தலைமை தான் என்று சிந்திக்க தொடங்கி விட்டனர் இலங்கை உழைக்கும் மக்கள் ஒன்றுபட்டு இனரீதியான முரண்பாடுகளுக்கு தாங்களே தீர்வுகாண வேண்டும்.

*பொழுதும் எறங்கிருச்சி*
*பூ மரமும் சாஞ்சிருச்சி*
*இன்னமும் இரங்கலையோ*
*எசமானே ஓங்கமனம்*

இது மலையக நாட்டார் பாடல் எசமான் தொடர்ச்சியா வேலை வாங்கிறான் நேரத்துக்கு வீட்ட போகணும் முடியேல எசமான்களின் மனம் எமக்காக இரங்காது, எமை மதிக்காது எமைமதிக்க புரட்சியாளர்களே ஒத்துழையுங்கள்.

எப்படி சாத்தியமாக்குவது?

**1) தள்ளிப்போடுதல்**

எப்படி?... எப்படி..? முடியுமென்று காலத்தை வீணாக்காது எந்தச் செயலையும் காலம் தாழ்த்தாமல் செய்து முடிப்போம். எமக்கு எதிராக பிரயோகிக்கப்படும் அனைத்து அடக்கு முறைகளுக்கு எதிராகவும் செயலை முன்னிறுத்துவோம். (குரலை அல்ல) எமக்குரிய காலம் சொற்பமானது.

**2) செய்யாமல் இருப்பதை நியாயப்படுத்த வேண்டாம்**

அவர்கள் மோசமானவர்கள். எங்களிடம் நிதியில்லை, ஆட்பலம் இல்லை நேரமில்லை. இது நாங்கள் கூறும் நியாயங்கள் இதற்கு காரணம் எமது மனதில் வேரூன்றிப் போன எதிர்மறையான சிந்தனைகள் இதனை விடுத்து உடன்பாடு சிந்தனைகளை வளர்க்கும் போது பலம் பலம் பெறும் பலவீனங்கள் குறைக்கப்படும்.

3) நாங்கள் செய்கின்ற சிறு சிறு செயல்கள் காலப்போக்கில் பெரிய பயன்களை அளிக்க முடியும் அந்த எதிர்கால நம்பிக்கையோடு செயற்பட வேண்டும் இதற்காக குறுங்கால, நீண்டகால திட்டங்களை வகுத்து அதனை அமுல்படுத்தல் அவசியம்

சமூக அக்கறையற்றவர்களாக இருந்து கொண்டு சாதியின் பெயராலும், பணத்தின் பெயராலும், பிரதேசத்தின் பெயராலும் ஆட்சியின் பெயராலும் பலம் தேட முனைபவர்கள் ஒரு நோயாளிகள் அவர்களைக் குணப்படுத்த வேண்டிய பொறுப்பும் எமக்கே உண்டு.

இது என் தவறு அல்ல என்று நாம் தட்டிக்கழித்து விட முடியாது. குழந்தை தரையில் தடக்கி விழுந்தாலும், அல்லது கதிரையில் அடிபட்டாலும் தாய் "என் பிள்ளையை ஏன் அடிச்ச என்று கதிரைக்குத் தான் அடிகொடுப்பால் அப்பொழுதே தட்டிக்கழிக்கும் உபாயத்தை குழந்தை கற்றுக் கொண்டு விடுகின்றது. அது போலத்தான் இப்பொழுதும் எமது தவறு அல்ல என்று ஒதுங்கி விடுகின்றோம். வல்லவர்கள் மௌனமாக இருப்பதுதான் மோசமானது.

மலையக தோழர்களே, இளைஞர்களே, உங்களோடு இணைந்து செயலாற்ற எமது தோழ்ர்களும் இளைஞர்களும் காத்து நிற்கின்றனர் வடபகுதிக்கு புறப்பட்டு வாருங்கள் ஏனெனில் நாம் தேசங்களினால் பிரிக்கப்படாதவர்கள் நாங்கள் தயாராகி விட்டோம் அசாத்தியமானதை சாத்தியமாக்க.

**தோழமையுடன்**

**செங்களரி**

விமர்சனம் என்பது உலகை
விபரிப்பது மாத்திமன்றி அது உலகத்தை
மாற்றியமைப்பதற்கும் அழைக்கும்
வர்க்கமும் அதன் நேச சக்திகளும் ஓயாது
பயன்படுத்தும் அறிவாயுதமாகவும்
இருத்தல் வேண்டும்.

- கைலாசபதி -

# உன் வழியில்

மூனிடன் வித்தியாசமானவன்...
வெள்ளையன் கருப்பன்
அறிஞன் மோடன் இனவாதி
மதவாதி
தேசிய வாதி...
தேளிந்தவன் தெளிவில்லாதவன்
ஏழை பணக்காரன்
இன்னும் இன்னும்
இன்னும் இன்னும் !

ஒருவருக் கொருவர் பகையுடனும்
உள்ளத் தூசுடனும்
இன்னார் நாமென வாழ்ந்திட....
வையகத்துள் குதித்தோரே
கனப் பொழுதிலும்
மானிடராய் வாழ விளைந்தாய் !

தோழா நீர்...
உம் வாழ்க்கை காலம் முழுதும்
எமக்கு ஈந்தவை ஏராளம் !

மக்களிடம் கற்றுக்கொள்
மக்களுக்கு திருப்பி கொடு
உயர் சிந்தனை கொள்
உரிமைக்காய் போராடு
இலக்கினை எல்லை இடு
இலட்சியத்தால் மேலெழு
வாழ்க்கை சிறந்தது
வையத்துள் தலைமைக் கொள்
இடைவிடாது தொழிற்படு
எம் வெற்றி மிக தூரம்

மூளை இயங்கும் வரை பாணியாற்று
இன்னும் இன்னும்....!

மனிதராய் வாழ்ந்திட
தோழர்களை ஏற்றாய்
தோழர்களோடு வாழ்ந்தாய்!

நீ யின்றியும் நும் மக்கள்
உன் வழியில்...........!

– சுகே –

# மலையக மக்கள் ஒரு தேசிய இனம்

**சி.கா.செந்திவேல்**
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி

இலங்கையின் நான்கு தேசிய இனங்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் மலையகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக இருந்து வருகின்றனர். இத்தேசிய இன வரையறுப்பானது மலையக மக்களின் வரலாறு, வாழ்விடம், மொழி, பண்பாடு, பொருளாதார உழைப்பு போன்றவற்றால் உறுதிப்பாடடைகின்றது. சுமார் இருநூறு வருட காலத்தின் சிதைவுறாத மலையகத் தமிழ் மக்களின் இன, மொழி, பண்பாட்டுத் தனித்துவத்தையும் அதன் வளர்ச்சியான தேசிய இனம் என்பதையும் இலங்கையின் ஆளும் வர்க்கப் பேரினவாத முதலாளித்துவ சக்திகள் ஏற்று அங்கீகரிக்க மறுத்து வரும் நிலை நீடிக்கிறது. இதனை எதிர்த்து தேசிய இன அங்கீகாரத்திற்குக் குரல் கொடுக்க வேண்டிய மலையக தொழிற்சங்க - பாராளுமன்ற அரசியல் ஆதிக்கத் தலைமைகள் கூட தொடர்ந்து அதுபற்றி மௌனம் காப்பவர்களாகவே இருந்து வருகின்றனர். அவர்கள் கேட்பதும் பெறுவதும் அனுபவிப்பதும் தமக்கான பதவிகள் சலுகைகள் சொத்து சுக விடயங்களாகவே அமைந்து கொள்கின்றன. இவற்றுக்கு அப்பால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஆட்பட்டிருக்கக் கூடிய தமிழ்த்தேசியவாதம், முஸ்லீம் தேசியவாதம் பேசுவோரும் கூட மலையகத் தமிழ்த்தேசிய இனத்தின் தனித்துவத்தை ஏற்று அவர்களது அடிப்படை உரிமைகளுக்கான சுயாட்சிக் கோரிக்கைகளை வற்புறுத்துவதாக இல்லை என்பதும் கவனத்திற்குரியதாகும். இவ்வாறு அவர்கள் காண்பது குறுகிய தேசியவாதப் பார்வையின் வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை. இது மலையகத்தில் இல்லை என்றும் கூறிவிட முடியாது. இது ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் ஒன்றை ஒன்று ஆதரித்து நிற்க வேண்டியதன் அவசியத்தை உணர மறுப்பதாகும். இந்நிலையில் மாக்சிச லெனினிச வாதிகளும் பிற ஜனநாயக முற்போக்கு சக்திகளும் மட்டுமே மலையகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக வளர்ச்சி பெற்றுள்ள யதார்த்தத்தை ஏற்கின்றனர். அதன் மூலம் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இலங்கையினதும் மலையகத்தினதும் விஷேட சூழலுக்குரிய சுயாட்சி மூலமான அரசியல் தீர்வை வற்புறுத்தி நிற்கின்றனர்.

இவ்வாறு மலையகத்தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவத்தை முன்னிறுத்துகின்ற போது அங்கு காணப்படும் பின்தங்கிய சமூகச் சூழலின் கூறுகளை மறுதலிக்க முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இத்தகைய கூறுகளைச் சுட்டிக் காட்டி நிற்கும் சிலர் மலையக மக்களை ஒரு தேசிய இனமாகக் கொள்ள முடியாது என விவாதித்துக் கொள்ள முற்படுகின்றனர். அத்தகையோர் தேசிய இனம் பற்றிய பழைய வரையறைகளை வெறுமனே புத்தகவாத நிலை நின்று நோக்குபவர்களாகவே உள்ளனர். இன்னும் சிலர் மலையக மக்கள் தேசிய இனத்துக்கான அந்தஸ்து நிலை கோருவது மிகையான ஒன்று என்றும் அது மலையகத்தின் சூழலுக்குப் பொருத்தமற்றது என்றும் வாதிடச் செய்கிறார்கள். இது ஒருவகைத் தாழ்வுச் சிக்கல் மிக்க சமூகக் கண்ணோட்டமாகும். அல்லது ஆளும் பேரினவாத முதலாளித்துவ சக்திகளைப் பகைக்காது என்றென்றும் அவர்களது தயவில் சலுகை பெற்று தங்கி வாழும் போக்குடையதுமாகும்.

மலையகத் தமிழ்த்தேசிய இனத்தின் தனித்துவம் என்பது அவர்களது வரலாறு வாழ்விடம் மொழி பண்பாடு என்பனவற்றால் மட்டுமன்றி வர்க்க ரீதியான உழைப்புச் சுரண்டலாலும் குறிப்பாகப் பெண்கள் உழைப்பில் ஈடுபடுவதாலும் முக்கியத்துவம் பெறுகிறது. இங்கே கூலி அடிமைத்தனத்தின் அப்பட்டமான தன்மையினைக் காண முடிகிறது. அதன் காரணமாகவே அவர்களது பொருளாதாரம், நில, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியானது பின் தங்கியுள்ள நிலையில் காணப்படுகிறது. அவர்களுக்கு வரையறுக்கப்படும் சம்பளம் என்பது எப்போதும் இலங்கை முழுவதிலும் உள்ள சம்பளங்களில் ஆகக் குறைவானவையாக இருந்து வருவதை அவதானிக்கலாம். இத்தகைய ஆழமான சம்பளப் பொறிக்கிடங்கில் இருந்து அன்றைய வெள்ளைத் துரைகளின் காலம் முதல் இன்றைய கறுந்துரைகளின் கீழ்வரை வெளிவரமுடியாத தொழிலாளர்களாகவே இருந்து வருகின்றனர். வறுமையும் அறியாமையும் மலையக மக்களைப் பீடித்த இரண்டு பிரதான பிரச்சினைகளாகும். அவற்றைக் கூறியே தொழிற்சங்க அரசியல் ஆதிக்கம் கொண்ட பாராளுமன்ற அரசியல் பூசாரிகள் வேடம் கொண்டு காலத்திற்குக் காலம் மலையக மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

மற்றொரு குறிப்பான விடயம் மலையக மக்கள் ஒரு பின்தங்கிய நிலையில் இருந்து வருகிறார்கள் என்பதை மறுப்பதற்கு வலிந்த நியாயங்களைத் தேடும் புத்திஜீவிகள் அவ்வப்போது கருத்துரைத்து வருவதையும் காணமுடிகிறது. இது விதிவிலக்கானவற்றைக் காட்டி ஒட்டுமொத்த நிலையை மறுப்பதாகும். உதாரணமாகப் பொருளாதாரம் பின்தங்கிய நிலையை மறுத்து அங்கே வர்த்தகர்கள் வியாபாரிகள் வேறு முதலீட்டு முயற்சிகளைச் செய்வோரைப் பாருங்கள் என்று காட்டுகிறார்கள். கல்வியில் பின்தங்கிய நிலை என்று கூறுவதை மறுத்து இன்று எத்தனை வைத்திய கலாநிதிகள், சட்டத்தரணிகள், பொறியிலாளர்கள், உயர் அரச அதிகாரிகள், உயர்கல்வியாளர்கள், ஆசிரியர்கள் என இலக்க எண்ணிக்கை தர முன் நிற்கிறார்கள். இவ்வாறே கலை இலக்கியத் தளத்திலும் பெரு முன்னேற்றம் கண்டிருப்பதாகக் கணக்குக் காட்டுவார்கள். இவை அனைத்தையும் முழு மலையக மக்களின் ஒட்டுமொத்த வாழ்வோடும் வளர்ச்சியோடும் வைத்து நோக்கும் போது தான் உண்மையும் யதார்த்தமும் துலக்கமடையும். சமூகத்தின் மேன்நிலையாக்க கண்ணோட்டத்திற்கும் மக்கள் சார்பு நிலைப்பாட்டிற்கும் இடையில் பலத்த இடைவெளி இருப்பதைப் பலர் மறந்து விடுகின்றனர். தனி நபர் ஈடேற்றம் அல்லது முன்னேற்றம் அதற்கான முயற்சி என்பன சமூகம் சார்ந்த ஒன்றல்ல. யார் யாரை அவ்வப்போது பயன்படுத்தி எனது அல்லது எமது குடும்பம் என்பதை ஈடேற்றிக் கொள்ளும் அல்லது ஏணியாக்கிக் கொள்ளும் அடிப்படைக் கண்ணோட்டம் என்பது அப்பட்டமான சுய நலமேயாகும். அத்தகையவர்கள் தமக்கான வளர்ச்சி வந்ததும் தமக்கு உதவியவர்களை அல்லது அமைப்புகளை நிராகரித்து அல்லது தாம் ஏறி வந்த ஏணிகளையே தள்ளி வீழ்த்தி விட்டு மேலும் முன்னேற்றங்கள் எனும் பாதையில் மேன் நிலையாக்கத்தை நோக்கிச் செல்லும் போக்கை பல சந்தர்ப்பங்களில் காணக் கிடைத்தது. அத்தகையவர்கள் தான் மலையக மக்கள் பின்தங்கியவர்கள் அல்லர் என வாதிட்டு வருபவர்கள் ஆவர்.

இத்தகைய மேன்நிலையாகக் போக்கிற்கு வலுச் சேர்ப்பதாகவே இன்றைய பூகோளமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கான கருத்தியல் பரப்புரைகளும் இடம்பெற்று வருகின்றன. இவை முதலாளித்துவ தனிநபர் வாதத்தின் தொடர்ச்சியே அன்றி வேறு எதுவுமில்லை. இவ்வாறான தனிநபர் முயற்சி அல்லது முன்னேற்றம் என்பது எதிர்ப்பதற்குரிய ஒன்றல்ல. ஆனால்

**அதனை சமூக மாற்றத்திற்கான கருத்துக்களை நிராகரிப்பதற்குரிய ஒரு அடிப்படையாகக் காட்டுவதே தவறு என்று சுட்டிக் காட்டடுகிறோம்.**

**ஆதலால் மலையகத்தமிழ் மக்கள் தனித்துவமான ஒரு தேசிய இனம் என்பதும் அதன் மத்தியில் பின்தங்கிய சமூகச் சூழல் நீடித்து வருகின்றமையும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட நிலை அல்ல. ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படும் உண்மையும் யதார்த்தமும் ஆகும். இவை இரண்டையும் அங்கீகரித்து சமூக மாற்றத்தை நோக்கிச் செயற்படும் அவசியமே மலையகத்தின் இன்றைய தேவையாக உள்ளது.**

இவ்வாறு மலையகத் தமிழ்த் தேசிய இனமானது வர்க்க, இன, சாதிய, பால் நிலைகளில் எவ்வாறு ஒடுக்குமுறைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் பண்பாட்டின் பழைமைவாதப் பிடிப்பிலும் உழன்று வரும் சமூகச் சூழலில் வெடிப்புகளையும் உடைப்புகளையும் ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் மறைந்த எமது அன்பிற்கும் தோழமைக்கும் உரிய தோழர் நாராயணன் ஒரு முன்னுதாரணமான தோழராக வாழ்ந்தார். அதுமட்டுமன்றி தனது குடும்பத்தையும் அவ்வாழ்வு முறைக்கு உட்படுத்திச் சென்றார் என்பது தான் சிறப்பாகும். அவரது முதல் மாத நினைவு நாளில் வெளிவரும் சிறப்பு மலரில் மேற்படி கருத்துரைப்பது முற்றிலும் பெருத்தமுடையதாகும் என நம்புகிறோம்.

# நாராயண காவியம்

ஆசை நாயகியின் வேண்டுதலில்
தான் கொடுத்த வரத்தின் தூண்டுதலில்
மூத்த மகன் வனவாசமுற்றான் எனக் கேட்ட
பெத்த பிள்ளையின் பாசத்தால் தந்தையவன்
செத்தான் பிரிவுத் துயர் சோகத்தால் எனின்
சில்லறை விஷயமா என்ன,
காவியம் ஆனது. கம்பனின் கைவண்ணத்தில் தமிழ்க்
காப்பியம் மலர்ந்தது.

காப்பியக் கடலில் மூழ்கி முத்தெடுத்து
மாலை தொடுத்து அன்றாடம் அலசும் வாழ்வாய்
தமிழர் வாழ்வு ஆச்சுதெனில்
எங்கள் நாராயணன் நாவலப்பிட்டி மைலாடிக்கிராமத்தில்
மலையுச்சித் தாழ்வாரத்தில் தடுக்கிவிழும்
பாறைத் தடத்தில் பாதையென்ற பேரில்
கற்கள் குத்தி நிற்கும் தார் போடாத் தெருவில்
குடும்பமாய் வனவாசம் வாழ்ந்த
நாராயணன் வாழ்வுக்காய் காவியம் பாட
யாருள்ளார் இம்மணஸிணில?

கொழும்பு எனின் நாராயணன்
மலையக மாணவர் கல்விக்கென
கொழும்பு வரின் நாராயணன்
தோழரைக் காணவெனில் நாராயணன்
தோள் கொடுக்க வேண்டுமெனில் நாராயணன்
முப்பது ஆண்டுகள் முன்பிருந்தே
முழுமையாய் எங்கள் நினைவுகளில் நாராயணன்

சிரித்த முகமும் சிவந்த மேனியின்
சீரிளமைத் திறனும்
வியத்தகு வேள்வியில் வாய்ந்த எங்கள் நாராயணன்

கொழும்பு மாநாகர் விட்டு மைலாடிக் கிராமத்தின்
மலைமுகடுகளைத் தொட்டு தவழ்ந்து நின்று
றோசல்ல வந்தார் திரிந்தார் வென்றார்
மாசற்ற மக்களின் மனங்களைக் கவர்ந்தார்

நாசத்தை போக்கி வேசத்தை விளக்கி மலையகத்
தேசத்தை காக்க தோழராய் துணிந்தார்
நூல்களைப் பெற்றார் நூலகம் சமைத்தார்
நல்லோரை கூட்டி விழாவென்றெடுத்தார்
விருந்தெல்லாம் வைத்தார்

மண்ணிலந்த சோகம் மனைவி பிரிந்த காலம்
மகன் வெளிக்கடை வாசம் மகாராசன்
மனதை அரித்தது
மலையக வேலை அதிகரித்தது

நாரதராக ராமணை வருமென்றாய்
நாராயண நாராயண நாமம் உச்சரித்தால்
கலகங்கள் மூழும் துலங்கும் ஒரு நிதி
மலையகம் மனக்களுகாகும்
தலைமை தொழிலார் வசமாகும்
நாராயணன் சிரிப்பில் இரணியர்கள் நீறாவர்
தரணியில் தேயிலை தொழிலாளர் உயர்வர்
கவ்வாத்து கத்திகள் கவிதைகள் பாடும்
யாரினி வரினும் பாரனி மாறும்
ஊரெலாம் ஒன்றாய் உலகினை ஆளும்
தோழராய் வாழும் துணிவினை பெறுவோம்

நாராயண காவியம் படைப்போம்
காரியம் ஆற்றியே
கவலைகள் மறப்போம் !

சோ.தேவராஜா

# நன்றியுரை

இன்று உலக மயமாக்கல் திணித்துக் கொண்டிருக்கும் தனிமனித ஈடேற்றம் நோக்கி எல்லோரும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். மனித பண்பாடு கலாசாரம் மிக மோசமாக சீரழிக்கப்பட்டு வருகிறது. மனித வாழ்வுக்கான சூழல் சிதைக்கப்பட்டு எதிர்கால வாழ்வே கேள்வி குறியாகி நிற்கிறது. இவ்வாறான சூழ் நிலையில் சமூக விடுதலைக்காக போராடுபவர்கள் இருக்கவே செய்கிறார்கள். அந்த வகையில் "ஒருவர் பலருக்காக பலர் ஒருவருக்காக" என்ற வாழ்வியல் கோலத்தை தனதாக்கிக் கொண்டு வாழ்ந்து மறைந்த தோழர் நாராயணனின் இழப்பு ஈடு செய்ய முடியாது.

அவரின் இறுதி நிகழ்வில் கலந்துக் கொண்டு பல்வேறு உதவிகளையும் நல்கிய ஊர் மக்கள் உறவினர்கள்இ தோழர்கள் நண்பர்கள் அனைவருக்கும், இறுதி நிகழ்வில் கலந்துக் கொள்ள முடியாமல் தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் மூலமாகவும் அனுதாபத்தை குடும்பத்தவர்களுக்கு தெரிவித்தவர்களுக்கும் மயிலாடி கிராமம் மற்றும் அதனைச் சூழவுள்ள பொது மக்களுக்கும் பெயர் குறிப்பிடாத நண்பர்களுக்கும் இவ்வேளையில் குடும்பம் சார்பாகவும் நினைவுக் குழு சார்பாகவும் நன்றியை தெரிவிக்கிறோம்.

தோழர் நாராயணனின் 31ஆம் நாள் நினைவாக வெளிவரும் மலைகளை வென்றமானுடம் நினைவுமலருக்கு ஆக்கங்களை தந்துதவிய அனைவருக்கும் இன்னும் இந்நூல் அச்சேறுவதற்கு உழைத்த தோழர்களுக்கும் இதனை நூலுருவாக்கித் தந்த இராகலை அம்ருதா அச்சக உரிமையாளர் நண்பர் இரா.நாகராஜா அவர்களுக்கும், ஊழியர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளை பகிர்கின்றோம்.

அத்தோடு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் தலைமைத் தோழர்களுக்கும் உறுப்பினர்கள், ஆதரவாளர்களுக்கும் நாம் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**நினைவுகுழு**

# ஐயா...!

பேசிப்பகிர நிறைய இருந்தாலும்
பார்த்ததும் பேசமுடியாதளவிற்கு
உணர்ச்சிவசமான கணமது

■ ■

கம்பிகளூடாய் கண்டதும்
கண்களை முட்டி வெளிவரத் துடிக்கும்
கண்ணீர் உருண்டைகளை
கஸ்டப்பட்டு கட்டுப்படுத்துகிறேன்
தூரத்திலிருந்து வந்திருக்கும் உன்னை
அதைரியப்படுத்த தைரியமில்லாததால்

■ ■

உன் நம்பிக்கைப் பிழம்புகளால்
ஒளிப்பெற்ற
அந்த அறையின்
சந்தடிகளை நீக்கிவிட்டு
இருவரது வார்த்தைகளையும்
புடம் போட்டு உள்வாங்கிக்
கொள்கின்றன செவிகள்

■ ■

எதை கதைப்பதென்ற
தடுமாற்றம் கடைசிவரைக்கும்
இருவருக்கும்
இறுதியில் போகட்டுமா?
என்றாய்
சரி என்றேன்
ஏன் தான் பிரியாமல்
நின்று கொண்டிருந்தோம்?

■ ■

மௌனமாய்
கழித்த கடைசி நிமிடங்களில்
கண்கள் பகிர்ந்து கொண்ட
கனவுகள் ஏராளம்

■ ■

விடைப்பெறவேண்டிய கணத்தில்
என்னைப்பார்த்தப்படி
சிரித்து நிற்கிறாய்
பாடசாலைக்குச் சென்ற முதல் நாளில்
நீ இருக்கிறாயா என
நிச்சயப்படுத்திக்கொள்ள
திரும்பி திரும்பி
உன்னைப் பார்த்தவாறு
சென்றதைப் போல
சிறைக்கூட்டை நோக்கி
நடக்கிறேன்...

ராஜன்
18-09-2008
(கொழும்பு விளக்க மறியலிலிருந்தபோது)